சித்திரன்

2 7

பிப்ரவரி, 1926

JL
15m2,N24
N26.2.7.
190375

சகோதரி வி. பாலம்மாளின் தமிழ் பிரசுரங்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

ஆசார சீர்திருத்தத்தில் உண்மையான தேவைகளை எடுத்துரைக்கும் நாவல். Cr. 8vo. 64 பக்கம். விலை அணு 5

Brings out the value of harmony in domestic affairs, and indicates the right sort of relation that ought to subsist among the members of a family—the sort of relation that would conduce most to domestic happiness. Being written in simple style, it can be read with advantage by youngsters of both sexes.—*Madras Mail.* (25-3-19).

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

இது இந்தியக் கைத்தொழில் விசாரணைச் சங்கத்தின் அறிக்கையில் கனம் பண்டித மதன்மோஹன மாளவியா அவர்களின் தனிக் குறிப்பின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். திவான் பகதூர் T. ரங்காசாரியார், C. I. E. BA., B.L. அவர்கள் எழுதிய முன்னுரையுடன் கூடியது. Cr. 8vo. 216 பக்கம். விலை ரூ. 1.

The aim of the a[illegible]oress is to bring home to the masses of the people the gravity of the questions discussed in the report of thendustries Commission, and in particular of the points raised in the note of dissent by the hon'ble Pundit. The work of translating official documents into the vernaculars is obviously a very difficult and troublesome one, but Sister Balammal's scholarship in Tamil has enabled her to get over the difficulties and give in chaste and intelligible Tamil an excellent translation of the original. Those interested in the indus:rial regeneration of the country will read the booklet with profit.—*Madras Mail.* (25-3-19).

ராஜசேவையும் இந்தியரும்.

இது இந்திய பப்ளிக் ஸெர்ஸ் கமிஷனில் மெம்பராயிருந்த கனம் ஜஸ்டிஸ் அப்துர் ரஹீமின் மறுப்புரையின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். "ஹிந்து" பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் S. கஸ்தூரிரங்க அய்யங்கார், B.A., B.L. அவர்கள் முன்னுரையுடன் கூடியது. Demy 8vo. 210 பக்கம். ரூ. 2.

திராவிடப் பத்திரிகை.—7-11-1917.

இந்தியாவின் ராஜரீக விஷயங்களில் ஸ்திரீகள் மிகுதியும் அக்கரை யெடுத்துக் கொள்வதில்லை என்பது சில வருஷங்கள் வரையில் வாஸ்தவமே. சில வருஷங்களாக அம்முறை மாறிவிட்டது. இப்பொழுது இந்திய ஸ்திரீகள் புருஷர்கள்போல இந்திய ராஜரீக விஷயங்களில் மிகுதியும் உழைத்து வருகின்றார்களென்பது மிஸிஸ் சரோஜினி நாயுடு, ஸகோதரி வி. பாலம்மாள் முதலியவர்களின் ஊக்கத்திலிருந்தே வெளிவரும். இந்தியாவிச் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டிய சமயத்தில் ஆங்கில மறியாதவர் உதவியற்றவர்களாயிருந்திருப்பார்கள். சமயத் திற்கேற்க நமது முன்னேற்றத்தை முழுதும் கோரி, பப்ளிக் ஸர்விஸ் கமிஷனில் மெஜாரிடியாரின் தீர்மானங் களுக்கு மாறாகத் தமதுசொந்த அபிப்பிராயங்களை வரைந்துள்ள கனம் அப்துர் ரஹீமின் மறுப்புறையைத் தமிழில் மொழி பெயர்த்தது இந்திய சேவகத்தில் மிகவும் கண்ணியம் பொருந்திய ஒரு செய்கையாகும். இப்புத்தகம் உலவ ஆரம்பித்தவுடன் இந்திய ஸ்வராஜ்ய விரோதிகள் ஆங்கிலம் படியாத கிராமத்தார்களை வீண் மிரட்டல் களுக்கு உள்ளாக்கமுடியாது. இந்தியக் குடிகளின் ஒத்துழைக்கும் தன்மையை மிகுதியும் விருத்திசெய்யக் கூடிய இவ்வருமைப் புத்தகத்தை இக்காகிதக் கிராக்கியில் துணிந்து வெளியிடவந்த சகோதரி பாலம்மாளின் முயற்சி இந்தியாவிற்கு மிகுந்த பலனைக் கொடுக்கும் என்று நாம் நம்புகிறோம். ஒரு முறை இதைப் படித்த வர்களுக்கு இந்திய ராஜாங்கத்தில் உள்ள குறை முறைகளெல்லாம் வெளிப்படையாய் தெரியவரும்.

சுபோத ராமசரிதம்.

ராமாயணக் கதையை எளிய ஸமஸ்கிருத ஸ்லோக ரூபமாய் எழுதப்பட்டது. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. அணு 6.

சகோதரி வி. பாலம்மாள், சிந்தாமணி பத்திராதிபர் மயிலாப்பூர், சென்னை.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani.'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—19 6.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபணையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ரகுவீரனுடைய மகிமையை "ஸம்போதர்ம சரிதம்" என்னும் ராமாயண காதரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறேனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

☞ எமது ஏஜண்டு:—ஏ. வி. அண்டு சன்ஸ், ஆவிச்சி செட்டியார் அவர்கள், காரைக்குடி.

பரிமள ஓடை! நறுமண மேடை!! வாசனை வாடை!!

இவை யாவும் ஒருங்கே அமைந்த

சுகந்தச் சோலை

எது?

தங்கமெடல் பரிசுபெற்ற கும்பகோணம்

K. அப்துல் ரஹிமான் சாஹிப் & ஸன்ஸ்

பரிமளச்சாலையே. அங்கு என்ன கிடைக்கும்?

1.	காந்திகண்ட சந்தனுதியாம்	9.	தேஷ்பாண்டே மெச்சிய கேசர் பவுடர்
2.	அரவிந்தர் ஆண்ட அரைக்கீரைத் தைலம்	10.	படேல் பார்த்த பஞ்சவர்ணக் கொப்பரை
3.	தாஸர் போற்றிய சந்தன வில்லைகள்	11.	பண்டித நேரு பரிமளப் பாக்கு
4.	முகம்மதலி விரும்பும் பத்தி தினுசுகள்	12.	ஷௌகத் அலியின் சரிமணச் சுண்ணம்
5.	அந்தணர் மாளவியா அகமகிழ் தசாங்கம்	13.	பெஸண்டு புகழும் பில்லை தினுசுகள்
6.	லஜபதி களித்திடும் அம்பர் அரகஜா	14.	கிச்சிலு கோரிய நற்குண குல்கந்து
7.	சரோஜினி சாற்றிடு ஸ்நானப்பவுடர்	15.	கெல்கார் விரும்பிய உயர்தரப் பற்பொடி
8.	ஜவாரிலால் புகலும் புனுகு ஜவ்வாது	16.	காங்கிரஸே களித்த நறுமணக் கலவை

காங்கிரஸ் மகாசபையார் கண்டு களித்தது.

ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன்! கேட்லாக் இனாம்!! இன்றே எழுதுங்கள்!!!

K. Abdul Rahiman Sahib & Sons,

ATTAR MERCHANTS, KUMBAKONAM.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற

பி. சுப்பராயின் அபூர்வ ஔஷதங்கள்.

1. லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்.—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால், எப்பேர்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அனேக மணி நேரம் சுகந்த வாசனையைத்தரும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி மந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினுண்டாகும் வயற்றிழிவு, வயற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்ட நாடாது. ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக் கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனைத் திரவியங்களும் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறது. அரைக் குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும், தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச் சாற்றில் கொடுக்க சுகமாகும். டப்பா 1க்கு விலை அணா 4, இந்தியாவில் 1 முதல் 12 டப்பாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, வி. பி., தபால் சார்ஜ் அணா 8 பிரத்தியேகம்.

☞ பி. சுப்பராய்,

ஆயுள்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்.

சிந்தாமணியைப் பற்றிய சில அபிப்பிராயங்கள்.

I

அன்பார்ந்த அம்மா!

சிந்தாமணியில் தாங்கள் எழுதிவரும் தலையங்கங்களையும் சிறு கதைகளையும் படிக்குங்கால் மனதிற்குண்டாகும் சந்தோஷம் எழுதிமுடியாது. தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி தாங்கள் தற்சமயம் உழைக்க முன்வந்ததற்கு என் போன்றோர் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

II

சகோதரியே!

தற்காலம் உபயோகமற்ற பல புத்தகங்களைப் படித்து மனஞ்சலித்திருந்த சமயம் தங்கள் சிந்தாமணியைக் கண்டதிலிருந்து மனதிற்குப் புதிய உற்சாகமும் உணர்ச்சியும் உண்டாகின்றது. தங்களால் எழுதப்படும் கதைகளைப் படிப்பதிலிருந்து நமது சமூகத்தின் நிலைமையானது எதிர்காலத்தி மேன்மை யுற்றிருக்குமென்ற நம்பிக்கையுண்டாகின்றது.

III

அன்பார்ந்த அம்மணி!

சிந்தாமணி கைக்குக் கிடைத்ததும் வீட்டிள்ள அனைவரும் ஏககாலத்தில் படிக்க விரும்புகின்றனர். சிந்தாமணியைத் தபால்காரனிடமிருந்து வாங்கிக்கொள்வதில் ஏற்படும் போட்டியைக் கண்டு நான் சந்தோஷிப்பது வழக்கம்.

IV

அம்மையே!

சிந்தாமணியை நான் தொடர்ச்சியாகப் படித்துவருவதுடன் என் வீட்டிள்ள பெரியோர்களுக்கும் படித்துக் காட்டுவது வழக்கம். "புருஷோத்தமன் அல்லது புன் சிரிப்பு" என்ற கதையைப்படிக்கும்போது கதையின்முடிவுயாதாயிருக்குமென்று மனம்டைந்த தவிப்பை என்னென்று எழுதுவேன்! ஜனசமூக முன்னேற்றத்திற்கான வழியை யமைத்து அழகிய கட்டுரைகளைச் சிந்தாமணியில் வெளியிடுதல் போற்றத்தக்கது. சிந்தாமணி நீடுழி வாழ்வதாக!

V

பத்திராதிபரே!

சிந்தாமணியைக் கையிலெடுத்தால் முழுதும் படிக்கும் வரை கீழேவைக்க மனம் வருவதில்லை. அடுத்த சஞ்சிகைவரும் தினத்தை எதிர் பார்த்துத் தேதிகளை கவனிப்பதே எனக்கு வேலையாக விருக்கிறது.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஞு ஆகஸ்டுமீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்துகொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்துவிட்டன. 1925 பிப்பிரவரிமீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், சகோதரியாரால் எழுதப்பட்ட சில நவமணிபோன்ற சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் மூன்றும் இதழில் தோன்றியிருக்கும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. அவ்வாறு பிரதிகளும் தபால் சார்ஜ் உள்பட ரூபா2—8—0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மைலாப்பூர், சென்னை.

சிந்தாமணி யபிமானிகளுக்கு.

உள்நாட்டுச் சந்தாதாரில் சிலர் இதுவரை முதல் வருஷ சந்தாவை அனுப்பாமலும் இது விஷயமாகப் பல கடிதங்கள் கிடைத்தும் சற்றும் கவனியாது இருப்பதாலும் இண்டிமேஷன் பெற்றும் வி. பி. யைத் திருப்பி விடுவதாலும் ஏற்படும் நஷ்டமும் பத்திரிகையின் நிர்வாகத்தில் சிரமமும் ஏற்படுகின்றது. அயல் நாட்டிலுள்ள சந்தாதார்களுக்குக் கடிதமெழுதுவதற்கு அதிகச் செலவும் வி. பி. யனுப்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாமையுமாக இருப்பதால் இதுவரை யனுப்பாத அயல்நாட்டு சந்தாதார்கள் தாமதப்படுத்தாது தங்கள் சந்தாவை யனுப்பிவிடுவார்களௌன்று நம்பி யிருக்கிறேன். ஆகையால் உள்நாடு வெளிநாடு சந்தாதார் அனைவரும் தயவுசெய்து இனியும் சிறிதும் தாமதப்படுத்தாது தம் சந்தாவை மணியார்டர் செய்யவேண்டுமாயும் இதுவரை முதல் வருஷ சந்தாவையுமனுப்பாமலிருப்பவர்கள் அத்துடன் இரண்டாவது வருஷ சந்தாவையும் சேர்த்து அனுப்பினால் மெத்த சமயோபகாரமாயிருக்குமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கியைப்பற்றிக் கடிதமூலமும் பத்திரிகையில் அறிக்கைகள் மூலமும் பிரஸ்தாபிக்கவேண்டிய சிரமத்தை 'சிந்தாணி' யபிமானிகள் இனிமேலாயினும் எனக்கு ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கி, பலகடிதங்கள் எழுதுதல், அனுப்பும் வி. பி. திரும்பி வருவது இவைகளினால் எனக்கேற்படக்கூடிய வீண் சிரமத்தையும் பெருத்த நஷ்டத்தையும் இனியேனும் எனக்கு ஏற்படுத்தாமல் மறு தபாலில் சந்தாவை மணியார்டர் செய்து சிந்தாமணி செவ்வனே நடை பெறுவதற்கு உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,
சகோதரி வி. பாலம்மாள்.

சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகை.

பத்திராதிபர்: P. E முதலியார்,

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,

31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

விவேகபாநு.

தென்னாப்பிரிகாவில் வசிக்கும் தமிழ் மக்களின் முன்னேற்றங்கருதி வெளிவரும் தமிழ் வாரப்பத்திரிகை. இதில் அரசியல், மதாசாரம் முதலிய விஷயங்களும் தென்னாப்பிரிகாவில் நடைபெறும் விஷயங்கள் முழுதும் வெளியிடப்படுகின்றன. தூரதேசத்திலிருக்கும் சகோதரர்களின் க்ஷேமலாபங்களை விவரமாகத் தெரிவித்துவரும் விவேகபாநுவை ஒவ்வொரு இந்தியரும் வரவழைத்துப் படித்தல் கடமையாகும். ஒருவருஷ சந்தா 15 ஷில்லிங். இந்தியா, சிலோன், மோரேஷஸ், பினங்கு, சிங்கப்பூர், ரோடேசியா முதலிய இடங்களுக்கு 17 ஷில்லிங்.

விலாசம்:—

மானேஜர், விவேகபாநு,

86, க்வீன் ஸ்டிரீட், டர்பன், நெட்டால்.

விலை ரூ. 2 —சரோஜனி.— விலை ரூ. 2

தமிழ் உலகமே பிரமித்து வியப்படையும் ஓர் அதியற்புத சிங்காரமான நவரசம் ததும்பும் துப்பறியும் நாவல். வங்காள நகரச் சித்திரக்காரரைக் கொண்டு எழுதின பத்து அழகான சித்திரப் படங்கள் அடங்கியது.

புத்தகத்தைக் கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிட்டால் ஒருவித வசியமாக்கப்பட்டு படித்துமுடியுமட்டும் கீழே வைக்க மனம் வாராதென்பது நிச்சயம்.

எம். எஸ். ராமுலு அண்ட் கம்பெனி,

புஸ்தகவியாபாரிகள், 64, மன்னார்சாமிகோயில் தெருவு,

இராயபுரம். மதராஸ்.

ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3

வெளிநாடு ரூ. 4

விலாசம்:

மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்,

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

"தமிழ் நேசன்."

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங்கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும். இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்துரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

மெய்கண்ட மித்திரன்.

சுக்கிர வாரந்தோறும் வெளி வருவது.

கிரவுன் பன்னிரண்டு பக்கம் கொண்டது.

தமிழருக்கு இன்றியமையாத பாஷாபிமானம், தேசாபிமானம், சமயாபிமானம், ஒற்றுமை முதலிய சன்மார்க்கங்களை விளங்க உரைப்பது. நடுநிலைமை கோணாது நின்று நியாயம் வழங்கும் இயல்புடையது.

உள் நாட்டுச் சந்தா விகிதம் தென்னாப்பிரிக்காவுக்குத் தபாற் கூலி உள்பட வருஷ சந்தா

பவுன்	1	0	0
ஆறு மாதங்களுக்கு	0	11	6
மூன்று மாதங்களுக்கு	0	6	0
ஒரு மாதத்துக்கு	0	2	0

சந்தாவை முன்பணமாக அனுப்பவதே முறை.

வெளியூர் சந்தா விகிதம் ரோடிஸியா, ஸிலோன், இந்தியா, பர்மா முதலிய இடங்களுக்கு வருட சந்தா தபாற்கூலி உள்பட

பவுன்	1	2	0
ஆறு மாதங்களுக்கு	0	12	6
மூன்று மாதங்களுக்கு	0	7	0

தனிப்பிரதி 4 பென்ஸ்

ஆசிரியர்,

மெய்கண்ட மித்திரன்,

பி. ஓ. பாக்ஸ் 628, பிரிட்டோரியா.

SIDDHA KALPA MAKARADHWAJA

(REGISTERED)

THE WONDERFUL DISCOVERY IN THE MEDICAL WORLD

FOR ALL "ACUTE" & "CHRONIC" DISEASES

ONE PHIAL OF 60 PILLS (for a Complete Cure).

Price Rs. 10. (Rs. TEN). V. P. Extra.

THE MADRAS AYURVEDIC PHARMACY, LTD.

44, Govindappa Naick St., G. T., Madras.

கைமேற்பலன்! அதை நீங்கள் கட்டாயம் அடையவேண்டும்

கீழே காட்டியுள் புத்தகங்களை வாசிப்பதனால் நீங்கள் கைமேற்பலனடைவீர்களென்பது நிச்சயம்!

		ரூ.	அ.	பை
1	வியாசக் கொத்து — அநேக அரிய வியாசங்களைக் கொண்டது	2	0	0
2	அதிசயப் பொக்கிஷம் — ஒரு சாமானியமனிதன் கோடீச்வரனான விந்தை	1	8	0
3	இன்னுரைக் களஞ்சியம் — 40 அருமையான விஷயங்களைக் கொண்டது	1	0	0
4	விஷயரஸமஞ்சரி — எழுபது விஷயங்களை விரிவா யுரைப்பது	1	0	0
5	திருவள்ளுவரும் அவரது உபதேசங்களும் — புதிய முறையில் வரையப்பட்டது	0	8	0

இன்னும் அநேக புதிய, அரிய, அறிவை வளர்க்கக்கூடிய புத்தகங்கள் எங்களிடம் உண்டு.

நவீன கதா புத்தகசாலை, 122, Montgomery St., இரங்கூன்.

ஜரிகையில்லாத பட்டுச்சேலைகள்

18 முழம் நீளம் 2½ முழ அகலம். பட்டினால் ருத்திராக்ஷகரை போட்டவை. உடல் மிகவும் அழுத்தமானது. எல்லா நிறங்களிலும் கிடைக்கும். சேலை 1க்கு விலை ரூபா 35.

ஷை மாதிரி சேலைகள் ஜரிகைக் கரைபோட்டது

சேலை 1-க்கு விலை 50 ரூபாய் முதல் 80 ரூபாய் வரை. ரவிக்கைகள் எல்லா நிறங்களிலும், எல்லா மாதிரியிலும் ரவிக்கை 1-க்கு 3 ரூபாய் முதல் 5, 6, 7, 8, 10 வரை.

பெரிய கேட்லாக் "இனம்."

விலாசம்:— **மானேஜர், பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.**

SILK PITAMBER CO., BENARES CITY.

மஹானால் கிடைத்த "அருமையான மூலிகை"

தமிழ்வைத்திய சங்கத்தில் தங்கமெடல் பெற்றவை.

குஷ்டம், க்ஷயம், மூலம், கிராணி, பிரமை, பைத்தியம், இழுப்பு, வலிப்பு, மூத்திர வியாதி முதல் காட்பட்ட சகலவித வியாதிகளும், பார்வை, பில்லி, சூனியம், வைப்பு, ஏவல், விஷவியாதி, செய்வினை என சொல்லப்பட்ட பலவிதக் கஷ்டங்களும் கவலைகளும் உடனே நிவர்த்தியாகும்.

☞ ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களைக் காணலாம்

புத்திர பாக்கியமில்லாதவர்களுக்கு 48 நாளில் கெர்ப்பம் உண்டாகும்.

பிரபலமான பேப்பர்களிலெல்லாம் பார்த்திருப்பீர்கள். உலகப்பிரசித்திபெற்றவை எதற்காகத் தேவையிருந்தாலும் ஆரம்பமுதல் சரிவர விபரமாக எழுதுங்கள். தங்கள் முழுவிலாசத்துடன் பதிலுக்கு 1 அணு ஸ்டாம்பு அனுப்பினால் சகலவித விபரமும் அனுபந்தமும் கிடைக்கும். ☞ எந்ததேச ஸ்டாம்பும் அனுப்பலாம்.

முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதைச் செய்தனுப்பக்கூடும்.

மானேஜர், பாலசந்திரன் ஆபீஸ், மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா. சவுத் இந்தியா.

தேசபக்தன். ஓர் தேசியத் தமிழ்ப் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளி தோறும் கொழும்பிலிருந்து வெளி வருவது.

ஆசிரியர் கோ. நடேசய்யர். சந்தா விவரம்.

கொழும்பில் ஆள் மூலம் வருஷம் 1-க்கு ரூ. 9 0 0 ஷை ஷை 6-மாதம் ரூ. 5 0 0

பிறவிடங்கள் (தபால் மூலம்) வருஷம் 1-க்கு ரூ. 13 0 0 பினங்கு, சிங்கப்பூர் முதலியவிடங்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. 16 0 0

தனிப்பிரதி 6-சதம்.

சந்தாத்தொகை முன்பணமாகவே கட்டவேண்டும். 6-மாதத்திற்குக்குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விலாசம்:—

மானேஜர், தேசபக்தன் ஆபீஸ், நெ. 43, செக்ளமேஷன் ரோடு, கொழும்பு.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. II.] February 1926. [No. 7.

श्रीशारदायै नमः।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.
(All Rights reserved by the Authoress.)

सुबोधराम चरिते

॥ अयोध्याकाण्डः ॥

तदा दूतैर्वसिष्ठोऽपि भरतं सानुजं द्रुतम् ।
आनाययत्पुरं तस्मै माता सर्वं न्यवेदयत् ॥ २६ ॥

वसिष्ठोऽपि வசிஷ்ட ரிஷியும் तदा அப்பொழுது सानुजं தம்பியுடன் கூடிய भरतं பரதனை द्रुतं சீக்கிரமாக दूतैः தூதர்களைக் கொண்டு पुरं அயோத்திக்கு आनाययत् வருவித்தார். तस्मै அந்த பரதனுக்கு माता அன்னை கைகேயியானவள் सर्वं விஷயங்களை எல்லாம் न्यवेदयत् எடுத்துரைத்தாள் ॥ २६ ॥

दुःखार्तस्सोऽपि कैकेयीं विनिन्द्य जननीं ततः ।
विधिवत्कृतवान्सर्वं स्वतातस्यौर्ध्वदैहिकम् ॥ २७ ॥

दुःखार्तः துக்கத்தால் வருந்தும் सोऽपि அந்த பரதனும் जननीं कैकेयीं தாயான கைகேயியை विनिन्द्य நிந்தித்து விட்டு ततः பிறகு स्वतातस्य தந்தைக்கு विधिवत् கிரமப்படி सर्वं और्ध्वदैहिकं எல்லா அந்திய கருமங்களையும் कृतवान् செய்தார் ॥ २७ ॥

संप्रार्थितोऽपि भरतोऽभिषेक्तुं सचिवैर्जनैः ।
रामसन्निधिमेवासौ गन्तुकामोऽभवत्तदा ॥ २८ ॥

भरतः பரதன் सचिवैः மந்திரிகளாலும் जनैः பிரஜைகளாலும் अभिषेक्तुं பட்டாபிஷேகம் செய்து கொள்ளும்படி संप्रार्थितोऽपि மிகவும் பிரார்த்திக்கப்பட்ட போதிலும் तदा அப்பொழுது असौ அந்த பரதன் रामसन्निधिमेव ராமர் இருக்குமிடத்தையே गन्तुकामः செல்ல விருப்ப முற்றவராக अभवत् ஆனார் ॥ २८ ॥

भरद्वाजाश्रमं प्राप्य तत्र तेनातिथीकृतः ।
ततः सीतान्वितं रामं ससौमित्रिं ददर्श सः ॥ २९ ॥

सः பரதன் भरद्वाजाश्रमं பாரத்துவாஜ ரிஷியின் ஆச்சிரமத்தை प्राप्य அடைந்து तत्र அவ்விடத்தில் तेन அந்த ரிஷியினாலே अतिथीकृतः (सन्) விருந்தளிக்கப் பெற்றவராகி ततः பிறகு ससौमित्रिं லக்ஷ்மணருடன் கூடினவராயும் सीतान्वितं சீதையுடனிருப்பவராயு முள்ள रामं ஸ்ரீ ராமனை ददर्श கண்டார் ॥ २९ ॥

(To be continued.)

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர். சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] குரோதன—மாசி. [இதழ் 7.

செந்தமிழ் நாட்டுச் சிறப்புக் கும்மி.

ஸ்ரீமான் நா. கோவிந்தசாமி பண்டிதர்.

(285-வது பக்கத் தொடர்ச்சி.).

சத்தியம் மறந்த பக்தனுக்கே ஒளி
தங்கிய கண்ணிரண்டும் மறைய
அத்தன் திருவருள் கச்சியிலோர் கண்ணும்
ஆரூரிலோர் கண்ணும் பெற்றதுவும். (69)

ஆரூரடைந்தன்று பரவையாரிடம்
ஐயனைத் தூதா யனுப்பியதும்
காரூருமாடப் பெருமங்கலக் கலிக்
காமரோடன்பது கொண்டதுவும். (70)

மன்னுந் திருநாகைக் காரோணந்தன்னிலே
வன்றொண்டர் சென்றிறையோனருளால்
பொன்னுடை வாள்மணி ஆடைகள் பொற்கலன்
புரவி கொண்டாரூர் வந்ததுவும். (71)

தேவர்கள்போற்றிய கண்டியூரடைந்து
திருவையாறதைச் சேர்வதற்கு
காவிரியாறு பெருகியதாலதைக்
கண்டு நிறுத்தியே சென்றதுவும். (72)

சேரமானோடு கொடுங்கோளூர் மேவியே
சீர்நிதிகொண்டு திரும்புகையில்

190375

பாரில் வேடர்வழி மறித்துக்கொள்ளப்
பாமன் வாயிலிற் பெற்றதுவும். (73)

ஓரகந்தன்னிலே மங்கலவோசையும்
ஓரகந்தன்னில் அமங்கலமும்
நேரிலேகண்டு முதலைவாய்ப் பிள்ளையை
நீணிலங்காண அழைத்ததுவும். (74)

வேதியன் பிள்ளைக் குபநயனம் உயர்
வேத விதியிற் புரிந்ததுவும்
மாதிரஞ் சூழ்திருப்புக் கொளியூர்விட்டு
வாஞ்சைக் களத்தனைப் போற்றியதும். (75)

சோதிமலையாகி நின்ற சதாசிவம்
சுந்தரனை வெள்ளை யானையின்மேல்
மேதினிகாண அழைத்து வருகென
விண்ணவர் தம்மை யனுப்பியதும். (76)

சேரமான் பஞ்ச கல்யாணியி லேறியே
தேவர் புகழமுன் சென்றதுவும்
வீரராம் சுந்தரர் வெள்ளையானை யேறி
வெள்ளியங் கிரியைச் சேர்ந்ததுவும். (77)

மோனமுற்ற ராஜயோகிகள் மாதவர்
முத்தர்கள் சித்தர் புகழ்ந்திடவே
ஞான வுலாவதை நாயகன் சந்நிதி
கல்லுதியன் அரங்கேற்றியதும். (78)

அந்திவான் மேனியன் நீலகண்டன் எந்தை
ஐந்து முகத்தவன் தந்தருளும்
செந்தமிழின் சுவைச் சிறப்பிதலன்றோ ?
செங்கமல முகத் தேன்மொழியீர். (79)

இன்னமுங் கேளுங்கள் மங்கையரே பா
மேச்வரன் தொண்டர் ஒருவர் உண்டு
கன்னிநன் னாடில் வாதவூர் தன்னிலே
காலகாலன் அருளால் உதித்தார். (80)

வித்தையி லேசிறந் தார்பொது வாகிய
வேதம் விதிமுறையுந் தெரிந்தார்
பத்தியிலே சிறந்தார் அரிமர்த்தன
பாண்டியன் மந்திரியா யமர்ந்தார். (81)

தத்துவ ஞானோபதேசஞ் செய்தருளும்
சற்குருவைத் தேடியே யிருக்கப்
பத்திகொள் பாண்டியன் கிழக்கடற்றுறைப்
பட்டணஞ் சென்று பரிகொளவே. (82)

செம்பொன் னளித்துச் செயமுறு நால்வகைச்
சேனையுடனே யனுப்பிடவே
அம்புவி போற்றிடு நம்பி வாதவூரர்
ஆறார் கடந்து நடக்கையிலே. (83)

(தொடரும்.)

மாதர் சங்கத்தின் உபயோகம்.

(பத்திராதிபர்)

“சங்கே சக்தி: கலௌயுகே” என்பது ஜனங்களிடையே உலவுமொரு சிறந்த பழமொழியாகும். கூட்டத்திலிருந்தே ஜனசமூகத்திற்குரிய முன்னேற்றங்களை எளிதில் அடைவது சுலபமான வழியெனப்படும். தற்காலம் ஜனங்கள் தங்களது வகுப்பினுடையவும் தொழில் முறைகளினுடையவும் முன்னேற்றங் கருதி அவைகளுக் கேற்றவாறு சங்கங்களை அமைத்துக்கொள்ளுகின்றார்கள். இத்துடன் ஜனசமூகம் வேற்றுமைப்படாது சகோதரப்பான்மையுடன் நடந்து கொள்ளுதல் தேசமுன்னேற்றத்திற்கு இன்றியமையாததுபற்றிச் சர்வ சமய சமாச சங்கமும் பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. சங்கங்கள் பல காணப்படினும் நமது தென்னாட்டில் பெண்கள் சங்கம் ஆங்காங்கு ஏற்படாமை விசனிக்கத்தக்கதாம். வீட்டு வேலைகளிலும் குடும்ப நிர்வாகத்திலும் குழந்தைகளை வளர்த்தலிலும் ஈடுபட்டுழைக்கும் பெண்களுக்குச் சங்கம் என்ற ஸ்தாபனமானது சிரமபரிகாரத்தையும் மனதிற்கு உற்சாகத்தையும் விளைவிக்கக் கூடியதென்பதில் தடையே இல்லை. பெண்மக்கள் பலர் ஓரிடத்தில், ஒன்று கூடிப் பரஸ்பரம் சந்தோஷமாகச் சிறிது நேரமேனும் சம்பாஷித்துப் பொழுது போக்குதல் அவர்களுக்குப் பல நன்மைகளை யளிக்குமென்பது நிச்சயம். முற்காலத்தில் பெண்மக்களுக்கு இத்தகைய சங்கமொன்று அவசிய மில்லாமலே இருந்தது எதனால் என்று ஆராய்வோம். தெரிந்தவற்றைச் சொல்லவும் தெரியாதவற்றைக் கேட்டறிந்து கொள்ளவும் சங்கம் உபயோகப்படுகிறது. இவ்வுபயோகத்தை முற்காலப் பெண்கள் நாள் தவறாது அடைந்து வந்திருக்கின்றார்கள். காலை நேரத்தில் ஆற்றங்கரை சென்று குளித்தல், மாலையில் கோயில் செல்லல் இவை போன்ற சந்தர்ப்பங்களிற் பலபெண்கள் ஒன்று கூடவும் பரஸ்பரம் க்ஷேமலாபங்களை விசாரித்துக் கொள்ளவும் இடமிருந்தது. வயது முதிர்ந்தஸ்திரீகள் எவர் வீட்டிலேனும் நடுப்பகலில் கூட்டஞ்சேர்ந்து சில மணிநேரங்களாவது பேசிப் பொழுது போக்காமலிரார்கள். வீண்வம்பு பேசிப் பொழுது போக்கல் என்ற வழக்கம் நவநாகரிகத்தின் ஆரம்ப காலத்தில் அதன் நடவடிக்கைகளைக் கண்டு மனஞ்சகியாத ஒரு சாராரிட மிருந்து நம்மில் ஏற்பட்டதாகும். நவநாகரிகத்தைக் கையாள முந்தியவர்கள் ஆடவர்கள் ஆனது பற்றி அவர்களின் விசித்திர நடவடிக்கைகளை விஸ்தரித்துப் பேசியதலிருந்துதான் நமது பெண்மக்களிடையே வீண் வம்பு பேசுதல் என்ற கொடிய வழக்கம் உண்டாயிருந்திருக்கவேண்டுமாகையால் இதற்குமுன் வாழ்ந்திருந்த ஸ்திரீகள் தாங்கள் ஒன்று சேருங்கால் பாட்டு, கதை, புராணம் இவைகளைப்பற்றியும், குடும்பம் செம்மையாயும் சிக்கனமாயும் நடப்பதற்கான யோசனைகளைப் பற்றியும் அக்கூட்டத்தில் பேசி நற்பொழுதைப்போக்கி வந்தார்கள். அச்சமயம் அங்கு வந்துள்ள பாட்டிமார்களிடமிருந்து வைத்தியமுறைகளையும் அவர்களது அனுபவம் வாய்ந்த ஆலோசனைகளையும் நன்கறிந்து கொள்ளவும் இவர்களுக்குத் தக்க சௌகரிய மேற்பட்டிருந்தது. இவ்விதம் சந்தோஷத்துடனும் சமத்துவத்துடனும் ஒன்று சேர்ந்துபழகிய முற்கால மாதர்களுக்குச் சங்கமென்பது அனாவசியமாக விருந்ததுடன் அதனாலேற்படக்கூடிய பயன்களையும் அவர்கள் சுலபமாயடைந்து வந்தார்கள். தற்காலம் பெண்களுக்கு ஒவ்வோர் ஊரிலும் சங்கம் ஏற்படல்

வேண்டும். அச்சங்கத்தில் புத்தகசாலை யொன்றும் இருக்கவேண்டும். சங்கக்கூட்டம் வாரமொரு முறையேனும் நடைபெறவேண்டும். இச்சங்கத்தினாதரவில் பெண் உபாத்தினிகளைக்கொண்டு தையல், பூப்போடல், நூல் நூற்றல், பிரம்பு பின்னுதல் இவைகளையும், முக்கியமாக தேச பாஷையையும், அயல் பாஷைகளில் தேவையானவற்றையும் கற்பித்தல் வேண்டும். தோட்டம் பயிரிடல், பூஞ்செடி வளர்த்தல் இவைகள் போதிக்கப்படவேண்டும். சிறுமியர் விளையாடுவதற்கு வெளித்தோட்டமும் பாட்டிமார் பொழுது போக்குவதற்குக் கதை புராணங்களைப் படித்தலும் இருக்கவேண்டும். இச்சங்கத்திற்கு அங்கத்தினர்களாகும் பெண்மணிகள் ஏழையாயுள்ளவர்களை இலவசமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு மாதர் சங்கங்கள் ஆங்காங்கு அமைக்கப்படுமாயின் பெண்மணிகள் தங்கள் சகோதரிமார்களை அடிக்கடி சந்தித்து நற்பொழுதாகத் தங்களது பொழுது போக்கைக் கழிக்க இடமுண்டாகும். மாதர் சங்கம் அமைப்பது யார் கடமை என்பதை அடுத்த இதழில் ஆராய்வோம்.

ஹிதமோ ஹதமோ?

(சிறு கதை)

ஸ்ரீமான் ஆர். நாராயணசாமி ராவ், B.A.

(காபி ரைட்.)

சோழபுரமென்பது ஒரு சிறு கிராமம். அதற்கு மூன்று மைல் தூரத்தில் நவநகர் என்று ஒருபெரிய பட்டணம் உளது. சோழபுரத்தைச் சுற்றிலும் இன்னும் பல கிராமங்களுள. சோழபுரம் சிறு கிராமமாயினும் அதில் ஒரு அரசாங்க வைத்தியசாலை, அரசாங்கப் பள்ளிக்கூடம், உப தாசில்தாருடைய கச்சேரி (Deputy Tahsildar's Office), நியாயஸ்தலம் (Magistrate's Court) எல்லாம் உண்டு. உப தாசில்தாராயிருந்த கணேசய்யரே நியாயாதிபதியுமாவார். அரசாங்க சட்டத்தின்படி கணேசய்யர் உபதொழிற் செய்வதிற்கில்லையெனினும், அவர் வைத்தியத் தொழில் செய்யாமலிருப்பதில்லை. வைத்தியம் செய்வதற்காகப் பணம் பறிக்காமலும் இருப்பதில்லை, ஏதேனும் புகார் வந்தால், பொதுஜன நலத்தையுத்தேசித்து இலவச வைத்தியம் தன் சொந்தச் செலவில் செய்வதாகச் சமாதானம் சொல்லிவிடுவார். இராஜாங்க வைத்தியசாலை நிபுணருக்கும் (Sub-Assistant Surgeon) உப தாசில்தார் கணேசய்யருக்கும் வைத்தியம் விஷயமாக நெடுநாட்களாக மனத்தாங்கல் இருந்துகொண்டு இருந்தது. தன்னிடம் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை உப தாசில்தார் அபகரித்துச் சென்று விடுகின்றாரென்பதே அரசாங்க வைத்தியரின் கோபத்திற்குக் காரணம்.

சோழபுரத்தில் இவ்விரு வைத்தியர்கள் தானென நேயர்கள் நினைத்துவிடவேண்டாம். நியாயஸ்தலத்தில் வக்கீல் வேலை பார்த்து வந்த ரமண அய்யர் என்பவர் ஒரு வைத்தியர். ஆனால் இவர் நியாயாதிபதியான உப தாசில்தார் வைத்தியம் செய்யும் இடத்தில் வைத்தியம் செய்வதில்லை. நியாயஸ்தலத்தில் தன் கட்சிக்காரனுடைய சாதகத்தை யுத்தேசித்தே உப தாசில்தாருடைய வைத்திய விஷயத்தில்

குறுக்கிடுவதில்லை. இவரைத் தவிர பள்ளிக்கூட ஆசிரியர்களில் ஒருவரான மணி அய்யர் என்பவரும் தான் வைத்தியரென்று சொல்லிக் கொள்வார். மற்றும், ஊரில் இவர்களைத் தவிர, நொண்டிச்சாமி, பெரியான், அம்பட்ட அப்பாவு, சின்னக்கருப்பன், பண்டார ஆண்டி எல்லோரும் வைத்தியர்கள்தான். மூன்று மைல்களுக்கப்பாலிருந்த நவநகரில் ஒரு பெரிய இங்கிலீஷ் வைத்தியர் இருந்தார். அவர் பெயர் டிகொம்போ D'combo என்பது. இவர்களைத் தவிர இன்னும் சில வைத்தியர்களும் சோழபுரத்திலிருந்தனர்.

வைத்தியர்களைத் தவிர சோழபுரத்தில் ஜோஸ்யர்களும், மந்திரவாதிகளும், போலிச் சாமியார்களும் மலிந்து கிடந்தனர். ஊரில் ஒருவருக்கு உடம்பு சற்று அசௌக்கியமாயிருந்தால், உடனே இந்த வைத்தியர்கள், மந்திரவாதிகள், போலிச் சாமியார்கள் எல்லோருக்கும் எப்படியோ தெரிந்துவிடும். உப தாசில்தார், இராஜாங்க வைத்திய நிபுணர் இவர்களைத் தவிர மற்றெல்லோரும் நோயாளி தம்மைக் கூப்பிட்டாலும் கூப்பிடாவிட்டாலும் அவனைச் சொஸ்தம் செய்யச் சென்று விடுவர். இந்தப் பீடிகையுடன் நமது கதையைத் தொடங்குவோம்.

சோழபுரத்தில் இராஜமய்யர் என்று ஒரு மிராசுதார் இருந்தார். அவர் மகா உத்தமர். சுமார் 45 வயதிருக்கும். கல்வி கேள்விகளிற் சிறந்தவர். அவருடைய மனைவி பாக்கியலக்ஷ்மியும் கற்புமுடைய உத்தமி. அவருக்கு வயது சென்ற தாயார்மாத்திரம் இருந்தாள். இராஜமய்யர் பெரிய சம்சாரி. அவருக்கு நான்கு பையன்களும் மூன்று பெண்களும் இருந்தனர். இவர்களில் நாராயணனெனும் மூத்த பையன்தான் நம் கதைக்குத் தேவை. இராஜமய்யரின் இரு சகோதரிகளான அம்புஜம், குஞ்சாள் இருவரும் கணவனை யிழந்துவிட்டபடியால் இராஜமய்யர் கிரகத்திலேயே இருந்து எல்லோரையும் அதிகாரம் செய்து வந்தனர். இராஜமய்யர் வெகு சாமர்த்தியசாலியானதால் இப்பெரும் குடும்பத்தை நன்றாக நிர்வகித்து வந்தார்.

இத்தறுவாயில் ஒருநாள் வயல்களுக்குச் சென்று சாகுபடியை மேல் பார்வைபார்த்துவிட்டு வீட்டிற்குத் திரும்பின இராஜமய்யர் ஜுரத்தால் பீடிக்கப்பட்டார். அன்று மேலே படுத்தவர் எழுந்திருக்கவில்லை. அச்சமயம் இராஜமய்யருடைய மூத்த குமாரன் நாராயணன் சென்னையில் சட்டக் கல்லூரியில் கல்வி கற்று வந்தான். இராஜமய்யர் ஜுரத்தால் வாடினதைக்கண்ட குடும்பத்தினரெல்லோரும் அவருடையக்ஷேமத்தில் மிகுந்தகவலைகொண்டவர்களாதலால் உடனே அவரைச் சூழ்ந்துகொண்டு உபசாரம் செய்யத் தொடங்கினர். இவர்களெல்லோரும் சேர்ந்து செய்த ஆடம்பரத்தில் இராஜமய்யர் தனக்கு ஏதோ மரணகாலம் கிட்டிவிட்டதென்றே நினைக்கும்படியிருந்தது. உடனே எந்த வைத்தியனைக்கொண்டு வைத்தியம் செய்வதென்ற யோசனை அவர்களுட் பிறந்தமையால் அதை யொட்டிப் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது:—

குஞ்சாள்:— அம்மா! நீங்கள் எதுவென்றாலும் சொல்லுங்கள். வைத்தியத்திற்குப் பிறந்தவன் அம்பட்ட அப்பாவு தான்! போன வருஷம் அடுத்தவீட்டு சோமுவுக்கு அவன் தான் மருந்துகொடுத்தான். ஆச்சு போச்சு என்று ஆய்விட்டதே! அவன் பிழைக்கவில்லையா? லக்ஷ்மிக்கும் அவன்தான் மருந்து கொடுத்தான். அவள் அன்னிக்கே சாக வேண்டியவள். அப்பாவுவின் மருந்தினால் அவள் ஒருமாதம் கழித்துச் செத்தாள்! வைத்தியர்களென்றால் எல்லோரும் வைத்தியர்களாகிவிடுவார்களா?

அம்புஜம்:— அதிருக்கட்டுமடி, வலயச் சின்னக்கருப்பன்தானென்ன? நல்ல ஹஸ்த விசேஷக்காரன்! அவன் கை வைத்தால் எந்த நோயும் தீரும்! அவன் வைத்தியம் செய்த ஒரு இடத்திலாவது தீராமல் இருந்ததுண்டா?

தாயார்:—அம்பட்ட அப்பாவு, வலயச்சின்னக் கருப்பன் இருவர்களும் நல்ல வைத்தியர்கள்தான். ஆனால் அவர்கள் முறையெல்லாம் கடுமையான பத்தியமுறை. பண்டார ஆண்டியிடமாவது நொண்டிச்சாமியிடமாவது சொல்லி மருந்து கொடுத்தாலென்ன; முதலில் அப்படிச் செய்யலாமென்று எனக்குத் தோணுகிறது.

குஞ்சாள்:— எனக்கேதோ அம்பட்ட அப்பாவுதான் நல்ல வைத்தியன் என்று தோன்றுகிறது. அதற்கென்ன? ஊரில் வைத்தியர்களாயில்லை. மணி அய்யர் இருக்கிறார். ரமண அய்யர் இருக்கிறார். இவர்களெல்லாரும் வைத்தியர்கள்தான்!

அம்புஜம்:— என்னைக் கேட்டால், முதலில் வலயச்சின்னக் கருப்பன் மருந்தைக்கொடுக்கலாமென்பேன். பிறகு உங்கள் இஷ்டம். முதல் இரண்டு நாளைக்கு சின்னக் கருப்பன் மருந்தைக் கொடுக்கிறது. சொஸ்தமாகாவிட்டால் வைத்தியனை மாற்றுகிறதுதானே!

பாக்கியலக்ஷ்மி:—இந்த வலையனுக்கும் ஆண்டிக்கும் வைத்தியம் என்ன தெரியும்? நல்ல இங்கிலீஷ்மருந்து கொடுக்கலாமென்று எனக்குத் தோன்றுகிறது.

குஞ்சாள்:— அடி! நீ இங்கிலீஷ்காரியம்மா! உனக்கு இங்கிலீஷ் வைத்தியம்தான் பிடிக்கும்! உன் பிள்ளை B. L. படிக்கிறானல்லவா? நீ பட்டணத்துப் பெண்! எங்கள் வைத்தியமெல்லாம் உனக்குப் பிடிக்குமா? வலையன், ஆண்டி இவர்கள் வைத்தியம்தானே எங்கள் வைத்தியம்! உன் வைத்தியமெல்லாம் தீக்ஷிதர், கனபாடிகள், சாஸ்திரிகள் இவர்களுடைய வைத்தியம்! அம்மா, உங்கள் நாட்டுப் பெண்ணைக்கேட்காமலேயே நாங்கள் பேசுகிறோமே! அவளுக்கு இங்கிலீஷ் மருந்துதான் பிடிக்குமாம்!

இவ்விதம் இவர்கள் வாக்கு வாதம் செய்வதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டிருந்த இராஜமய்யர் தன் பொறுமையை யிழந்து ஈனக் குரலில் "நீங்கள் வைத்தியனை முடிவு செய்வதற்குள் என் ஆயுள் முடிந்துவிடும்போலிருக்கிறதே! இரண்டு நாழிகையாக எல்லாரும் ஓயாமல் வாதாடியும் இன்னும் ஒரு முடிவிற்கும் வரவில்லையே! உப தாசில்தார் கணேசய்யர் வைத்தியரென்பதை எல்லோரும் மறந்துவிட்டீர்கள். அவரைக் கூப்பிடுங்கள். வேறு ஒருவரும் வேண்டாம்! பொழுது விடிந்தால் நாம் தாசில்தாரிடம்தான் நிலவிஷயமாகப் போய் நிற்கவேண்டியிருக்கிறது. அவரிடம் மருந்து சாப்பிடாவிட்டால் அவருக்குக் கோபம் வரும் அவரைத்தானே கூப்பிடுங்கள். வேறு ஒருவரும் வேண்டாம்!" என்று முடிவாகச் சொல்லிவிட்டார். இராஜமய்யரை மறுத்துக் கூற ஒருவருக்கும் தைரியமுண்டாகவில்லை. ஆகையால் உப தாசில்தார் கணேசய்யாவர்களே வைத்தியத்திற் கழைக்கப்பட்டார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. உபதாசில்தாருடைய கோபத்திற்கு இராஜமய்யர் பயந்தாரேயன்றி இவருடைய சிகிச்சைமுறைக்கு நோய் பயப்படவில்லை. எனவே நாளுக்கு நாள் ஜ்வரம் அதிகமாகி இராஜமய்யர் பேத்தவும் புலம்பவும் தலைப்பட்டார். எனினும், கணேசய்யர் எல்லோருக்கும் தைரியம் சொல்லி மருந்து கொடுத்து வந்தார்.

இது இப்படியிருக்க, இராஜமய்யர் நோயால் வாடுவதையறிந்த வலயச்சின்னக் கருப்பன், பறப்பெரியான், அம்பட்ட அப்பாவு, பண்டார ஆண்டி, நொண்டிச்சாமி எல்லோரும் ஒவ்வொருவராக இராஜமய்யர் கிரகத்திற்கு வர ஆரம்பித்தனர். ஒவ்வொரு வைத்தியனும் இராஜமய்யர் நாடியைப் பிடித்துப் பார்த்துவிட்டுப் பலவிதமான சிகிச்சைகளைச் சொன்னான். வந்தவர்களில் அம்பட்ட அப்பாவுதான் முதலில் வந்தவன். அவன் இராஜமய்யரின் தாயாரைப் பார்த்து "அம்மா, இந்த சுரம் சாதாரணமென்று நினைக்காதீங்கள். நாடி இப்போவே தாறு மாறு இருக்கு. சிங்கிபவளச் செந்தூரம் கொடுத்தால்தான் இந்த சுரம் அடங்கும். ஐயர் சாமியை என்னிடம் ஒப்பியுங்கள். 24 மணி நேரத்தில் சொஸ்தமாக்குகிறேன். அவருடைய உயிருக்கு நான் அடிக்கட்டை" என்றான். இதைக் கேட்ட கிழவி கண்ணீர் விட்டுக்கொண்டு "அப்பா, அப்பொழுதே என் பெண் குஞ்சாள் சொன்னாள்! என்னமோ உன் மருந்தைக் கொடுக்காமல் போய்விட்டேன்! இப்பொழுதாவது வந்தாயே; இதோ பத்து ரூபாய் கொடுக்கிறேன். எந்த மருந்து செய்யவேணுமோ செய். உன் மருந்தையே நான் கொடுக்கிறேன். ஜ்வரத்தை நிறுத்தினால் உனக்கு எவ்வளவு ரூபாய் ஆனாலும் கொடுக்கிறேன்" என்று ரூபாய் 10 கொடுத்தனுப்பினாள். இந்தப்படியே ஒவ்வொரு வைத்தியனிடமும் மருந்துக்குப் பணம் கொடுத்துவிட்டாள்! எல்லோருடைய மருந்துகளையும் வாங்கியும் வைத்துக்கொண்டாள்!

அன்றிரவு இராஜமய்யருடைய கிரகத்தில் சமையலறையில் பின் வருமாறு சம்பாஷணை நடந்தது:—

குஞ்சாள்:— அம்மா, இன்னிக்கு அம்பட்ட அப்பாவு மருந்தையும் கொடுத்தாயோ இல்லையோ?

தாயார்:— அப்பாவு மருந்தைக் கொடுத்தேன்! அப்புறம் சின்னக் கருப்பன் மருந்தையும் கொடுத்தேன்! அந்தத் தாசில்தார் மருந்தும் கொடுத்தாச்சு! இன்னும் ஜ்வரம் நின்றபாடில்லையே.

அம்புஜம்:— நான் சொல்லுகிறேன், கேளம்மா. இந்த ஜ்வரம் ஒரு மருந்தில் நிற்கக் கூடியதல்ல. ஒரு மருந்தை நம்பியிருந்தால் மோசம்தான்! சின்னக் கருப்பன் மருந்து, நொண்டிச்சாமி மருந்து, அப்பாவு மருந்து, ஆண்டி மருந்து எல்லாம் கொடுக்கவேண்டியதுதான். ஒண்ணுக்குப் பின்னால் ஒண்ணு கொடுத்தால், ஒரு மருந்தில்லாவிட்டால் ஒரு மருந்து பலிக்கட்டுமே!

தாயார்:— மணி அய்யர் மருந்தையும் தாசில்தார் மருந்தையும் நிறுத்திவிடுவோமென்கிறாயா?

அம்புஜம்:— அதையும் கொடுப்போம்! எப்படியும் மருந்து கைவசம் இருக்கு. ஏதோ நம்மால் ஆனது முழுவதும் செய்துவிடுகிறதுதான் நலம்.

பாக்கியலக்ஷ்மி:— நீங்கள் சொல்வது வெகு நன்றாக இருக்கிறது! எந்த மருந்துக்கு எந்த மருந்து முறிவோ? எல்லா மருந்துகளையும் கொடுத்தால் வயிற்றைத் தின்றுவிடாதா?

குஞ்சாள்:—அம்மாடி! (என்று ஆரம்பிப்பதற்குள்)—

தாயார்:—அடி, இரு. அவள் சொல்வதும் சரிதான். குழந்தை இந்த அஞ்சு நாள் ஜ்வரத்திலேயே இளைத்துத் துரும்பாகப்போய் விட்டான்! மருந்தைப்போட்டு வயிற்றை ரொப்பினால் வயிற்றைத் தின்று விடாதா?

குஞ்சாள்:—அம்மம்மா! இந்த நாகரிகமே புது நாகரிகம்! மருந்து கொடுக்காவிட்டால் ஜ்வரம் சொஸ்தமாகாது! கொடுத்தால் வயிற்

றைத் தின்று விடும்! என்னதான் செய்கிறது? இப்படித்தான் இருக்கும் நாகரிகப் பேச்செல்லாம்! உங்கள் நாட்டுப் பெண்ணுக்கு ஆஸ்பத்திரித் தண்ணியைக் கொடுத்தால் சந்தோஷமாக இருக்கும். அதற்கென்ன? உடம்புக்கு வந்தால் இளைத்துத் தான் போவார்கள். அதற்காக மருந்தே கொடுக்கப்படாதாக்கும்!

அம்புஜம்:—அம்மா, இந்த நகரத்து நாட்டுப் பெண் கிடக்கிறாள்! ஏதோ அவள் அகமுடையானை அவள்தான் காப்பாத்துகிறதாகவும் நாங்களெல்லோரும் கொன்று விடப் போவதாகவும் நினைத்துப் பேசுகிறாள். நான் சொல்வதைக் கேள்! நாம் எவ்வளவுக் கெவ்வளவு மருந்து கொடுக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு ஊட்டம் கொடுக்கவேண்டுமம்மா! இந்த அஞ்சு நாளாக அண்ணா கஞ்சியே குடித்துக் கிடக்கார்! உடம்பு இளைக்காமல் என்ன செய்யும்? இட்டலி ஆவியில் வேகுறபடியால் இட்டலி கொடுக்கலாம். அது உடம்புக்கு ஒண்ணும் பண்ணாது! திரட்டுப்பால் கொடுக்கலாம்! திராட்சைப்பழம் கொடுக்கலாம். ரொட்டி கொடுக்கலாம்! இதெல்லாமா ஆளைக்கொன்று விடும்?

இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த இராஜமய்யரின் மனைவி அருவருப்புடன் அவ்விடம் விட்டகன்றாள்.

பாக்கியலக்ஷ்மி கொஞ்சம் படித்தவள். தன் மாமியாரும் நாத்திமார்களுமே தன் புருஷனைக் கொன்று விடுவார்களென்ற பயம் அவளுக்குண்டாகி விட்டது. இனிமேல் தான் சும்மா விருத்தலாகாதென்று எண்ணினாள். ஆனால் யாது செய்வதென அவளுக்குப் புலப்படவில்லை. கொல்லைப்புறத்திற் சென்று தன் கணவனுடைய நிலைமையை நினைத்து நினைத்துத் தேம்பித்தேம்பி அழலானாள். பாவம், என்ன செய்வாள்? தன் நாத்திமார்கள் செய்வதை எவ்விதம் தடுப்பதென்று வெகு நேரம் யோசித்தாள். திடீரென்று அவளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. உடனே தன் அறைக்குச் சென்று சென்னையில் படித்துக் கொண்டிருந்த தன் மூத்த பையன் நாராயணனுக்கு ஒரு தந்தி பின் வருமாறு எழுதினாள்; "உன் தந்தை அபாயகரமான நிலைமையிலிருக்கிறார். தாறு மாறாக மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. உடனே புறப்பட்டு வரவும். நவநகரிலிருந்து பெரிய டாக்டரையும் அழைத்து வரவும்." இந்தத் தந்தியைச் சேவகன்மூலம் தந்தி ஆபிசுக்கு அனுப்பினாள். தான் செய்த காரியத்தைத் தன் நாத்திமார் அறிந்தால் தன்னைப் படாத பாடு படுத்துவார்களே யென அச்சம் அவள் மனதில் மிகவும் இருந்தது.

ஆனால் நாராயணன் சென்னையிலிருந்து வருவதற்குள் அனேக காரியங்கள் நடந்து விட்டன. ஒவ்வொரு வைத்தியனும் கொடுத்த மருந்தையும் இராஜமய்யருக்கு இரண்டு நாட்கள் கொடுத்ததில் வாய் முதல் வயிறு வறை வெந்து போய் விட்டது. ஒவ்வொரு வைத்தியனுக்கும் மற்ற வைத்தியர்களின் மருந்துகள் கொடுக்கப்பட்டு வரும் விஷயம் தெரியாது. கடைசியாக, இராஜமய்யருக்குக் கஞ்சி குடிக்கவும் இயலாமற்போய், நாராயணனுக்குத் தந்தியனுப்பிய மறுநாளே இராஜமய்யருக்குப் பிரக்ஞை தவறி விட்டது.

இதற்குள் பாக்கியலக்ஷ்மி செய்த பிரதக்ஷணங்கள் எத்தனை! வீட்டில் சனீசுவரஜபமென்ன, மிருத்துஞ்சய வேதாயம் என்ன, மற்ற ஜபங்களென்ன, இவைகள் தான் எத்தனை! ஜாதகம் பார்த்துப் பலன் சொன்னவர்கள் தான் எத்தனை பேர்கள்! ஆனாற் பயனென்ன? இராஜமய்யர் மாத்திரம் குணமடையவில்லை. நாழிகைக்கு நாழிகை அவருடைய நிலைமை கேவலமாய் விட்டது.

இராஜமய்யரின் தாயாருக்கும் தங்கைகளுக்கும் இன்னது செய்வதென்று புலப்படவில்லை. அப்பொழுதுதான் இராஜமய்யர் அபாயகரமான நிலைமையில் இருக்கிறாரென்பதை அவர்கள் உணர்ந்தனர். உடனே நாராயணனுக்குத் தந்தி கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். பாக்கியலக்ஷ்மி தான் ஏற்கனவே நாராயணனுக்குத் தந்தி கொடுத்து விட்டதாக அறிவித்தவுடன் அவளுடைய நாத்திமார்களுக்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. ஆனால் இராஜமய்யருடைய நிலைமை கவலைக்கிடமுள்ளதாயிருந்ததால், அச்சமயம் பாக்கியலக்ஷ்மியைத் திட்ட அவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஆகையால் மௌனம் சாதித்தார்கள்.

கடைசியாக இராஜமய்யருக்குப் பகல் 4 மணிக்குச் சுவாசம் கண்டு விட்டது. உபதாசில்தார் 'இனிப் பிழைப்பதரிது' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். மற்ற வைத்தியர்கள் வரவேயில்லை. எல்லோரும் இராஜமய்யரின் படுக்கையைச் சுற்றி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக உட்கார்ந்திருந்தனர். பாவம், இராஜமய்யரின் தாயாரையும், மனைவியையும் அச்சமயம் கண்டவன் கல் நெஞ்சினனாயினும் கரைந்துருகிக் கண்ணீர் விடுவானென்பதில் ஐயமில்லை. பரிதாபம்! பரிதாபம்!!

இராஜமய்யர் இங்ஙனம் யமனுடன் போராடிக்கொண்டிருக்கும் சமயம் ஒரு போலிச் சாமியார் அவ்விடம் வந்து சேர்ந்தான்! அவன் மந்திரத்தாலே யெல்லாவற்றையும் சாதித்து விடுவதாகச் சொல்வது வழக்கம். அவன் வந்ததும் ஒரு நொடியில் உண்மையான நிலைமையை யறிந்து, அந்த சமயம் தட்டின மட்டும் இலாபமென்றெண்ணி ஆவேசம் வந்தவனைப்போல் நடந்து. "ஹா! ஹா! சங்கைக் கோளாறு! சங்கை தோஷம்! ஈஷ்பரீ கடாக்ஷம்! காருண்ய தேவி கவசானுக்கிரகம்! திருபுடசக்ரமகாத்மியம்! வாஷ்தவத்தில் இதில் பாருங்கள்" என்று கத்தினான். அவனுடைய எண்ணத்தை உடனே யறிந்த குஞ்சாள் சாமியாரைப் பார்த்து "ஐயோ! சாமியாரே" என்று அலறினாள்! இதைக் கேட்காதுபோல் சாமியார் பின்னும், "ஆகா! போன உயிர் மீளவும், போகும் உயிர் இருக்கவும் ஈஷ்பரியின் வாக்கு. மந்திரம்! என்னுடைய யோகம்! தவம்! நம்புங்கள் சர்வஜகம்மாத்திர பந்தம்! ஜல மந்திரம்! விபூதி மந்திரம்! அக்னிமந்திரம்! ஹா! ஹா! ரூபாய் ஐம்பது கொடுங்கள். தங்கத் தகடு அடித்திருக்கிறேன்! சக்ரம் எழுதி அக்னி பந்தம் செய்து அக்னி தேவனை ஆகர்ஷித்து ஜுரபந்தம் நிவாரணம் செய்கிறேன்! பயப்படாதே! பயப்படாதே!" என்று இவ்வாறு அர்த்தமில்லாத சொற்களை மணிப்பிரவாள நடையில் சாமாரியாகப் பொழிந்தான். உடனே ரூபாய் ஐம்பது சாமியார் கையிற் பறந்தது! உடனே சாமியார் எருமுட்டைகளை நோயாளியின் பக்கத்தில் அடுக்கி நெருப்பை மூட்டிவிட்டான்! புகையும் கிளம்பியது. சாமியார் ஒரு பித்தளைத் தகட்டைத் தன் பையினின்று எடுத்து அக்னியில் வைத்து ஆவேசம் வந்தவனைப்போல் நடித்து அர்த்தமில்லாத மந்திரங்களை மணிப்பிரவாள நடையில் உச்சரித்து ஆடினான். நடு நடுவில் விபூதியை யெடுத்துப் புகையிற் பிடித்து இராஜமய்யர் முகத்தை நோக்கி ஊதுவதும், அக்கினியை மூட்டுவதும் மந்திரங்களை உளறுவதுமாகக் கொஞ்சநேரம் செய்துவிட்டுக் கடைசியில் இராஜமய்யர் நெற்றியில் விபூதி தடவும் பாவனையாக அவர் முகத்தைத் தொட்டான். பாவம்! இராஜமய்யர், பல மருந்துகளின் வேகத்தாலும், நோயின் கொடுமையாலும், மந்திரவாதியின் புகையினாலும் மூச்சுத் தடுமாறி திக்குமுக்கிச் சவமாகிப் பத்து நிமிஷம் ஆய்விட்டது! முகம்

ஜில்லென்றிருக்கவே போலிச்சாமியார் பேயைக் கண்டவனைப்போல் எழுந்து "ஹா! காட்டேரி! காட்டேரி! போ வெளியில்! என் முன் நில்லாதே! கொளுத்தி விடுவேன் உன்னையும்! இதோ வந்துவிட்டேன்! உன் பின்னோடேயே வருகிறேன்! ஓடு வெளியில்! ஓடு வெளியில்!" என்று உரக்கக் கத்திக் கொண்டு வாசலுக்கு ஓடினான். தெருவையடைந்தவுடன் ஓட்டம் பிடித்து ஒரு நொடிப் பொழுதில் மறைந்து விட்டான்.

ஆ! இனியும் என்ன எழுதுவது! ஐந்து நிமிஷ நேரத்திற்கெல்லாம் இராஜமய்யர் வீட்டில் ஓவென்றலறும் சத்தம் கேட்டது. இராஜமய்யருடைய மனைவி மூர்ச்சித்துவிட்டாள்! ஆ! அடுத்த நிமிஷமே வாசலில் ஒரு வண்டி நின்றதும் மூவர் உள்ளே ஓடினார்கள். ஓடினவர்கள் நாராயணன், D'combo என்னும் சர்ஜன், சேவகன் இவர்கள்தான்! டாக்டர் இராஜமய்யரைப் பார்த்து "Dead" என்று சொல்லிவிட்டுத் தமக்குரிய பணத்தைப் பெற்றுக்கொண்டு போய்விட்டார். நாராயண அய்யர் தன் பிதாவின் சவத்தைத்தான் கண்ணுற்றார்! அந்தோ! அந்தோ!!

இராஜமய்யருக்கு வைத்தியம் செய்த அழகைத் தன் தாயாரிடமிருந்து மூன்றாவது நாள் நாராயணன் அறிந்தான். பாக்கியலக்ஷ்மிக்கு அடுத்த நாள்தான் சுத்தப் பிரக்ஞை வந்தது. "அந்தோ! கற்புடைய உத்தமி! உனக்கும் கைம்பெண் வாழ்க்கை வரலாமோ" வென்று ஊரார் மனம் கசிந்தனர். நாராயணன் என் செய்வான்! தன் பாட்டியும் அத்தைகளுமே தன்தந்தையைக்கொன்று விட்டதாகச் சொல்லி வாய்விட்டலறுவான்! ஆனால் அவர்கள்தான் என்ன செய்வார்கள்? "அப்பா! என்ன வைத்தியம் செய்தோம்! என்ன பாடுபட்டோம்! ஒரு வைத்தியரா! இரண்டு வைத்தியரா! ஆயிரம் வைத்தியம் செய்து பார்த்தோம்! எவ்வளவு ஜபம்! எவ்வளவு மந்திரம்! எவ்வளவு மருந்துகள்! பாவி யமன் வந்தவன் கொண்டே போய்விட்டானே!" என்று அவர்கள் சொல்லியழுதார்கள்! அவர்களைக் குற்றம் சொல்வதிலும் என்ன பயன்? அறியாமையினால் விளையும் கேடுகள்தான் என்னே! இராஜமய்யருக்கு எல்லோரும் ஹிதம் செய்யத்தான் கருதினார்கள் ஆனால் அவர்கள் செய்தது ஹிதமோ ஊதமோ வென்பதுதான் நமது கேள்வி.

குறிப்பு:— இதை யெழுதியதின் நோக்கம் நாட்டு வைத்தியர்களைப் பழிப்பதற்கென்று நேயர்கள் நினைக்கக்கூடாது. வைத்திய சாஸ்திரமே தெரியாமல் வைத்தியம் செய்ய முன்வந்துவிடும் வைத்தியர்களைக் கண்டிக்கவும், வைத்தியம் செய்துகொள்பவர்கள் ஒரு வைத்தியனிடம் மருந்து சாப்பிடாமல் பலபேரிடம் ஒரே தடவை வைத்தியம் செய்துகொள்வதைக் கண்டிக்கவும், அறிவீனத்தால் நோயாளிகளுக்குத் தின்பண்டங்களையும் மற்றும் அபத்தியமான சாமான்களையும் கொடுப்பதைக் கண்டிக்கவும், மந்திரவாதிகளென்று வேஷம் போட்டு ஜனங்களை ஏமாற்றிப் பணம்பறிக்கும் போலிச் சாமியார்களை நம்பலாகாதென்பதை வற்புறுத்தவும், பெண்களுக்குக் கல்வி அவசியத்திலுமவசியமென்பதை எடுத்துகாட்டவுமே இக்கட்டுரை எழுதலானேன்.

டோக்கிளாகாபாத்.

(சுவாமி அற்புதானந்தர்.)

இந்த நகரம் இவ்வமயம் பாழடைந்து டெல்லியினருகில் உள்ளது. இதற்கு மாறாக 'ராய்ஸினா' இந்நாட்களில் டெல்லியில் தயாரிக்கப்பட்டு வருகின்றது. 14-ம் நூற்றாண்டில் டோக்கிளாகாபாத் டோக்கிளாக் மன்னர்களின் இஸ்லாம் தலைமை நகரமாக மிக்க அழகியபட்டணமாக இருந்ததென்பார். இந்நகரை ஸ்தாபித்தவர் லாஹோரின் கவர்னராகிய காஜிபேக் டோக்கிளாக் என்பவர். இவர் 1321-ம் ஆண்டில் கியாஸுத்தீன் டோக்கிளாக் என டெல்லியின் மன்னனாகினார். இவர் சரிதைகளில் டோக்கிளாக்ஷா வெனவும் கூறப்படுவர். இவர் பெரும் பயித்தியக்காரனெனவும் கூறுவர். இவர் நான்காவது முறையாக டெல்லியை ஸ்தாபிக்க முயன்று பலகோடி ரூபாய்களைக் கொள்ளையிட்டு டோக்கிளாகாபாத் நகரை சிறப்புகள் கொண்டதாகவாக்க முயன்றனர். இரண்டு வருடத்தில் இந்நகரம் இந்தியாவில் சிறந்த பட்டணமாக கி.பி. 1323-ல் தயாரிக்கப்பட்டுப் பெரும் செலவில் நகரப் பிரவேசமுமாகியது.

இவ்வமயம் இவர் இந்நகரை ஸ்தாபிக்க ஒரு சிறுகுன்றை டெல்லியின் அருகில் தெரிந்தெடுத்தனர். இந்நகரைச் சுற்றி ஒரு பெரும் கோட்டையையும் சுமார் 4 மைல் விஸ்தீரணத்தில் ஏற்படுத்தினர். இம்மதில்களில் ஆங்காங்கு கொத்தள அமைப்புகளுக்கு என்று பீரங்கிகளைக் கொண்டுள்ளதாகவும், அடுத்தாப்போல் போர்வீரர்கள் வசிக்கப் பெரும் வாயில்களையும், இவ்வாயில்கள் நன்கு உபயோகிக்கப்படும்படி பெரும் பாட்டைகளையும் கொண்டுள்ளவைகளாகும்படி செய்தனர். இவர் தன் கோட்டையையும் மாளிகைகளையும் தயாரித்துக்கொண்டிருந்த சமயம் நிஜாமுத்தின் அவுலியாவென்பவர் ஒரு தர்க்காவைச் சமீபத்தில் தாயாரிக்கலாகினார். எனவே வேலையாட்களின் கஷ்ட சாத்திய சிரமத்தில் இருவருக்கும் பெரும் மனத்தாங்கல்கள் ஏற்படவுமாகின வெனச்சொல்வர். பகல் முழுவதும் டோக்ளாக்ஷா வேலையாட்களைத் தம் வேலைகளைச் செய்யச்செய்வர். இரவில் நிஜாமுத்தீன் அவுலியா தம் வேலையைச் செய்ய வேலையாட்களைக் கொள்வர். இதற்கெனப் பெரும் எண்ணைச் செலவும் நேரிட்டது என்பதை டோக்ளாக்ஷா தெரிந்து எண்ணை வியாபாரிகளை எண்ணை விற்கக் கூடாதெனக் கட்டளையிட்டு விட்டதாகவும், நிஜாமுத்தீன் அவுலியா ஒரு எண்ணைக் கிணறு உண்டாக்கி எண்ணையை எடுத்து வேலையை ஆரம்பிக்கச் செய்ததாகவும், இவைகண்ட டோக்ளாக்ஷா நிஜாமுத்தீன் அவுலியாவைக்கண்டு இவ்வெண்ணைக் கிணறு தம் நாட்டிலிருப்பதினால் தமதெனவும், எங்ஙனம் தம் நாட்டில் வியாபாரம் செய்யும் எண்ணை வியாபாரிகள் தம் குடிகளாக இருப்பது போலவே தம் அரசியின் நிலத்தில் உள்ள கிணறுயாவும் தமக்குச் சொந்தம் மெனவும் வற்புறுத்தவே, நிஜாமுத்தீன் அவுலியா மிக்கக் கோபமுண்டவராகி 'யாபஸே குஜ்ஜர், யாரஹே உஜ்ஜர்' எனச்சாபம் இட்டு வெளியேகிவிட்டனர்.

இவை எங்ஙனமாகினும், சில வருடங்களில் இக்கோட்டையும் நகரமும் பாழாகி இவ்வமயம் இவ்விடங்களில் ஆடுமாடுகளை மேய்க்கும் இஸ்லாம் குஜ்ஜர் (இடையர்கள்) காணப்படுகின்ற

னர் என்பது மட்டும் உண்மையாகவாகி விட்டது. நிஜாமுத்தீன் அவுலியாவின் தர்க்காவும் பாதிகட்டிப் பாதி கட்டப்படாததாகவும் ஆகி உள்ளது. இக்கிணறு இவ்வமயம் உப்புத் தண்ணீர் கொண்ட ஆழ்ந்த கேணியாக உள்ளது. இதில் நீச்சலடிப்பவர்கள் ஒரு காலணாவை விஜயம் செய்பவர் போட்டால் உடனெடுத்து வந்து விடுகின்றனர். இவ்விதமாக நீந்துகின்றவர்களை ஏடன் சமுத்திரக் கரையிலும் காணலாம். இங்கும் ஓரணா இரண்டணாவைத் தண்ணீரிற் போட்டால், தரைதட்டு முன்னர் கொண்டு வந்து விடுவர். இந்நகரை (டோக்ளாக்காபாத்தை) ஸ்தாபித்த கியாஸுத்தீன் மன்னன் இன்னும் பல பைத்தியக்கார வேலைகளைச் செய்துள்ளரெனவும், இவரை விடப் பெரும்பித்தனாக இவர்மகன்ஏற்பட்டனனெவும் கூறுவர். இவர்மகன் வகார் உத்தீன் ஜூனாகான் என்பவன் தன் தகப்பனைக் கொல்லச் சிறுவயதில் முயன்று கொன்றுவிட்டு, தான் முகம்மதுஷா டோக்ளாக் என டெல்லி மன்னனாக ஆனான். உடனே தனக்கென இங்கிருந்து சில மைல் தூரத்தில் ஒரு பெரும்மாளிகையைப் பெரும் பொருட் செலவில் தயாரிக்கலாகினான். இது தயாரிக்கப்பட்ட உடனே இந்நகரை விட்டு அந்நகரிற் குடியேறினான். இது டெல்லியின் ஐந்தாம் பகுதியிலுள்ளது. இவன் குடியேறிய உடன் தன் பல் விழலாகவே இதற்கு ஒரு பெரும் மசூதி தயாரித்து அதை அடக்கம் செய்யலாகினான். பின்னர் சீனாவை ஜயிக்கக் கருதி இமயமலையைத் தாண்டிச் செல்ல ஒரு படையை அனுப்பிப்பலரைமாளச் செய்தனன். எனவே இவன் பெரும் பித்தனெனக் கூறப்படலாகி முடிவில்மாண்டு தன் நகருக்கும் தன் தகப்பன் நகருக்கும் இடையில் அடக்கமாயினான். இதற்கடுத்தாற்போல் கியாஸுத்தீனின் கபருமுள்ளது. இம்மகம்மதுஷா டோக்ளாக்கைக் கொலை செய்ய முற்பட்ட இவன் மகன் ஜூனாகானின் கபரும் இங்குள்ளது. இவனின் (மகம்மது ஷா டோக்ளாக்கின்) பேகம் மக்துய் உத்ஜானின் கபரும் இங்கே ஏற்பட்டுள்ளது. இவைகளெல்லாம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. இவ்விரு நகரங்களும் பாழடைந்து செடி புதர்நெருங்கிய முட்காடாகியும் நரி, பறவை, குரங்குகள் வாசஸ்தானமாகியும் உள்ளன. கிரேட் இன்டியன் பெனின்ஸுலா மெயிலில்மதுராவிலிருந்து டெல்லிசெல்பவர்கள், டோக்ளாகாபாத் ஸ்டேஷனில் இறங்கலாம். டெல்லியிலிருந்துஇது 13 மைல் தூரத்திலுள்ளது. இவைகளைப்பார்த்துக் கொண்டு மூன்று மைல் தூரத்தில் உள்ள கிராமத்தின் தேவி கோயிலையும் யமுனைக் கணவாயையும் கண்டு, பின்னர் 3 மைல் தூரமுள்ள நிஜாமுத்தீன் அவுலியாவின் தர்க்காவையும் கண்டு அங்குள்ள ஸ்டேஷனில் ஏறி, ஆறு ஏழு மைல் தூரமுள்ள டெல்லிக்குச் செல்லலாம். டெல்லிக்குச் சென்று திரும்பி இவைகளுக்கு வருபவர்களுக்கு வண்டிச் செலவு மிகவுமாகும்.

EVREY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

நூர்ஜஹான் அல்லது
பரதகண்டத்துச் சௌந்தரியக் கொடி.

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.)

(341-ம் பக்கத் தொடர்ச்சி.)



எட்டாம் அத்தியாயம்.

சற்று நேரத்திற்குப் பிறகு அயாஸின் மனதிற்குடிகொண்டிருந்த துக்கம்கொஞ்சங் குறைந்தது. கண்களைத் திறந்து அதிகப் பிரயாசையுடன் எழுந்துட்கார்ந்தான். அருகில் சுவர்ணக்கொடியை யொத்த வநிதையின் சவங் கிடந்தது. சில நிமிஷங்களுக்கு முன்பாகத் தனது மதுர பாஷணத்தால் ஆனந்தத்தைக் கொடுத்த அமீனா பிரேதமாக மரக்கட்டையைப்போற் கிடக்கக் காணவே, அவனது தலை சுழன்றது, உடல் கொதித்தது. அப்படிப்பட்ட ஸ்திதியிலும் மேல் நோக்கி, "அடே மிருத்யு! நீ இவ்வண்ணம் என்னிடம் இரங்காதிருக்கக் காரணம் யாது? ஒருவருக்கொருவர் உதவியாயிருந்து யாத்திரை செய்துவந்த எங்களது அரைபாகத்தை விழுங்கி, மீதியிருக்கும் அரை பாகத்தை இம்மிருத்யு லோகத்திலிருந்து துக்கத்தை அனுபவிக்கும் பொருட்டோ விடுத்துச் சென்றாய்? நானெதற்காக நித்திரையினின்றும் விழித்தேன்? விழித்துக் கொண்டதனாலல்லவோ துக்கப்படவேண்டியிருக்கிறது? துக்கக்கடலிலாழ்ந்துள்ளோருக்கு நித்திரையே சுகத்தைக்கொடுக்கின்றது. எதற்காக நித்திரையினின்றுமெழுந்தேன்? ஜீவனுள்ளவரை துக்கத்தை அனுபவிக்கவோ நான் ஜனித்தேன்? ஆகா! அமீனா! இன்னம் உனது சௌந்தரியம் கொஞ்சமேனுங் குறையவில்லையே! ஐயோ! உவமையில்லாத இந்த ரூபத்தை அடக்கஞ்செய்ய என் தலையிலோ எழுதியுள்ளது? அடே விதியே!—நீயேன் மனிதர்களிடம் இவ்வண்ணம் நிர்த்தயையுடனிருக்கின்றாய்? இவ்வளவு துக்கத்தை அனுபவித்த பின்னர், இவை யாவற்றையும் மறக்கவும் மாளுமோ? ஈச்வரா! உனது மாயையை நானென்னென்று சொல்லுவேன்!" எனக்கதறினான். அச்சமயம் அயாஸின் நேத்திரங்கள் மழுங்கியிருந்தன. சோகமும், துக்கமும் மேலிட, யாது செய்வதென்ற அவஸ்தைக் குள்ளாயினன். அநேக விசாரங்களாற் பீடிக்கப்பட்டிருந்த அச்சமயம், நித்திராதேவியின் பாசத்

திற்குக் கட்டுப்பட்டிருந்த அப்பாவிகை கண்களை விழித்துத் தாயின் ஸ்தனபானஞ் செய்ய ஆரம்பித்தது. ஆனால் யாதொரு பலனுமில்லாதிருக்கத் திடீரென அழ ஆரம்பித்தது. அழுது அழுது குழந்தையின் தொண்டை கட்டியது. பாவம் அக்குழந்தையின் அதிர்ஷ்டத்தை என்னென்று சொல்லுவது? தாயினிடமோ பாலில்லை. பசுவின் பாலோ, அல்லது ஆட்டின் பாலோ—அதிகமாய்ச் சொல்லுவானேன் — ஒரு துளி ஜலமேனும் அவ்விடம் கிடைக்குமென்ற ஆசையில்லாதிருந்தது. அயாஸோ ஒரு உபாயமு மறியாமற் தவித்தான். கையில் பாத்திரத்தை யேந்தி, ஆகாயத்தை நோக்கிக் கடவுளைத் துதித்தான். "பரமபவித்திர தேவாதி தேவா! இப்பாவி தாசனது அபராதத்தை ஒரு பொருட்டா யெண்ணாது அவனிடம் தயை காட்டக்கூடாதா?" என்றனன். கடவுளைப் பிரார்த்தித்த அச்சமயம் அவன் மனதில் ஒரு எண்ண முதித்தது. தானணிந்திருந்த சட்டையின் ஒரு ஓரத்தைக் கிழித்து அத்துணியால் தனது முகத்தில் முத்து முத்தாய்ப் படிந்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்தான். பிறகு வியர்வையால் நனைக்கப்பட்ட அத்துணியைப் பந்துபோற் சுருட்டி, அதைத் தன் குழந்தையின் வாயினருகிற் பிடித்தனன். பாவம், அஞ்ஞானமே ஸ்வரூபமாயிருந்த அக்குழவியும் அதை ஸ்தனமென நினைத்துப் பால் குடிக்க ஆரம்பித்தது.

கொஞ்சநேரத்திற்கு முன்னால் தன்னுடன் உரையாடிக்கொண்டிருந்த தனது பிரியதமை, எவ்வளவு தான் மன்றாடியும் பேச்சு மூச்சற்றுச் சவமாய்க் கிடந்ததால், அயாஸ் வேறொரு உபாயமுமின்றி அவள் வேண்டிக்கொண்டவாறு கடைசிக் காரியத்தைச் செய்துமுடிக்க எண்ணினான். தனது இருதயத்தையே அவளது நிரந்தரமான வாசஸ்தலமாக ஏற்படுத்தியுள்ள அயாஸின் நேத்திரங்களினின்றும் நீர் தாரைதாரையாக வடிந்தவண்ணமிருந்தது. சூரியன் அஸ்தமித்து அதிகநேரஞ்சென்றிருந்ததால், ஜகமுழுவதும் ஸ்திரமனதுடன் நிச்சப்தமாயிருந்தது. ஜகத்தின் நிச்சப்தத்தைக்கண்ட சந்திர மகாராஜன் புன்னகையுடன் வெளிக்கிளம்பினான். அயாஸ் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தபின், சிறு கூடாரஞ் சென்று, தனது பிரியத்மையின் முகாவலோகனஞ் செய்து நின்றனன். அமீனாவின் முகத்தில் சந்திரனது கோமள கிரணங்கள் கொஞ்சம் விழவே, அவள் புன்னகை புரிவதாகவே அயாஸுக்குத் தோன்றியது. ஏற்கனவே பிரமைகொண்டிருந்த அயாஸ் இதைக்கண்டு பன்மடங்கு பிரமை கொண்டனன். பன்முறை தனது பிரியையின் உடலை ஆட்டி அசைத்துப் பார்த்தான். பிறகு கொஞ்சநேரம் தனது ரமணியின் முகச் சந்திரனையும், அம்புலியையும் மாறிமாறி உற்று நோக்கிய வண்ண மிருந்தனன். இரண்டு சந்திர பிம்பங்களும் அசலமாயும், ஸ்திரமாயு மிருக்கவே, பெருமூச்செறிந்து, "என்னை நிரந்தரமாகத் தியாகஞ் செய்து ஓர் நித்திரைக் குள்ளாயிருக்கிறாயென்பதிற் சந்தேகமில்லை. ஈச்வரா! நான் உனக்கென்ன அபராதத்தைச்செய்தேன்?" என்றனன். மறுபடியும் அயாஸ் சுவாசம் வருகிறதோ வென சமுசயங் கொண்டவனாய் அமீனாவின் மூக்கினருகிற் கரங்களை வைத்துப் பார்த்தனன். ஆனால் அவளது ஜீவன் அவளை விட்டுப் பிரிந்து எவ்வளவோநேரமாயிருந்தது. அவளது அங்கத்தில் உஷ்ணம் கொஞ்ச மேனுமில்லாது, பனிக்கட்டியைப் போல் ஜில்லிட்டிருந்தது. ஆகவே மனதைப் பிளக்கும்படியாக மிக்க உரத்த குரலில், "ஜகதீச்வரா! எனக்குத் துக்கத்தையே கொடுக்க உன் மனதில் நிச்சயித்திருப்பாயாகில் ஒரே நொடியில் எனக்கு மரணத்தைக்கொடு; இந்த ஜன்மத்தில் மறுபடியும் ஒரு நாழிகையாவது அவளுடன்

வார்த்தையாடிச் சுகமனுபவிக்கச்செய்! அனந்த இச்சைகளால் பரிபூரணமாயிருக்கும் பூமாதேவியே! நீயாவது எனது வேண்டுகோளுக் கிரங்கமாட்டாயா?—என்ன?—எனது பிரியையின் ஒரு சத்தத்தை இக்காதாற் கேட்கவே இச்சை கொண்டுள்ளேன்! பிறகு நீ உன்னிஷ்டப்படிக் குசாலாய் அவளை உன்னிடஞ் சேர்த்துக்கொள்!" என்றனன். ஆனால் பூமாதாவோ அவனுக்கு யாதொரு உத்தரமுமுரைக்கவில்லை. ஜனமற்ற பிருதிவியில் சர்வப் பிரதேசமும், 'யதாராஜா, ததாப்ரஜா' என்ற நியாயப்படி மௌனமாகவே யிருந்தது. எங்கும் தனது மனதின்படி உத்தரங் கிடைக்காததால் நிராசைகொண்ட அயாஸ் "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ." சீ! இது ஒருபோதுமாகாத காரியம். தோஷமற்ற இப்பாலிகை நித்திரையிலிருக்கும் பொழுதே செய்யவேண்டிய காரியத்தைச் செய்து முடிக்கவேண்டும்," என நிச்சயித்துக் கடின சித்தத்துடன் தனது பத்தினியின் பிரேதத்தைத் தூக்க முயன்றான். அச்சமயம் ஜனமற்ற அவ்வாரணியத்தில் அவனுக்குத் தைரியஞ் சொல்லித் தேற்றுவார் ஒருவருமில்லை. தானே அழுது கொண்டும், தானே தன் மனதைச் சாந்தப்படுத்திக் கொண்டும் இருக்க வேண்டியிருந்தது. கைகளோ எழவில்லை! மனமோ படபடவென அடித்துக் கொண்டிருந்தது. உதடுகள் துடித்தன. கால்கள் நடுக்கமெடுத்தன. இக்கஷ்டங்களுடன் அயாஸ் அமீனாவின் சவத்தைத் தனியாகவே யெடுத்து அருகில் ஆயத்தமாகச் செய்துவைத்திருந்த குழியில் அடக்கஞ் செய்தனன். பிறகு மகமதிய மதத்தை அனுசரித்துக் கொரானிற் சில பாகங்களைப் படித்தபின், "பிரிய அமீனா! உனதிச்சையை நிறைவேற்றினேன். இனி எனக்கும் துர்ப்பாக்கியையான இப்பாலிகைக்கும் தலையிலெழுதியிருக்கும் வண்ணம் ஆகவேண்டிய காரியங்கள் ஆயேதீரும். வாஸ்தவமாகவே ஒரு விதத்தில் உனக்கு நல்ல மரணமே கிடைத்துள்ளது. இந்த ஜன்மத்தில் உனது சுக சகவாசத்தால் நான் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்தாய் விட்டது. அதிக சுகத்தை அனுபவிக்க யார்தான் மறுப்பார்கள்? ஆனால் 'கர்மப்படி யல்லவோ சுகமும்' என்ற ஈச்வரனதுகட்டளை நமது ஞாபகத்தில் ஏன் நிலைத்திருப்பதில்லை? சம்சாரத்தில் எவ்வளவு நாட்களிருக்கவேண்டியிருக்கிறது? சரி, இருக்கட்டும். ஈச்வரா! நீ அமீனாவின் பவித்திர ஆத்மாவிற்கு நற்கதியைக் கொடுப்பாயாக!" எனப் பகர்ந்து, அக்குழியை மணலை நிரப்பி மூடினான். அமீனாவின் அழகிய உருவமும் அவனது கண்களை விடுத்து மறைந்தது.

தனது பிரிய பத்தினியின் கடைசிக் கடன்களை முடித்தபின் 'குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்ளும்' என்ற அமீனாவின் அந்தியகால வார்த்தைகள் இவனது ஞாபகத்திற்குவந்தன. உடனே தன் குழந்தையைப் படுக்க வைத்திருந்த இடத்தை நோக்கி விரைவாகச் சென்றனன். அக்குழந்தையோ அஞ்ஞானமே உருவாய்த் தனது சிறிய விரல்களை வாயிற் குள்ளிட்டு, நபோ மண்டலத்தில் ஜ்வலித்துக் கொண்டிருந்த நட்சத்திரங்களை உற்று நோக்கி யிருந்தது. இதைக் கண்ட மாத்திரத்தில் அயாஸின் மனதிற் தங்கியிருந்த ச்மசான வைராக்கிய மெல்லாம் இருக்குமிடந் தெரியாது பறந்தது. அமீனாவே பாலரூபத்துடன் அவதாரஞ் செய்துள்ளாளென்ற வேதாந்த எண்ணங்கள் இவனது மனதிலுதித்தன. துக்கம் கொஞ்சங் குறையவே, அயாஸ் தன்னையறியாது நித்திரைக் குள்ளானான். அவனருகிற் குழந்தையும் தூங்கிக் கொண்டிருந்தது. சர்வத்தையும் ரட்சிக்கும் ஈச்வரனே இவர்களைக் காத்து நின்றிருந்தார்.

ஆகா! என்ன கருணைமயமான காட்சி! பீதியை யுண்டாக்கி வந்த ரணபூமியின் ஸ்வரூபம் இருக்கு மிடந்தெரியாது மறைந்தது. சீதளமான காற்று மெல்லென வீசத்தொடங்கியது. பட்சிகணங்களின் மஞ்சுளமான ஸ்வராலாபக்கங்களிலுங் கேட்டது. அதிகக் கஷ்டங்களை அனுபவித்த அயாஸ் 'துக்கத்திற்குப் பிறகு சுகம்' என்ற நியாயப்படி, நித்திரா சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தனன். குழந்தையும் அவனருகில் அதே சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது. இக்காட்சியைக் காணும் யார்தான் மனஞ்சகிக்கவல்லார்?

(தொடரும்.)

பெற்றோர்கள் கவனிக்க.

கொழும்பு ஜனப் அ. நெ. நயினா முகம்மது மரைக்காயர்.

குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையாற்
கல்வியழகே யழகு —(சமணமுனிவர்)

எந்நாட்டினுஞ் சிறந்து பொன்னாடென விளங்கும் நம் இந்திய நாட்டின்கண் தொண்டுதொட்டு நம்முன்னோர்களில் ஆண், பெண் இருபாலார்களும் கல்வி கேள்விகளில் மகா பாண்டித்தியம் பெற்று, கல்வியின் பெருமையையும், கற்பின் மகிமையையும், அவைகளினாலடையும் புகழ்களையும் மிக விளக்கமாகத் தெரிந்துகொள்ளும்படி நிலை நாட்டிப் போந்திருப்பதை நாம் இன்றைய நாளில் பண்டையக்கால நூல்களிலிருந்து மிகத் துலக்கமாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். இவ்விதச் சிறப்புற்றோங்கிய நமது பரத கண்டம் நாளடைவிலேயே கல்வி கேள்விகளிற் பிற்போக்கடைந்தும், நடை நொடி பாவனைகளில் மிகச் சீர் கேடடைந்தும், சிலர் சொல்லொண்ணாப்பல துர்க்கிருத்தியங்களுக்காளாகியும் நம் நாட்டின் பண்டையக்காலப் பெருமை குன்றி வருவதைக் காணப் பெரிதும் கவலை ஏற்படுகிறது. இத்தகைய க்ஷீண தசைக்குக் காரணம் நம் நாட்டில் ஸ்திரீ புருஷர்களான இரு வகுப்பாருக்குள் பெண்களுக்குக்கல்வி கற்பிக்காததேயாம்! தற்போது பல இடங்களில் அனேக சகோதரிகள் கல்வி வாசனையே இன்னதென்றறியாது நிரட்சரகுட்சிகளாயிருக்கிறார்கள். (ஏதோ சிற்சில இடங்களில் அத்தி பூத்ததுபோல் சில பெண்மணிகள் படித்தும், இன்னுஞ் சிலர் பாண்டித்தியம் பெற்று மிருக்கின்றனர்). இவர்களை இத்தகைய பரிதாபகரமான நிலைமைக்காளாகும்படிச் செய்தது அவர்களின் பெற்றோர்கள்தான். குழந்தைகளைச் சிறுவயதிலேயே கலாசாலைக் கனுப்பிக் கல்வி கற்பிக்காமல் உலகமே அறியாத கழுர்துகளாகும்படி வீட்டில் தங்கள் சமீபத்திலிருத்திக்கொண்டு வீண் விளையாட்டிலும், வீண் வம்பு பேசுவதிலும் பிரவேசிக்க விட்டு, சற்று பெரிதானதும் அடுப்பூதும் தொழிலைத் தவிர்த்துப் பிறிதொன்றுமறியாதபேதைகளாக்கி விடுகின்றனர். (வேலை இல்லாத நேரங்களில் விளையாடும் உத்தமமான விளையாட்டுகளையும், நல்ல பெரிய மனிதர்களோடு பேசிப் பழகுவதையும் இங்கே கண்டித்திலேன்). அவ்விதப்பெற்றோர்களிடம் 'உங்கள் சிறுமிகளை ஏன் கல்வி கற்கக் கலாசாலைக் கனுப்பாமல் வைத்திருக்கின்றீர்கள்?' என்று கேட்டால் அன்னவர்கள் முக்கியமாய் 'முஸ்லிம் பெண்கள் படித்ததனால் என்ன பிரயோஜனம்? உத்தியோகம், தொழில் முதலியன செய்யப்போகின்றார்களா? இன்னும் பெண்கள் படித்தால் வீட்டு வேலை செய்யாமல் பல புஸ்தகங்களைப் படித்துக் கெட்டுவிடுவார்கள்" என்று வாய் கூசாமற் சொல்லுகின்றனர். அந்தோ! என்ன விபரீதம், பெண்கள் கல்வி கற்பதனால் பிரயோஜனமில்லையாம்! கெட்டுவிடுவார்களாம்!! என்ன வெட்கக் கேடு! இதைவிட இன்னும் வேறு அறியாமை இவ்வுலகிலுண்டா? எங்காவது சிறுவயதிலேயே நல்ல முறையிற் கல்வி கற்று நல்ல மனிதர்களோடு அண்டிப் பழகிய எந்த நாரீமணிகளாவது கெட்டுப்போய்விட்டதாய்க் கண்டுங் கேட்டுமிருக்கின்றோமா? இல்லையே. இதற்கு மாறாகக் கல்விகற்ற சகோதரிகளைப் பலராலும் புகழக்கூடிய உத்தமிகள் என்று கண்டுங்கேட்டுமிருக்கின்றோம். இவ்வுண்மையைப் படித்தவர்முதல் பாமரர்கள் ஈறாகத் தெரிந்தே இருக்கின்றனர். வேறு சிலரோவெனில் 'ஸ்திரீகள் படிப்பது மார்க்கத்துக்குக் கூடாது. படிப்பதினால் மார்க்கப்பற்று எடுபட்டு வீண்வாசிப்பிலும், பேச்சிலும் காலங்கழிக்க நேரும்' என்று வேதாந்தம் பேசுபவர்களைப்போல் வீண் குதர்க்கம் புரிகின்றனர். இதைக் கேட்கப் பெரிதும் வியப்பும், விசனமு மேற்படுகின்றது. படித்தவர்களுக்கு மார்க்கப்பற்று எடுபட்டுப் போமாம். என்ன மூடத்தனம்! தாய் பாஷையைத் தெரிந்துகொள்ளாமல், மார்க்க விஷயங்களையும், ஒழுக்க விஷயங்களையும், ஆசார விஷயங்களையும் எங்ஙனம் தெரிந்துகொள்வது? முற்காலத்திய உத்தமிகள் எவ்வழியில் தங்களின் கற்பையும், பழக்க வழக்கங்களையும் மிக ஒழுங்காய் நடத்தி வந்து கற்பின் அணிகலனாயும், உத்தம சிரோமணிகளாயும், இக்காலத்தவர்களுக்கு முன்மாதிரியாகவும் விளங்கினார்கள்? அன்னவர்களை அறநனி உகக்கும் அறிஞர்களாகிய பேரறிவாளர்களாய்ச் செய்ததற்கு முதற்காரணம் கல்வியன்றோ? இதைத் தெரிந்து கொள்ளாத பெற்றோர்களை என்னென்று சொல்வது. மற்றுஞ் சிலரென்றாலோ! பெண்களுக்கு ஒரு சிறிது வாசிக்கத் தெரிந்துகொண்டாலும், எழுதத்தெரிந்துகொள்வது அறவே கூடாதென்றும், அப்படி எழுதத் தெரிந்தால் கள்ளக் கடிதங்களெழுதிக் கெட்டுவிடுவார்களென்றும் அன்னார் பிதற்றுகின்றனர். இதைக் கேட்கப் பெரிதும் நகைப்புண்டாகிறது. என்ன ஆச்சரியம்! உத்தமமான மனிதர்களோடு ஊடாடிப் பழகினவர்களோ கெட்டு விடுவார்கள்? இதற்குமாறாகக் கல்வி கற்காதபாமர ஸ்திரீகளிற் பலர் கெட்டவர்களுடன் கூடி அஞ்ஞான அந்தகாரத்துள் வீழ்ந்து பலவித துர்க்கிருத்தியங்களுக்காகித் தங்களின் விலைமதிக்க வொண்ணாக்கற்பென்னும் மாணிக்கப் பொக்கிஷத்தைப் பேணிக்கொள்ளும் வகையறியாது பல்லோர் கண்டு நகைக்கும்படியான பரிதாபகரமான இழிச்சொல்லுக்காளாகி விடுகின்றனர். சில படித்த கீழ்மக்களும் இவ்விதத் துர் நடத்தைக்காளாகின்றனர் என்ற காரணத்தைக் கொண்டு கல்வியை வெறுத்தல் சரியன்று. இத்தகைய கெட்ட நடவடிக்கைகளில் நின்றும் கடைத்தேறி, நல்ல வழியில் பிரவேசிக்கக் கல்வியன்றோ பிரதானமான துணைக்கருவியாயிருக்கிறது! இதைத் தவிர்த்து மேலே சொன்ன வீண் விதண்டாவாதம் புரிபவர்களுடைய மதியீனத்தைக் குறித்துப் பேசவும் வெட்கமாயிருக்கிறது. இவ்விதப் பெற்றோர்களின் கல்வித்திரத்தை, இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே! நீங்கள் ஊகித்துக்கொள்ளுங்கள். பெண்மணிகளுக்குக் கல்வி என்னும் மெஞ்ஞானமிருந்தாலன்றோ அவர்களினது கற்பின் பெருமையும், அதை இழந்தால் நேரிடுங் கெடுதலும் இன்னதெனத் தெரிந்து நல்ல வழியிற் பிரவேசிப்பதோடு, அன்னவர்களின் பெற்றோர்களிடத்தும், மணாளனிடத்திலும், புகுந்திடத்

துள்ள மாமி, நாத்திமார்களிடத்தும் நடந்துகொள்ளவேண்டிய முறைகளையும், ஒழுக்கங்களையும் மிகச் செம்மையாய்த் தெரிந்தும், கற்பின் வெற்றி இன்னதென்றும், அதைப்பேணும் முறை இன்னதென்றும் தெரிந்து அதன்படி ஒழுகித் தெய்வபக்தியிலீடுபட்டுப் பலராலும் புகழக்கூடிய உத்தமி என்றும், கற்பின் அணங்கு என்றும் புகழ் பெறுவார்கள். இன்னும் அவர்கள் பெற்ற குழந்தைகளைச் சீராய் வளர்த்து நன்முறையில் ஒழுகும்படி கற்பித்து அதன் குணங்களைப்பலவகையாலும் சிறப்பிக்க ஏதுவுண்டாகும். இன்னோரன்ன பல காரணங்களுக்கும், ஸ்திரீரத்தினங்களை அவசியம் கல்வி கற்கச் செய்யவேண்டியதிருக்க, பெண் படிக்கக் கூடாதென்றும், ஒரு சிறிது வாசிக்கத் தெரிந்தாலும் எழுதத் தெரிந்துகொள்ளக் கூடாதென்றும் ஓலமிடுவோர்களினது கல்வித்திறமை எத்தகையதாயிருக்கும். இவர்கள் தான் கல்வியின் பெருமையும், புகழும், மகாத்மியமும் இன்னதெனத் தெரிந்துகொள்ளாமல் அவர்களின் சிறுமியர்களைக் கல்வி கற்பிக்காமல் வைத்துக்கொண்டிருக்கின்றார்களென்று வைத்துக்கொண்டாலும், சில படித்த மனிதர்களும் தங்களின் சிறுமிகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டிய விஷயத்தில் ஒரு சிறிதும் கவனமில்லாமல் அசிரத்தையாயிருப்பதுதான் மிகவும் விசனிக்கத் தக்கது. குழந்தைகள் பெரும்பாலும் தாயின் பழக்கவழக்கங்களையே ஆரம்பமுதல் அனுஷ்டித்துவருவதனால் அதைப் போஷிக்கும் தாய்மார்களுக்கு அவசியம் கல்வி இருந்தே ஆகவேண்டும். ஆனதால் போன்பு மிக்க பெற்றோர்காள்! உங்களின் செல்வச் சிறுமிகளைக் காலாகாலங்களிற் கலாசாலைக்கனுப்பி கல்வி கற்பித்தும், வயது முதிர்ந்தும் பெண்களுக்கெனத் தனிப்பட ஏற்படுத்தியிருக்கும் பெண் பாடசாலைக்கனுப்பியோ அல்லது வீட்டில் வைத்தோ உசிதம்போல் கல்வியில் நல்ல பயிர்ச்சியடையும்படியும் செய்யுங்கள். நாகரிகம் முதிர்ந்த இவ்விருபதாம் நூற்றாண்டிற் கல்வியில்லாத பெண்களைக் கொள்வதற்கும் வெறுக்கின்றார்கள். எனவே அத்தகைய வெறுப்பின்றி உகக்கும் பெண்மணிகளாகச் செய்யவேண்டியது உங்கள் கடமை. பெண்களுக்கு முக்கியமாய்க் கல்விவேண்டுமென்ற விஷயமாய் எழுதுவதானால் இன்னும் அதிகமெழுதலாம். நஞ் "சிந்தாமணி" இடந்தராதென அஞ்சி இத்துடன் நிறுத்திக்கொண்டனன். அன்னிய நாடுகளில் ஸ்திரீகளின் கல்வி அபிவிருத்திக்காக ஆங்காங்கே அனேக கனதனவான்களின் முயற்சியாலும் அரசாட்சியாரின் உதவியாலும் பலவசதிகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். நம் நாட்டிலோ அவ்விதம் முயற்சி செய்வோரைக் காணோம். (ஏதோ சிற்சில இடங்களில் ஒரு சிறிது முயற்சி செய்வதாய்த் தெரிகிறது.) பிரதேசப் பெண்மணிகள் முன்னேற்றமடைந்துவரும் தீவிரத்தை நம் தேசத்தவர்களான கனதனவான்கள் ஒரு சிறிது சிந்தித்து ஆங்காங்கே பெண் கல்விக்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி அதிவினயமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். நம் பாரதகண்டத்து வனிதாரத்தினங்களை முன்னிலைக்குக் கொண்டு வருவதற்கான வழிதேடும் பத்திரிகைகளும் விரல்விட்டெண்ணக்கூடிய மிகச் சொற்பமாகவே இருக்கின்றன. அவைகளில் தலை சிறந்து விளங்கக்கூடியதும், பெண்களின் முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாய்க் கொண்டதும், பாரதகண்டத்து வனிதா ரத்தினங்களை உயரிய பழக்க வழக்கங்களுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற பெரும் நோக்கத்தால் அரும்பாடுபட்டுக்கொண்டு முன்னணியில் நிற்பதும் நஞ்சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்களை ஆசிரியாகக் கொண்ட பகற் சூரியனை நம் "சிந்தாமணி" என்னும் அழகிய மாதாரம் பத்தமிழ்ச் சஞ்சிகை ஒன்றுதானென்பதை

ஒருவரும் மறுக்கத் துணியார். இவ்வுயரிய சஞ்சிகை வாயிலாய்த் தென்னாட்டு ஸ்திரீ சமூகங்களுக்கு அரும்பெருந்தொண்டியற்றி வரும் இவ்வம்மையாருக்குநாம் எத்தகையகைம்மாறு செய்தாலும் ஈடாகாது. கல்வி கேள்விகளிற் பாண்டித்தியம் பெற்றுப் பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைத்து அனேக நன்மைகளைச் செய்துள்ள இவ்வுத்தமியாருக்கு நாம் ஒவ்வொருவரும் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். இவ்வம்மையாரைப்பற்றித் தமிழ் நாட்டினற்கு முன்னமே அதிகம் தெரியுமாதலின் நானொன்றும் விசேஷித்துக் கூறவேண்டுவதின்று. வடமொழியில் சிறந்த ஞானமும் தேச கைங்கரியத்தில் ஆழ்ந்த சிந்தையும் அரசியல் விவகாரத்தில் அனுபவமும் பெற்றுள்ள சகோதரி பாலம்மாள் அவர்களால் நடத்தப்பட்டுவரும் இப்பத்திரிகை தமிழ்நாட்டிலுள்ள பெண்மணிகளுக்குச் சிந்தாமணியேயாகும். எனவே இவ்வுயரிய "சிந்தாமணி" நம் நாட்டில் அதிகம் பரவும்படி ஒவ்வொரு ஆடவரும் பெண்மக்களும் முயற்சி செய்தும், சந்தாதாரர்களாய்ச் சேர்ந்தும் ஆதரிக்கும்படி அதிவினயமாய்க் கேட்டுக்கொள்கின்றேன். இது விஷயத்தில் நாம் எவ்வளவு சிரத்தை எடுத்துக்கொள்கின்றோமோ அவ்வளவுக்கும் நம் நாட்டு ஸ்திரீ சமூகம் முன்னேற்றமடையுமென்பதிற் கிஞ்சித்தும் சந்தேகமில்லை. எனவே நம் "சிந்தாமணி"ச் சஞ்சிகை நீடூழி காலம் வளர்ந்தேறிவரும்பொருட்டு இதைச் செம்மையாய் நடத்திவரும் உத்தமியாருக்கும் ஆதரிக்கும் நமக்கும் நோயற்ற வாழ்க்கையையும், சகல பாக்கியங்களையும் தந்து, நம்மனைவரையும் ஒழுங்கான வழியிற் பிரவேசிக்கச் செய்யும்படி, எல்லாம் வல்ல இறைவனைச் சிந்தித்து வந்திப்போமாக!

சுபம்!

மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயண அய்யர்.)

(354-ம் பக்கத் தொடர்ச்சி.)

பதினைந்தாவது அத்தியாயம்.

கூப்ளேகானது பெருமை.

இப்புத்தகத்தில் இப்போது சீனாவை யாண்டு வரும் அரசனாகிய கூப்ளேகான் என்பவர் செய்த மகத்தானவும் அதியத்புதமுமான காரியங்களைப்பற்றி யெழுத உத்தேசித்திருக்கின்றேன். கூப்ளேகான் என்றால் இராஜாதிராஜன் என்று பொருள். உலகத்தில் ஆட்சி செலுத்தி வந்த அரசர் வேறு ஒருவருக்கும், இவருக்கிருந்தபடி, ஜனஸமிருத்தியும், நாடு நகரங்களும், ஐசுவரியமும் இருந்ததில்லை. இவர் தார்த்தார்களின் முதலரசரான செங்கிஸ்கான் வம்சத்தவர். தார்த்தார்களது ஆறுவது அரசர். இவர் கி. பி. 1256-ம் வருஷம் தமது இருபத்தேழாம் வயதில் பட்டத்துக்கு வந்து மிகுந்த ஞானத்துடனும் கௌரவத்துடனும் தனது ஜனங்களை அடக்கி யாண்டு வருகிறார். இவர் மகா சூரர். ஆயுதப்பயிற்சியும், தேகவலிவும், உயர்ந்த எண்ணங்களுமுடையவர்; தமது உத்தம குணங்களாலேயே தமது தாயாதியாரை வென்று பட்டத்துக்கு வந்தவர். யுத்தத்தில் இவர் எவ்வளவுதாமோ தமது பராக்கிரமத்தைக் காட்டியிருப்பதுமன்றி, தார்த்தார்களது தளகர்த்தர்கள் எல்லாரிலும் இவரே அதிபுத்திசாலியும் தைரியசாலியுமென்று எல்லா

ரும் சொல்லுமாறு நடந்துகொண்டிருக்கிறார், ஆனால் பட்டத்துக்கு வந்தபின் இவர் ஒரே ஒரு தரந்தான் நேராக யுத்தத்துக்குச் சென்றார். தற்போது யுத்தம் நேர்ந்தவிடத்துத் தமது மக்களையும் வேறு தளகர்த்தர்களையும் அனுப்பி வருகிறார்.

1286-ம் வருஷத்தில், அனேக ஜனங்களுக்கும் தேசங்களுக்கும் அதிபதியும் எளிதில் நாலு லட்சம் ஜனங்களுள்ள படையைச் சேர்க்கக் கூடியவனுமாயிருந்த முப்பது வயதுள்ள "நேயம்" என்ற கூப்ளேகானது சிற்றப்பன் வாலிபப்பெருமை மேலிட்டு, அடங்கியிராமல், கூப்ளேகானிடமிருந்து அவரது ராஜ்யத்தைப் பிடுங்க நினைத்து கூப்ளேகானுக்கு மருமகனும் அவருக்கு விரோதியுமான சையது என்னும் பெரிய துருக்கியரசனுடன் சதியாலோசனை செய்தான்.

இந்த சையது கூப்ளேகானுக்கு விரோதமாகக் கலகஞ் செய்வதாக வுடன்பட்டு ஒரு லட்சம் குதிரைகளைத்திரட்டிக்கொண்டு தானே நேரில் யுத்தத்துக்கு வருவதாகவும் ஒப்புக்கொண்டான்.

கலகக்காரர்கள் இருவரும் தங்களது சேனைகளைத்திரட்ட ஆரம்பித்தனர். இவர்களது பிரயத்தனங்கள் ரகசியமாயிராததினால், அவைகள் கூப்ளேகானுடைய காதுக்கும் எட்டின. எட்டின அந்த க்ஷணமே, அவர், தனது நடவடிக்கைகள் வெளியே தெரியாமலிருப்பதற்காக, வழிகளில் காவலாளர்களை வைக்கும்படி நியமித்து, காம்பலு நகரத்துக்குப் பத்து நாள் பயணத்திலுள்ள வீரர்களையெல்லாம் அதிசீக்கிரமாகத் திரட்டி இருபது நாட்களுக்குள்ளாக மூன்று லட்சத்து அறுபதினாயிரம் குதிரை வீரர்களையும் ஒரு லட்சம் காலாட்களையும் சேர்த்தார். இந்தச் சேனையில் வல்லூறுகளைக் கொண்டு வேட்டையாடுவோரும் அரண்மனை உத்தியோகஸ்தரும் அனேகர் இருந்தனர். கூப்ளேகான், இந்தப் பெருத்த சேனையுடன், இருபத்தைந்து நாள் வெகு விரைவாகவும், இரவுபகலாகவும் வழி நடந்து கடைசியாகத் திடீரென்று நேயத்தின் நாட்டுக்கு வந்து சேர்ந்து அங்கு பாளையமிறங்கி இரண்டு நாட்களிளைப்பாறினர். பின்பு தம் சேனைகளின் எதிரில் தம் சோதிடர்களை வரவழைத்து மேல் நடக்கவிருந்த யுத்தத்தில் யாருக்கு ஜயம் வருமென்று கேட்டார். அவர்கள் "கூப்ளேகானுக்குத்தான் ஜயம்" என்றனர். தங்களது சைனியங்களுக்கு உற்சாகமூட்டுவதற்காகக் கீழ்நாட்டரசர்கள் இவ்வாறு சோதிடர்களைக் குறிகேட்பது வழக்கம்.

ஒருநாட் காலையில் நேயம், வர்த்தமானங்களறிவதற்குக் கூடச் சாரணரை விடுக்காமல் தனது கூடாரத்தில் கவலையின்றித் தூங்கிக்கொண்டிருக்கையில், கூப்ளேகான், தமது சேனையை ஒரு மலையின்மேல் அணிவகுத்து நிறுத்தி, தாம்மாத்திரம் நான்கு யானைகள் பூட்டிய வில்லாளிகளும் வேடரும் நிறைந்த ஒரு மரக்கூட்டில் உட்கார்ந்துகொண்டார். இக்கூட்டிற்கு சூரிய சந்திரர்களது பொம்மைகளெழுதிய அரசனது கொடி கட்டப்பட்டிருந்தது. கூப்ளேகான் தமது சேனைகளை மூன்று பாகங்களாகப் பிரித்து, வலது பக்கமும் இடப்பக்கமும் இருந்தவற்றை நேயத்தின் சேனையுடன் போர் புரியும்படி விடுத்தார்.

பதினாயிரம் குதிரை வீரருள்ள ஒவ்வொரு பிரிவிற்கும் ஈட்டிபிடித்த ஐந்நூறு காலாட்கள் துணைவர்களாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். இவர்கள், பின்னடையவேண்டி வந்தபொழுது குதிரை வீரரின் பின்புறம் பாய்ந்து குதிரைகளின் மேலேறவும், பின்பு தருணம் வாய்த்தபொழுது திடீரென்று கீழே குதித்து ஈட்டி

யால் எதிரிகளின் குதிரைகளைக் குத்திக் கொல்லவும் பயின்றவர்கள்.

இதுவரை சையது வரவில்லை. யுத்தம் ஆரம்பித்து, சூரியோதய முதல் மத்தியான்னம் வரை நடந்த கொடுஞ் சண்டையில் நேயம் தோல்வியடைந்து, பிடிக்கப்பட்டுக் கூப்ளேகானிடம் கொண்டுவரப்பட்டான். அப்போது கூப்ளேகான், ராஜ வம்சத்தைச் சேர்ந்த நேயனது உடல், வெயிலிலும் காற்றிலும் அடிபடலாகாதென்றெண்ணி, அவனை இரண்டு கம்பளிகளிற் சுற்றித் தைத்து, அவனது உயிர் உடலைவிட்டு அகலும்வரை அப்பையை மேலுங் கீழுமாகக் குலுக்கிச் சுற்றும்படி ஆக்ஞாபித்தார்!

நேயனது கட்சியில் மீந்திருந்த கியாஜா கார்லி, பார்ஷால், சிடிங்கி ஜாதியார் கூப்ளேகானுக்குக் கீழ்ப்படிந்தனர்.

நேயம் இரகசியமாக ஞானஸ்நானம் பெற்று, பேருக்குமாத்திரம் கிறிஸ்தவனாகவிருந்தான்; ஆசாரங்களை அனுஷ்டித்தவனல்ல. எனினும், தனது முக்கியமான கொடியில் சிலுவையின் உருவை வரைந்திருந்தான். அவனையனுசரித்துவந்த கணக்கற்ற கிறிஸ்தவர்கள் அனைவரும் இந்த யுத்தத்தில் உயிர் துறந்தனர்.

சிலுவைக்கு இவ்வாறு நேர்ந்த தோல்வியைக் குறித்து, கூப்ளேயின் சைன்னியத்திலிருந்த ஸரேஸர்களும், யூதர்களும், கிறிஸ்தவர்களை நிந்திக்கத் தொடங்கினார்கள்; அப்பொழுது கிறிஸ்தவர்கள் கூப்ளேயிடஞ் சென்று முறையிட்டனர். அவர், யூதர்களையும் ஸரேஸர்களையும் அக்ஷணமே கண்டித்து, கிறிஸ்தவர்களைப் பார்த்து "உங்களது தெய்வமாவது அவரது சிலுவையாவது நேயத்திற்குதவி செய்யமாட்டாதென்பது நிச்சயம். இதனால் உங்களுக்கு ஒருவிதமான அவமானமுமில்லை. ஏனெனில் கடவுள், நற்குணமும் நீதியுமுடையவராதலின், அநீதியையும் அக்கிரமத்தையும் ரட்சிக்கமாட்டார். நேயம் தெய்வத்தை வஞ்சித்தவன். நீதியை முற்றுந்துறந்தவன், எனக்கு விரோதமாகக் கலகஞ் செய்து, தான் சங்கற்பித்த தீங்குகளை நிறைவேற்றுவதற்காக உங்களது கடவுளின் உதவியை வேண்டினான். கடவுள், நற்குணமும் நீதியுமுள்ளவராதலால், அவனது உத்தேசங்களை நிறைவேற்றவில்லை," என்றார்.

பின்னர், அவர் மிகுந்த பெருமையுடன் கம்பலுவுக்குத் திரும்பி வந்து, அங்கு ஈஸ்டர் வரை தங்கினார். அன்றையதினம், அவர் கிறிஸ்தவர்களைத் தம்மிருப்பிடத்திற்கு வரவழைத்து, அவர்களது மதக்கிரந்தங்களை முத்தமிட்டுத் தனது பிரபுக்களையும் அவ்வாறே செய்யும்படி நியமித்தார்.

ஸிகோ மெம்பர்கானும், விக்கிரகங்களின் தெய்வமும், மஹமதுவும், மோஸஸ்ஸும், மற்றும் விண்ணுலகத்தில் மிகப்பெரிய பதவியிலிருக்கும் வேறு தேவர்களும் தன்னை ரட்சிக்குமாறு இவர், ஸரேஸர்கள், யூதர்கள், விக்கிராராதனைக்காரர்கள் ஆகிய இவர்களது திருவிழா நாட்களிலும் இவ்வாறு செய்வது வழக்கம். ஆயினும், தனக்குக் கிறிஸ்தவ மதத்திற்றான் அதிகப் பற்றுண்டென்பதை அவர் பலவாறாகத் தெரிவித்தார். மாந்திரிகர்கள் செய்த மாயத்தினால், இவர் அம்மதத்தை வெளிப்படையாக அனுஷ்டிக்கமுடியாமற் போயிற்று. ஆதலால், நெஸ்டோரியக் குருக்களைப்போல் அஞ்ஞான பாவனையுடன் இருந்து வந்தார்.

தமது சைனிகர்களது திறமைக்குத் தக்கபடி வெகுமானஞ் செய்வதற்காக, கூப்ளேகான் பனிரண்டு கனவான்களும் புத்திமான்களுஞ் சேர்ந்த ஒரு சபையை ஏற்படுத்தினர். இந்த

சபையார் பிரதி வீரனுடைய பிரதாபங்களையும் அப்போதைக்கப்போது அரசனுக்குத் தெரிவித்து வந்தனர். அரசனும், அவர்களது தீர்மானத்தையும் சிபார்சையும் அனுசரித்து நூறு சேவகர்களின் தலைவனை ஆயிரஞ் சேவகருக்குத் தலைவனாகவும், ஆயிரம் சேவகரின் தலைவனைப் பதினாயிரஞ் சேவகருக்குத் தலைவனாகவும், அவ்வாறே பின்னு முயர்ந்த ஸ்தானங்களுக்கும் உயர்த்தி வந்தார். அன்றியும் அவர்களுக்குத் தகட்டினாற் செய்யப்பட்ட பத்திரங்களையும் பட்டயங்களையும் அளித்து வந்தார். நூறு சேவகரது தலைவனுக்கு வெள்ளிப்பட்டயம் கொடுப்பார். ஆயிரத்தானுக்குப் பொற்பட்டயமோ அல்லது பொன்முலாம் பூசிய வெள்ளிப்பட்டயமோ கொடுப்பார். பதினாயிரத்தானுக்குச் சிங்கத்தலை வெட்டிய பொற்பட்டயங் கொடுப்பார். இப்பட்டயங்களின் கனமும் அந்தஸ்துக்குத் தகுந்தபடி வேறுபட்டிருக்கும்.

இப்பட்டயங்களில் பின்வரும் அரசனது ஆணை வெட்டப்பட்டிருக்கும்:—

"மகேச்வரனது ஆதாரவினாலும், சக்தியினாலும், அவர் நமது ராஜ்யத்திற்குச் செய்திருக்கும் கருணையினாலும், நமது அரசரது பெயர் நீடூழி விளங்கக்கடவது. அவரை வணங்காதவரெல்லாம் மண்ணோடு மண்ணாகக் கடவர்." இவ்வாறு பட்டயம் பெற்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் தாங்கள் இன்னின்ன மரியாதைகள் பெறலாம் என்ற விவரங்கள் எழுதப்பெற்றுள்ள அதிகாரப்பத்திரங்களும் பெறுவார்கள்.

தளகர்த்தர்கள் பவனி வருகையில் ஜனங்கள் அவர்களது தலைக்குமேல் துணி பிடித்துச் செல்வார்கள்; சபையில் அமருகையில் அவர்கள் வெள்ளிச் சிங்காதனத்தில் உட்காருவார்கள்; அவர்களது பட்டயம் முன்னூறு ஸாகி அல்லது ஐம்பது அவுன்ஸ் பொன் நிறையுள்ளது. அதில் சூரிய சந்திரர்களது பிம்பங்கள் வெட்டப்பட்டிருக்கும்.

சிலருக்கு வல்லூறின் பிம்பம் பதித்த பட்டயங்களும் அரசன் அளிப்பதுண்டு. இப்பட்டயக்காரர்கள் தங்களது பாதுகாப்புக்காக ஒரு மகா தளகர்த்தனது பெருஞ் சைன்னியத்தையும் கொண்டு செல்ல உரிமை பெற்றவர்.

கூப்ளேகான் சுந்தரமான அழகுடையவர். நடுத்தரமான உயரமும், வாடாத முகமும், கருத்த ஒளி வீசும் கண்களும், அழகான மூக்கு முடையவர். அவருடைய தேகத்தின் அங்கங்களெல்லாம் பொருத்த முடையவையாயிருக்கின்றன.

இவருக்கு நான்கு பட்ட மகிஷிகள் உண்டு. இந்நால்வரும் தர்மபத்தினிகள்தான். இவர்களுக்கு முதலிற் பிறக்கும் இராஜகுமாரனே கூப்ளேக்குப் பின் பட்டத்துக்கு வரக்கூடியவன். இந்நான்கு பத்தினிகள் ஒவ்வொருத்திக்கும் மகாராணி யென்று பெயர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வோர் அழகான அரண்மனையிலிருந்து கொண்டு சர்வமங்களங்களுடன் விளங்கி வருகின்றனர். அந்த அரண்மனைகள் ஒவ்வொன்றிலும் இராணிகளுக்குத் தோழிகளாக முன்னூறு ஸ்திரீகளும் ஊழியஞ் செய்ய அனேகம் நபும்சகர்களும் அவர்களைச் சேர்ந்த பதினாயிரத்துக்குக் குறையாத பரிஜனங்களும் இருக்கின்றார்கள்.

சக்கரவர்த்திக்கு வைப்பாட்டிகளும் அனேகர் இருக்கின்றனர். தார்த்தார்களுக்குள், 'விர்கூட்' என்ற பெயருள்ள அதிசுந்தரமான ஒரு ஜாதியாரிருக்கின்றனர். அவர்களில் அழகிற் சிறந்த சிறு கன்னிகைகளைத் தம் அந்தப்புரத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பிப்பதற்காக கூப்ளேகான், இரண்டு வருஷத்திற்கொருதரம் தமது தூதர்களை அனுப்புவது வழக்கம். அவர்கள் திரும்பி வருகையில் தங்களுக்குக் கிடைத்த சுமார் நானூறு அல்லது ஐந்நூறு கன்னிகைகளை அரண்மனைக்குக்

கொண்டு வருவார்கள். அப்போது அங்குள்ள சாமுத்திரிகாலக்ஷண பரீக்ஷையில் தேர்ந்த உத்தியோகஸ்தர்கள் இக்கன்னிகைகளின் கண், மூக்கு, வாய் முதலிய அங்கங்களின் அழகுகளை மறைவான இடங்களில் பரீக்ஷித்து அவரவர்களது அழகுக்குத் தக்கபடி பதினாறு மாற்று, பதினேழு மாற்று, பதினெட்டு மாற்று, பத்தொன்பது மாற்று, இருபது மாற்று, அல்லது அதற்கும் மேலான மாற்று என்று விலை மதித்து அரசனது கட்டளைப்படி அவர் கோறிய விலைபெற்ற கன்னிகைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

இப்படிப் பொறுக்கி யெடுத்த கன்னிகைகளில் மிகச் சிறந்த முப்பது பெயர்களைத் தமது அந்தப்புரத்திற்காகப் பொறுக்கி யெடுக்கும்படி கூப்ளேகான், முன் சொல்லிய பரீக்ஷகரினும் தேர்ந்த வேறு உத்தியோகஸ்தர்களை நியமித்து அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் தமது பிரபுக்களின் மனைவிமார்களைக் கொண்டு அவர்கள் தூக்கத்தில் குறட்டை விடுகின்றார்களா, அல்லது ஒழுக்கத்தில் குறைந்தவர்களா வென்று பரீக்ஷை செய்வார். இவ்வாறு இப்பரீக்ஷைகளிற் தேர்ந்தவர்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் தமதந்தப்புறத்தில் அகோராத்திரம் மும்மூன்று நாட்கள் முறையாகப் பணிவிடை செய்யும்படி நியமிப்பார். மீந்தவர்கள் அரண்மனையைச் சேர்ந்த அடுத்தாற்போலுள்ள வேறு கட்டடங்களில் இருந்து கொண்டு முறைக்காரருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வார்கள்.

கூப்ளேகானது கடாக்ஷம் பெறாத அதிர்ஷ்டங்குறைந்த மங்கையர் சமயல் முதலிய ஊழியங்களைச் செய்ய நியமனம் பெறுவார்கள். இவர்களை கூப்ளேகான் ஓரோர் சமயத்தில் தமது பெரிய மனிதர்களுக்குப் பெருத்த சீதனங்களுடன் கொடுப்பது முண்டு.

அரசனது மனதுக்கிசைந்த பெண்களைப் பெறுவதே தங்களுக்கு மேன்மையைக் கொடுக்கக் கூடியதென்றும், அரண்மனைக்கு அனுப்பப்பட்ட தங்களது பெண்கள் அங்கு சேர்த்துக் கொள்ளப்படாமற் போய்விட்டால் அது தங்களது துர்ப்பாக்கிய மென்றும் இன்னாட்டார் கருதி வருகின்றனர்.

தமது நான்கு பட்ட மகிஷிகளிடத்தில் கூப்ளேகான் இருபத்திரண்டு குமாரர்களைப் பெற்றார். அவர்களில் மூத்த பட்டமகிஷியின் மூத்த குமாரனுக்கு ஜிங்கிஸ் என்று பெயர். இவன் தன் தந்தைக்கு முன்னதாகவே காலஞ் சென்று விட்டதனால் பட்டத்துக்குவர முடியவில்லை. ஆனால் அவன் வீரமும் ஞானமும் ஆயுதப்பயிற்சியுமுள்ள டைமர் என்னும் பெயருடைய ஒரு மகனை வைத்துவிட்டுக் காலஞ் சென்றான். அவன்தான் தன் பாட்டனுடைய ஸ்தானத்திற்கு வருவான்.

கூப்ளேகானுக்குத் தமது வைப்பாட்டிகளிடத்திற் பிறந்த இருபத்தைந்து வேறு பிள்ளைகளுமுண்டு. அவர்களெல்லாம் தினமும் ஆயுதப் பயிற்சி செய்துகொண்டு பெரிய பிரபுக்களாக விளங்கிவருகின்றனர்; அவரது பட்ட மகிஷிகளிடம் பிறந்த ஏழு குமாரர்களும் வெகு கீர்த்தியுடன் பெருத்த மாகாணங்களின் அரசர்களாக விருக்கின்றனர்.

(தொடரும்.)

என் பிரியசகீ, சிந்தாமணீ!

ஸ்ரீமதி பண்டிதை ந. பத்மாசனி அம்மாள்.

நேரமோ அர்த்தராத்திரி, பன்னிரண்டு மணி வேளை. இல்லினுள்ளோர் யாருந்துயின்றனர். நாய்களுந்துயின்றன. பூஞ்சோலைகளில் வாழ்கின்ற பலவகைப் புள்ளினிட்டமுந் தாந்தாந்துயிலுமிடங்களிற் சென்றொடுங்கின. கிளி, பூவை பேசாதொழிந்தன. கோகிலங்கள் கூவுதலை யொழிந்தன. அன்னம், தாரா, புறா, மயில் ஆகியயாவும் யோகியர் போன்றமைந்தடங்கின. பூமிதேவி சூரியதேவனாலுண்டான வெப்பத்தை மென்மெல வெளிக்கான்று தண்ணெனக்குளிர்ந்தனள். கொடுங்கோலரசன் கீழ் வாழ்ந்த குடிகள்போற் சூரிய வெப்பத்தால் வாடித் தலை வணங்கிய தென்னை, கமுகு, பலா, மா ஆகிய மரங்கள் நெருங்கிய சோலைகள், செங்கோல் வேந்தனாகிய சோமராசன் (சோமன்-சந்திரன்) வரவைக்கண்டு, தந்தலைகளை நிமிர்த்திக்கொண்டு தமதிறைவனுக்கு நல்வரவு கூறுகின்றன. மாம்பூக்களலர்ந்து தேனைப்பிலிற்றுகின்றன. கமுகம் பாளைகள் விரிந்து பரிமளகந்தத்தைப் பரப்பின. மல்லிகை, முல்லை, மாதவி யாகிய கொடிகளிலரும்பிய மொட்டுக்கள் மென்மெலவலர்ந்தன. அப்புஷ்பங்களிலுள்ள புதுந்நறவையுண்ட களிமயக்கால் வண்டினமுந் தும்பிக்கூட்டமும் அப்பூம்பள்ளிகளிற்றுயிலாநின்றன. நீர் நிலைகள் சந்திர கிரணங்களால் நீலவாகாயம்போற் பிரகாசிக்க, அவற்றினிடையே சந்திரனுடைய பிரதிவிம்பமும், அல்லி, குமுதம், உற்பலம் ஆகிய பன்மலர்களும் அலர்ந்து விளங்குந் தோற்றமும் சேர்ந்து, சந்திரனுந் தாரகணங்களும் ஆகாயத்துடனே பூமியில் வந்து வதிந்தாற்போன்றன. தாமரைத் தடாகம் கூம்பிய மலர்களுடன் விளங்குந் தோற்றம், காயாமலர் வண்ணனாகிய திருமால் அறிதுயிலமர்ந்த தோற்றம் போன்றது. இருட் கூட்டங்கள் பொதும்பருட்புக்கு மறைந்தன. நீர்நிலைகளிலும் சோலைகளிலுமளாவிய தென்றற்காற்றானது வாசனையை யெவ்விடமும் பரப்பி அதிசீதளத்துடன் மென்மெல வீசியது. எவ்விடமுந்துயில், எங்கும் அமைதி. திருடர்களென்ன வெளவால்களும் ஆந்தைகளும் அந்தமிக்கும் பறந்து இரைதேடலாயின. ஆகா! இதுவென்ன விந்தை, இருளாகிய கேசமும், சந்திரனாகிய வதனமும், மாந்தளிராகிய மேனியும், காந்தண் மலர் கருங்குவளைமலர், ஆம்பன் மலர், தாமரை முகை, முல்லையரும்பு, குமிண்மலர் ஆகியவாகிய பிறபல உறுப்புக்களையுங்கொண்டு, இவ்வேகாந்தமான வேளையில் ஒரு பெண் கொடியின் தோற்றமென் கண்ணுக்குப் புலப்படுகின்றதே.

ஏ! மனமே, இதுவென்ன தோற்றம், இயற்கைத் தேவியின் கோலமோ; உருவெளித்தோற்றமோ, அன்றி உண்மையின்படியோர் பெண் கொடிதானோ? துயிலினாலொடுங்கியெவ்விடமும் நிச்சத்தமாயிருக்குமிவ்வேளையில், என்னுடைய வேகாந்த விடத்தில் வரத்தகுந்தவர் யார்? இந்நங்கை என் பிரியசகியாகிய சிந்தாமணியே; இவ்விதமான அழகிய ரூபத்தையுடையார் என் சகியே யன்றி வேறெவருமின்று.

என் பிரிய சகீ, சிந்தாமணீ; கேவலம் ஓர் சிறு கன்னிகையை விரும்பித் திருமயிலாப்பூரினின்றும் புறப்பட்டுப் பற்பல வூர்களையுஞ் சமுத்திரத்தையுந் தாண்டி எவ்விடமுந் துயிலால் அமைதியுற்றிருக்கு மிவ்வர்த்தராத்திரி வேளையில் என் கண்முன்வந்து நிற்கின்றனை. வரும்வழியில் எவ்வளவு சங்கடப்பட்டனையோ வறியேன்.

என் அன்புக்கினிய ஆரமிழ்தே! நின் அன்பல்லவோ அன்பு. என் இன்பமே! இவ்வன்பையன்றோ காதலெனவும் இதனாற்றோன்று மின்பத்தை யன்றோ காதலின்பமெனவும் உயர்ந்தோருரைப்பர். காதலின்பத்தை யறிந்தவரன்றோ அறிந்தோர். காதலின்பம் என்னுஞ் சொல்லினைப் பலருமறிவர். ஆனால் அதன் உண்மையை யறிந்தவர் சிலரினுஞ் சிலரன்றோ. இது இம்மட்டில் நிற்க.

ஏ, சுந்தரவதனீ! நீ பற்பல வூர்கடோறுஞ் சென்று, நின் சகோதரிகட்கு நல்லறிவைப் புகட்டுகின்றனை. நின் மலர்ந்த முகத்தாலும் இன்மொழியாலுமன்றோ நின்னைப்பல்லோரும் பாராட்டுகின்றனர். நின்னையொத்த வனிதாரத்நங்களையன்றோ நம் தமிழணங்கு மிக மிக விழைகின்றனள். நீ யன்றோ தவத்தின் கொழுந்து; நின்னைப்பெற்றவளன்றோ பாக்கியசாலி. நின் முகத்தின் முன்னே நின்னைப் புகழ்தல் முகஸ்துதியாகுமானாலும் நின் புகழை யுலகத்தோர் யாருமுணர்வர். நீயுமுணர்வை ஆதலால் யான் கூறுதல் முகஸ்துதியாகாது. என் மனதுக்கினிய சீரியமணியே; யான் இவ்வேகாந்தமான விடத்தில், அர்த்தராத்திரி வேளையில் என் கண் முன்னர்த்தோன்றும் இயற்கைப் பொருட்களையுற்று நோக்கினேன். அக்காலையில் என் உள்ளத்தில் ஒருவிதமான ஆழ்ந்த சிந்தனையுண்டாயது. அதனை நினக்குரைப்பேன் கேட்பாயாக. என் இளங்கொடியே, இவ்வியற்கைத் தோற்றங்களைப் பாராய். இவைகளெல்லாம் நம்நாட்டு வனிதாரத்னங்களைப்போன்று விளங்குகின்றனவல்லவா? அலர்ந்து விளங்கும் புஷ்பங்களும், மென்மெலவாயவிழ்கின்ற பாளைகளும், கூம்பியிருக்கும் புஷ்பங்களும் நம் சகோதரிகளின் நிலைமையைப் புலப்படுத்துகின்றனவல்லவா? அன்பு, தயை, இரக்கம் ஆகிய நற்குணங்களுக்கெல்லா முறைவிடமாய் விளங்கும் நம் சகோதரிகளுடைய நிலைமையென்னே. எத்தனைச் சகோதரிகள் நன்னிலையிலிருக்கின்றனர். சுதந்தரமின்றி அடிமைகளாய் வாழ்வார் சிலர். இன்மை மறுமை யின்பங்களுக் குரிமையில்லாதவராய்உண்ணுதலுமுறங்குதலுமே தொழிலாய்க் கொண்டிருப்பார் சிலர், கேவலம் மிருகத்தன்மை வாய்ந்திருப்பவர் சிலர். தொழில் செய்யும் இயந்திரங்கள் போல் வீட்டு வேலைகள் மாத்திரஞ்செய்துகொண்டிருப்போர் சிலர். என்னே நமது சமூகத்தின் நிலைமை.

நமது கண்முன்னே தோன்று மியற்கைப் பொருள்களெல்லாம் தத்தம் மனம்போல் இன்பத்துடன் வாழ்கின்றன. நம் சமூகத்தவர்களில் இன்ப வாழ்க்கையையுடையார் சிலரினுஞ் சிலரன்றோ.

எம் சகோதரிகள் தம் துன்பத்துக்கேதுவான நிலையைக் கண்டல்லவோ நுண்ணறிவுடையோர்தம் மனம்போல் விரிந்திருக்கும் புஷ்பங்களெல்லாந் தேன் துளிகளாகிய கண்ணீரைச் சொரிகின்றன. எமது தோற்றங்கள் இயற்கைப் பொருளில் வியாபித்திருத்தலைக் காண்கின்றோமல்லவா? இவ்வியற்கைத் தோற்றங்களைக் கண்டு மகிழ்பவர் நம் சமூகத்தைக் கேவலமாகக் கருதி வெறுத்தொழிவார்களா? உலகத்தை யழகு செய்யும்பொருட்டுக் கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட வியற்கையழகுப் பொருட்களில் நமது பெண் சமூகமு மொன்றல்லவா? கடவுளும் தமது சக்தியாகிய பெண்ணைக் கொண்டல்லவோ இப்பிரபஞ்சங்கள் யாவையுமுண்டு பண்ணினர். உலகைத் துறந்த முழுஞானிகளுஞ் சத்தினி பாதத்தாலல்லவோ முத்தி நிலையடைகின்றனர்.

இவ்வனமெல்லாமிருப்பவும் நமது சமூகம் இவ்வித கேவல நிலையிலிருப்பதற்குக் காரணமென்ன? பெண்மக்கள் கல்வியறிவு குன்றிச் சித்திரப் பொம்மைகளாய், தொழில் செய்யும் இயந்திரங்களா யிருக்கின்றமை யல்லவா? தேசம் முன்னேறவேண்டுமென்னும் ஒருவித நூதன சக்தி தோன்றிப் பல்லோரையும் ஊக்கப்படுத்திக்கொண்டு வருமிக்காலத்திலும் நமது சமூகத்தைக் கேவலப்படுத்துபவரும் இல்லாமலில்லை.

இவர்கள் "தாயுமான சுவாமிகள், பட்டணத்தடிகள், அருணகிரிநாதர் ஆகியஞானிகளெல்லாம் பெண்களை வெறுத்தமையாலன்றோ பேரின்பத்தை யடைந்தனர். ஆதலால் நாமும்(சொல்லளவில்) வெறுத்தால் பேரின்பத்தை யடையலாம்" என்னும் மூடத்தனமான நோக்கத்தை யுடையவர்களே. இவர்களைப் பேதையரிலெல்லாம் பேதையர்களென்றே நல்லறிவாளருரைப்பர். பட்டணத்தடிகள் முதலான ஞானியர் உண்மையின்படி பெண்களை வெறுத்தாரல்லர். அவர்களருளிச் செய்த பாடல்களை ஆராய்ந்து பார்க்குமவர்க்கு உண்மை புலப்படும். அவர்கள் தம் மனத்திற் றோன்றிய மிருகத்தன்மை வாய்ந்த பெண்ணாசையை நீக்குதலையே பொருளாகக் கொண்டு கவிகள் புனைந்தனர். அவர்கள் பெண்களாகிய இயற்கையழகுப் பொருளிற் றோன்றும் கடவுட்டன்மையைக் கண்டனரென்பதை யவர்கள் பாடலினாலேயே யுணரலாம்.

நாயன்மார், ஆழ்வார் ஆகிய மெஞ்ஞானியர் பலரும், இறைவனைப் பாவுங் காலையில், ஆறு, கடல், மலை, சோலை, காற்று, பட்சி சாலம், மிருகம் ஆகிய இயற்கைத் தோற்றங்களோடு பெண்களையும் ஒன்றுபடுத்தி அவைகளிலே கடவுளுடைய திருவுருவத்தைக் கண்டு வழிபட்டு இன்ப நிலையை யடைந்தனர்.

தம் மனத்தைத் தாம் அடக்கி நல்வழியில் நடத்திக்கொள்ள வியலாது, எய்தவனிருக்க அம்பை நோகுமாறுபோல், தெய்வச் சொரூபங்களாக விளங்கும் பெண்களைப் பழித்து மேடைகளிற் சொற்பொழிவு நிகழ்த்துபவருக்கும், நூல்களியற்றுபவர்க்கும் என்னுரைப்பேம்! இயற்கைத் தோற்றங்களாகிய அறிவு நூல் எங்களைவருடைய கண்களுக்கு முன்னேயிருக்கின்றது. ஆனால் அதன் தன்மையையுள்ளவாறுணர்ந்தவர் சிலரினுஞ் சிலரே. பெண்களைப் பழித்தலாற்றம்மை ஞானியரென உலகர் புகழ்வரென நினைந்து, பல்லோருந்துயிலமருமிந்த அர்த்தராத்திரியிலும் யாம் தொழில் செய்கின்றோமெனக் காட்டுதல்போல் இவ்வந்தரவெளியிற் பறந்து திரியும் வௌவால்களையும் ஆந்தைகளையும்போல, தம்மைத் தாமுணராது வீணே பிதற்றித் திரியும் பேதையர்களுக்காக நாம் வருந்துவதன்றி இவர்களைப் பழித்துரைக்கமாட்டோம். வௌவால்களும் ஆந்தைகளும் பகற் குருடாயிருத்தலை யாவருமுணர்வர். ஆங்கதேபோல் இப்பேதையர்தங் குருட்டுத்தனத்தையும் உலகமறியும்.

நாமிவர்களைப் பழித்துரைக்கவேண்டுமானாலேறின மேடைகளினின்று மிறங்காமலும், எழுதிய கையோயாமலும், பேசவும், எழுதவுங்கூடும். ஆனால் நாம் இவ்வித மறச் செய்கைகளைச் செய்ய முன்வரமாட்டோம். கேட்டனையோ சிந்தாமணீ, நம் சமூகத்தின் நிலைமையை! நிசிசாம சங்கீதனும் (நிசிசாம சங்கீதனன் = இரவிற் பாடும் பட்சி) தன் கீதத்தை யாரம்பித்தான். என் கண்களுந் துயிலலைப் பொருந்துகின்றன. ஆதலால் இப்பேச்சினையிம்மட்டில் நிறுத்துவோம். என் உள்ளத்துறையும் பொன் மணியே! கருமேகங்களினிடையிற் றோன்றுகின்ற இச்சந்திரன்போன்ற நினது செவ்விய முகத்தாலும், இச்சோலைகளில் துளிக்கின்ற தேன்போலும் மதுரமான நின்வாக்குகளாலும் யாவருமுன்னை மகிழ்வுடன் வரவேற்கின்றனரல்லவா? ஆதலால் நீ செல்லுமிடமெல்லாம் அறிவுச்சுடரைப் பிரகாசிக்கச் செய்து, நன்னெறியை வளர்த்து, யாவருக்குங் களிப்பினை யூட்டிப் பெரும்புகழும் படைத்து நீடுழிவாழ்வாயாக!

அன்னையும் பிதாவும்.

(ஸ்ரீமான் மயிலை இரத்தினசபாபதி முதலியார்.)

உத்தமப் பெண்கள் சிகாமணியாகிய ஔவைப் பிராட்டியின் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற அரிய வசனத்தை நாம் இளமைப் பருவத்திலேயே கற்றுள்ளோம். பாலப் பருவமே கல்வி கற்றற்கு ஏற்றகாலம். ஆதலால் அப்பருவத்தே நாம் கற்பவற்றின் பொருள் வளப்பத்தை நன்கு சிந்திப்பதில்லை. சிந்திக்கத்தக்க அறிவுத் திட்பமும் பற்றாது. ஆகவே அப்பருவத்தில் நாம் கற்பவற்றுட் பெரும்பாலன உரிய பலன் றருவதில்லை. அவ்விதம் கொடுக்காமைக்குக் காரணம் நம் ஆராய்ச்சிக்குறைவே யல்லது வேறென்ன? நாம் பாலியத்தில் கிளிப்பிள்ளைகளைப்போல் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சிறு வாக்கியங்களும் ஒப்பற்ற அரிய மாணிக்கமே யென்று கூறினும் அவைகளின் பெருமைக்குப் பற்றாதாம். தெய்வத் தன்மைபொருந்திய ஔவைப் பிராட்டியருளிய பால நீதிகளே இகபர சாதனங்களாகும். இதுகாரணம் பற்றியன்றோ இந்நீதி நூல்கள் பலவும் பல்லாயிரம் மைலுக்கப்பால் வழங்கும் பலவேறு பாஷைகளிலும் எடுத்துப் போற்றத் தக்கவாயின? பொன்னேபோல் புறநாட்டார் போற்றியும் நாம் அவ்வளவு போற்றுகின்றோமில்லை. "புறக்கடைப் பச்சிலை மருந்துக்குதவாது" என்றபடி சர்வ சாதாரணமாகத் தூரத்துள்ளவற்றைச் சிறப்பித்தலும், சமீபத்துள்ளவற்றைப் புறக்கணித்தலும் மனிதரியல்பு. இக்கிழவியின் திருவாக்கைமட்டில் சற்று ஊன்றிப் பார்த்து உணரவேண்டியபடி உணர்ந்து உட்கொள்வோமாயின் எய்தற்கரியதொன்றுண்டோ.

அன்னையும் பிதாவும்—தாயும் தந்தையும்,—முன் அறி தெய்வம்—முதலில் அறிந்து கொண்ட கடவுளாவர் எனப் பொருள் தோன்றினும் அரிய நுட்பங்கள் பலவுள. தந்தையைப் பார்க்கினும், தாயே மேலானவள் என்பதை அறிவுறுத்த 'அன்னையும்' என முதவிற் கூறுவாராயினர். குழந்தைகள் பத்து மாதகாலம் கருப்பையிலிருந்து பிறந்ததுமுதல் பாலருந்தி வளர்க்கப்படுவதால் மற்றவர்கள் காட்டவேண்டாது தாமாகவே தமது தாயையறியும். பின்பு தகப்பனால் குருவையும், குருவினால் கடவுளையும் அறியலாகும்." மாதா பிதா, குரு, தெய்வம்" என வழங்குவது இம்முறைபற்றியேதான். தம்மையும், தமக்காதாரமாகிய கடவுளையும் உள்ளவாறுணர்ந்தபொழுதே இறப்பு பிறப்பற்று வீடுபேறடைதல் கூடும். எல்லாம் வல்ல இறைவனைக் குருவாலும், குருவைப் பிதாவாலும், பிதாவை மாதாவாலும், மாதாவைச் சுயமாகவும் அறிந்துகொள்ளுதலின் மேற் குறித்ததாய் வரும் கடவுளே யாவர். இவ்வண்ணம் அறிதலுள்ளும் தாயும்

தந்தையும் முதலில் அறியப்படுகின்ற கடவுளென்றார். குருவும், தெய்வமும், பின்னறி தெய்வங்களாம். இப்படி 'மாதாவும் பிதாவும் முன்னறி தெய்வம், குருவுந் தெய்வமும் பின்னறி தெய்வம்'என்று ஏற்படுவதின் நுட்பத்தை நன்கு உணரல் வேண்டும். தாயுந் தந்தையும் ஒரு பிரிவாகவும், குருவுந் தெய்வமும் மற்றொருபிரிவுமாகவும் கொள்ளலாம். தாயானவள் உடம்பை வளர்த்துத்தந்தையைக் காட்டுவாள். குருவோ ஞானத்தை பெருகச் செய்து கடவுளை யுணர்த்துவர். தாயானவள் உடல் வளர்தற்குப் பால் முதலிய உணவுகளை உதவுவள். குரு ஞானம் மேன்மேலும் வளர்தற்கு வேண்டிய பிரபல நூல்களை உபதேசம் புரிவர். இதனால் மாதா பிதாக்களை முன்னறி தெய்வமென்றது எவ்வளவு சிறந்த பொருளை உள்ளடக்கியிருக்கின்றது!

தாய், தந்தையினும் மேலானவளென்று மேலே சொன்னோம். புதல்வரைப் பெற்று வளர்த்து, பாலூட்டித் தாலாட்டி, பாதுகாத்துப் போற்றிவருவதிலும், மக்களிடத்து அன்பு பாராட்டும் வகையினும் நமது தாயைப்போல்வார் ஒருவருண்டோ! தாயானவள் தன்னுடைய உடலின் வருத்தத்தையும், மனவருத்தத்தையும், பிறசௌகரியங்களையும் கனவிலும் கருதாது, மக்களை வளர்த்தற்குப் படும்பாட்டையும், அவளது எலும்புங் கரைந்து பெருகக் கொண்டுள்ள உள்ளன்பையும், எப்படி, எதனால், எவ்வாறு அளவிடுவது! இதைப் பற்றியன்றோ இல்லறம் விடுத்துத் துறவறம் பூண்டு மூவாசையையும் முற்றுந்துறந்த குணக் குன்றாகிய மகான்களும் தாயைக் கண்டால் வணங்குகின்றார்கள்.

"தந்தை தாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வேறில்லை,
மைந்தருக்கு—எதிகளேனும் வணங்குவர் தாயைத் தந்தை
அந்தமைந்தனையே போற்றவேண்டும். மற்றுதல் தன்னால்
சிந்தையுற்றுணரில் தாயே தந்தையில் சிறந்தாள் மன்னோ"

என்னுங் கவியால் அறியலாம்.

மேற்சொன்ன கவியில் "தந்தை தாய் பணித்தல் செய்யுந் தவமலால் தவம் வேறில்லை மைந்தருக்கு" என்பது எவ்வளவு ஆழ்ந்தபொருளையும் அருமையையும் காட்டுகின்றது. தாய் தந்தையர்களின் கட்டளைப்படி நடத்தலே மக்கட்குத் தவமென்பது. ஒவ்வொருவரும் இவற்றை நன்கு கடைப்பிடித்துத் தத்தம் தாய் தந்தையருக்குக் கீழ்ப்படிந்து அடங்கிப் பயபக்தியுடன், அருமை பாராட்டிப் போற்றி வருவது இன்றியமையாததே. எந்நாட்டினும் சிறந்த நம்முடைய நன்னாட்டில் தற்காலம் ஆங்கிலக் கல்வியினாலும், புதிய நாகரிகத்தினாலும் கட்டுண்ட பலர் தமது தாய்தந்தையரை அடிமைகளைப்போல அவமதித்து நடத்துகின்றனர். அந்தோ, இதென்ன விபரீதம்! என்ன ஆச்சரியம்!! இவர்களுடையும் கதிதான் யாது? நமது நீதி நூல்களை அறவே மறந்து, பாஷாபிமானமின்றி, தாய் தந்தையர்களிடத்தில் அன்பும், மரியாதையுமின்றி நம்மவருட் பல்லோர் படுத்தும் பாடு சகிக்கொண்ணாது. சில புண்ணியமூர்த்திகள் தாய் தந்தையர்களுக்கு அற்ப வுணவு கொடுத்து அவரெதிரே நல்லுணவுண்கின்றார். இவர்கள் எய்துங் கதிதான் யாதோ? தாய் தந்தையர்களிடத்தில் அன்பில்லாதவர் யாரோ அவர் தமக்கும் அன்பில்லார், பிறர்க்கும் அன்பில்லார். புவிக்குப் பெருஞ் சுமையானவர் அவரே. இத்தகைய குணமுடையவர்களுடன் பேசினாலும், பழகினாலும், உண்டாலும், உறவு கொண்டாலும் பழியும், பாவமும் பிராப்தமாகுமேயன்றிப் பிறிதொன்றில்லை.

"ஈன்று வளர்த்த தாய் தந்தைக்கெவரே கைம்மாறியற்றிடுவார்.
ஆன்றமதலை நூறு வயதளவும் அடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத்துள்ள பொருள் முற்றும் அளித்து முறை முறையே
என்று வழிபாடியற்றிடினும் ஒருநாள் வளர்தற்கிடையாதே"

என்னும் அரிய பாடலை தற்காலத்தவர்கள் ஆழ்ந்து, சூழ்ந்து, ஆராய்ந்து அதன்படி நடப்பது எல்லாவற்றினும் சிறந்த கடமையாகும்.

பூகர் வாஷிங்டன்.

ஸ்ரீமான் எஸ். ஆர். வெங்கடரமணன், B.A.,B.L.

சற்றேறக்குறைய அறுபது வருடங்களுக்கு முன்னர் அமெரிக்காவிலுள்ள நீக்ரோ ஜாதியைச் சார்ந்த யாவரும் அடிமைத் தனத்தால் கட்டுப்பட்டிருந்தனர் என்பது சரித்திரம் பயின்றவர் அறிவர். சுமார் பதினேழாவது நூற்றாண்டு முதல் போர்த்துக்கேசியர்கள் ஆப்பிரிக்காவிலிருந்த இந்நீக்ரோவர்களை அடிமைகளாக்கி வேறு தேசங்களில் விலைக்கு விற்று வந்தனர். சிறிது காலஞ் சென்றதும் இவ்வியாபாரத்தில் இங்கிலீஷ்காரர்களும் ஊக்கங்கொண்டு ஆயிரக்கணக்கில் இந்நீக்ரோ ஜாதியார்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்தனர். அரண்யங்களடர்ந்த அமெரிக்காக் கண்டத்தில் நிலத்தைப் பண்படுத்திச் சாகுபடி செய்யக் கூலியாட்கள் வேண்டியிருந்தமை பற்றி அந்நாட்டிற் குடியேறியிருந்த ஆங்கில விவசாயிகள் இவர்களை ஆடுமாடுபோல் விலை கொடுத்து வாங்கினர். இது இப்படியிருக்க 1776-ம் வருஷத்தில் அமெரிக்கா நாடு சுதந்திரத்தை யடையவே கடவுள் முன்னர் யாவரும் சமானர் என்ற தத்துவமும் ஏற்பட்டது.

ஆனால் இந்நீக்ரோவர்களின் நிலைமையோவெனில் மிகவும் கேவலமாகவே தானிருந்தது. அவர்களை ஆடுமாடுகளைப்போல் பாவித்து வந்தனர். அவர்களுக்கு வீடு, காடு, தோட்டம் முதலிய ஒன்றும் வைத்துக்கொள்ளும் உரிமை கிடையாது. அவர்களது யஜமானர்கள் அவர்களை மிகவும் கேவலமாய் நடத்தி வந்தார்கள். ஆனால் இந்நீக்ரோ வியாபாரம் ஆரம்பித்த காலம் முதற்கொண்டே வட அமெரிக்காவிலுள்ளவர்கள் அவ்வடிமைத்தனம் தகாது, அது ஒழிய வேண்டுமென்று சொல்லிவந்தனர். அமெரிக்காவின் தென் பாகத்திலுள்ள ராஜ்யங்கள் யாவும் அடிமைகளை வைத்துக் கொண்டிருந்த ஆங்கிலேய விவசாயிகளுக்குச் சொந்தமாயிருந்தமைபற்றி அவர்கள் தங்களது க்ஷேமத்திற்கும் அபிவிருத்திக்கும் அடிமைகள் வேண்டும் என்றுரைத்தனர். இந்த இரண்டு வித அபிப்பிராய பேதங்களினால் 1860 வருஷம் இவ்விரு திறத்தாருக்கும் ஒரு கோரமான யுத்தம் நடந்தது. அனாதைகளான நீக்ரோவர்களுக்குச் சாதகமாய் அமெரிக்கா தேச சரித்திரத்திலே மிகப்பிரசித்தி பெற்று விளங்கும் பரோபகாரியான "அபிரஹாம் லிங்கன்" என்பவர் உழைத்து வந்தார். அவர் கொள்கை என்னவெனில், "அடிமைத்தனம் அக்கிரமம் அல்லவெனில் இவ்வுலகில் வேறொன்றும் அக்கிரமம் இல்லை" என்பதேயாம். வலிமை யற்றவர்களும் திக்கற்றவர்களுமான நீக்ரோவர்களுக்குக் கடைசியில் இச்சண்டை அனுகூலமாகவே முடிந்தது. 1863-ம் ௵ ஜனவரி௴ 1 தேதி யன்று ஐக்கிய மாகாண அக்கிராசனாதிபதியான அபிரஹாம் லிங்கன் நீக்ரோவர்கள் எல்லோரையும் அடிமைத்தனத்தினின்றும் நீக்கிப் பூர்ண சுதந்திரத்தை அவர்களுக்கு அளித்தார்.

இவ்வடிமைத்தனம் ஒழிந்தும் அவர்களது வாழ்வு ஒரு விஷயத்திலும் மேம்பாடடையவில்லை. இது வரையிலும் அவர்கள் மிகவும் தாழ்வான நிலைமையிலிருந்தவர்களாதலால் யோக்கியமான வழியில் வேலை செய்யத் தெரியாதவர்களாயிருந்தனர். அக்காலம் வரையில் அவர்களின் யஜமானர்களே அவர்களுக்கு அன்ன வஸ்திரம் அளித்துக் காப்பாற்றி வந்தனர். இப்போதோ அவர்களை அடிமைத்

தனத்தினின்றும் நீக்கி நாட்டில் மற்றவர்களோடு உழைத்துத் தங்கள் சாமர்த்தியத்தால் பணம் சம்பாதித்துக் காலம் கழிக்கும் நிலைமையிற் கொண்டு வந்து விட்டார்கள். இந்த நிலைமையில் நீக்ரோவர்களுக்குக் கொஞ்சம் எழுதப் படிக்கவும், சில தொழில்களின் கைப்பழக்கமும், மதவிஷயங்களைப் பற்றிச் சில விஷயங்களும் தெரியவேண்டுவது அவசியமாயிருந்தது இவ்விஷயங்களை நன்கறிந்த நீக்ரோத் தலைவர்கள் இருவர் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவரும், வாஷிங்டன் என்பவரும் தனித்தனியே ஹாம்டன் என்ற விடத்திலும் டஸ்க்கீ என்ற விடத்திலும் நீக்ரோவர்களுக்கென்று கல்வி கற்பிக்கப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினர். இங்கே கடைசியாகக்கூறிய வாஷிங்டனின் ஜீவிய சரிதத்தைப் பற்றித்தான் எழுதத்துணிந்தோம்.

வாஷிங்டன் என்பவர் 1858-ம் வருஷம் விர்ஜினியாவைச் சேர்ந்த பிராங்கிலின் கவுண்டியில் ஹேல்போர்டு என்ற விடத்தில் ஜனித்தார். அக்காலத்தில் அவரது பெற்றோர்கள் சொல்லொணாக் கஷ்டத்துடன் காலம் கழித்து வந்தனர். அவர்கள் குடியிருந்த வீடானது மிகக் கேவலமாயும் ஜன நடமாட்ட மில்லாததாயும் மனதிற்குப் பீதியைக் கொடுக்கும்படியானதாயு மிருந்தது. சுமார் 14 அடி அகலமும் 16 அடி நீளமும் உள்ள ஒரு மரக்கூட்டில் இவர் பிறந்து வளர்ந்து வந்தார். இந்தக் கூட்டிலேயே வாஷிங்டனும் அவரது தாயாரும் மேற்கூறிய சண்டை தீர்ந்து நீக்ரோவர்களுக்குப் பூர்ண சுதந்திரம் அபிரஹாம் லிங்கனால் கொடுக்கப்படும் வரை வசித்து வந்தனர்.

சுதந்திரம் பெற்றவுடனே இவர்கள் இருவரும் வாஷிங்டனின் சிற்றப்பன் வசிக்கும்படியான மால்டென் என்ற விடத்திற்குச் சென்றனர். மால்டென் பள்ளத்தாக்கில் சுரங்கத்திலிருந்து உப்புக் காய்ச்சுவதுதான் முக்கியமான கைத்தொழில். வாஷிங்டனின் தகப்பனாரும் உப்புச் சுரங்கத்தில் வேலை செய்து வந்தாராதலால் தமது மகனுக்கும் அதே உப்புச் சுரங்கத்தில் ஒரு வேலையைச் சம்பாதித்துக் கொடுத்தார்.

சிறு வயதுமுதல் வாஷிங்டனுக்குப் படிப்பில் அளவில்லாத ஆசை இருந்தது. எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டால் புத்தகங்களைப் படித்துத் தன் அறிவை விசாலப்படுத்திக்கொள்ளலாமென்று எண்ணினார். மால்டெனில் குடும்பஸ்தாபனமானதும் வாஷிங்டன் தம் தாயைப் படிக்க ஒரு புஸ்தகம் வாங்கிக்கொடுக்கும்படி கேட்டார். அங்ஙனமே அப்பெண்மணி தன் மகனுக்கு ஒரு கூட்டெழுத்துப் புஸ்தகத்தை (Spelling Book) சம்பாதித்துக் கொடுத்தாள். இதுதான் அவர் படித்த முதற் புத்தகம். சிலகாலஞ் சென்றபின் அவர்கள் வீட்டிற் கருகாமையில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்பாடானதும் இராத்திரியில் வேலையொழிந்த நேரத்தில் வாஷிங்டனுக்குக் கல்வி கற்றுக் கொள்ளும்படியான சௌகரியம் ஏற்பட்டது. சாதாரணமாய்ப் பையன்கள் பகல் நேரத்தில் எவ்வளவு கற்கக்கூடுமோ அதற்கதிகமாகவே வாஷிங்டன் இரவில் கற்பார். இதில் அவருக்குக் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு அவர் இராப்பள்ளிக்கூடங்களினால் அதிக நன்மையுண்டென்று அறிந்து அதன்பிரகாரமே பிற்காலத்தில் ஹாம்டன் என்ற விடத்திலும் டஸ்க்கீ என்ற விடத்திலும் இராப்பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து ஜனங்களுக்குக் கல்வி புகட்டி வந்தார்.

உப்புச் சுரங்கத்தில் கொஞ்சநாள் உழைத்த பிறகு நிலக்கரிச் சுரங்கத்தில் வேலையிலமர்ந்தார். இவ்வேலை கடினமானதல்லாமல் அபாயகரமுமானது. இந்த நிலக்கரிச் சுரங்கத்தில் உழைத்துக்கொண்டிருக்கும் சமயத்தில் ஹாம்டன் என்ற விடத்தில் விவசாயப் பள்ளிக்

கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கேட்டு, அது இருக்குமிடம் தீர்மானமாய்த் தெரியாதிருந்தபோதிலும், அவ்விடம் போய்ச்சேர வேண்டிய திரவியமில்லாதபோதிலும் அங்கே சென்று கல்வி கற்கவேண்டுமென்று தீர்மானித்தார். இரவும் பகலும் அவர் மனதில் இவ்வெண்ணம் ஒன்றே குடிகொண்டிருந்தது. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஜெனரல் ரவ்வீனர் என்பவர் வீட்டில் ஒரு வேலையாள் வேண்டியிருப்பதாக வாஷிங்டன் கேள்விப்பட்டார். வேலையாட்களிடம் வேலையைச் சரிவா வாங்குவதில் ரவ்வீனரின் பெண்சாதி மிகவும் கண்டிப்பாயிருப்பவள். வாஷிங்டன் நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்ய இஷ்டமில்லாததால் தம் தாயின் மூலமாக ரவ்வீனர் வீட்டில் காலியாயிருந்த வேலையிலமர்ந்தார். ரவ்வீனரின் பெண்சாதி வாஷிங்டனைக் கண்டதும் சொன்னதாவது! "நீ சாமான்களை எல்லாம் சுத்தமாய்த் துடைத்து வைக்கவேண்டியது. வேலையில் சுருசுருப்பா யிருக்கவேண்டும். நீ உன் வேலையில் நேர்மையுள்ளவனாகவும் நாணயமுள்ளவனாகவும் இருக்கவேண்டும்." ரவ்வீனர் வீட்டில் வாஷிங்டன் கற்றுக்கொண்ட படிப்பானது வேறு எந்தப் பள்ளிக்கூடத்திலும் கற்கவொண்ணாது. வாஷிங்டனும் தம் முழுமனதோடும் தம்மால் கூடியவரையில் உண்மையாய்த் தேக சிரமம் பாராட்டாமல் உழைத்து வந்தார். அவரது யஜமானியும் வாஷிங்டன் மேல் மிகப் பரிதாபமடைந்து அவர் படிப்பு விஷயத்திற் கோரிய சௌகரியங்களைச் செய்து கொடுத்தாள்.

1872-ம் வருஷத்தில் முற் சொன்ன ஹாம்டன் கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்ற அவா வாஷிங்கடனுக்கு அதிகரித்தது. தமக்கு வேண்டிய துணி மணி வாங்கிக்கொள்ளவாவது வழிச் செலவுக்காவது பணம் கிடையாது. அதனால் அவரது சுற்றத்தார் யாவரும் வாஷிங்டன் மேல் அநுதாபமடைந்து அவருக்கு வேண்டிய உதவியைச்செய்தனர். கடைசியாக ஹாம்டனுக்குப் போகும் நாள் நெருங்கியது. அச்சமயம் அவரது தாயாருக்குத் தேக அசௌக்கியமாயிருந்தபடியினால் மறுபடியும் தாயைப் பார்க்க முடியுமோ, முடியாதோ என்ற துக்கத்துடனேயே உத்திரவு பெற்றுக் கொண்டு புறப்பட்டார். மோல்டன் என்ற விடத்திற்கும் ஹாம்டன் என்ற விடத்திற்கும் சுமார் 500 மைல் இருக்கும். கையிற் பணமில்லாமையால் கால் நடையாகவும், வண்டிக்காரர்களைக் கெஞ்சி அவர்கள் வண்டியிலும் பிரயாணம் செய்து வழியில் கூலிக்கு வேலை செய்தும் மிகக் கஷ்டப்பட்டுக் கடைசியாக ரிச்மாண்டு என்ற விடத்தை அடைந்தார்.

இவர் அந்த ஊருக்கு இராத்திரி நடு நிசியில் போய்ச் சேர்ந்தார். பசியோ காதை யடைத்தது. உதவி செய்வார்ஒருவருமில்லை. எனினும் மனத்தளர்ச்சி யடையாமல் அவ்விராத்திரியை ஒரு சாக்கடையின் ஓரத்திற் கழித்தார். விடியற்காலையில் எழுந்திருந்து, தாம் ஒரு துறைமுகத்திற்குச் சமீபத்திலிருப்பதை உணர்ந்து, ஆங்கு ஒரு கப்பலில் இருக்கும் சாமான்களை அப்பொழுதுதான் இறக்கப் போகிறார்கள் என்பதையும் கேட்டுத் தாமும் அவைகளை இறக்கிப் போட இணங்கி, சாமான் இறக்கிய பின்னர் தமக்குள்ள கூலியைப் பெற்று, தம் கையில் 50 செண்டுடன் ஹாம்டன் விவசாயப் பள்ளிக்கூடத்தை அடைந்தார்.

அவ்வூரை அடைந்ததும் நேராக விவசாயக் கல்லூரித் தலைமை உபாத்தியாயரைக் கண்டு அவருக்குத் தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அப்பள்ளிக்கூடத்தில் தலைமை வகித்து வந்தவர் ஒரு பெண்மணி. அநேக நாளாக அழுக்கடைந்திருந்த ஒரே துணியை அணிந்திருந்தமையாலும், பசியோடிருந்தமையாலும் அப்

பெண்மணிக்கு அவரைப் பார்த்ததும் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. அவர் ஒரு சோம்பேறி என்று நினைத்தாள். கொஞ்ச நேரங் கழிந்த பின்னர் வாஷிங்டனைப் பார்த்து அம்மாது சொன்னதாவது, "இதோ பார்; அந்த அறையில் குப்பை நிறைந்திருக்கிறது. இந்தவிளக்குமாறைஎடுத்துக்கூட்டு" என்றாள். இதுதான் சமயமென்றுணர்ந்த வாஷிங்டன் விளக்குமாறை எடுத்து மூன்று தடவை அந்த அறையை வெகு சிரத்தையுடன் கூட்டினார். அந்த அறையிலுள்ள மூலை முடக்குகளை எல்லாம் நன்கு சுத்தப்படுத்தியபின் உபாத்தினிக்குத் தெரிவித்தார். உடனே அம்மாது அங்கிருந்து வந்து தனது கைக்குட்டையை எடுத்துச் சுவற்றிற் பதித்திருந்த மரப் பலகைகளைத் துடைத்தாள். கைக்குட்டையில் அழுக்கு ஒன்றுங் காணப்படவில்லை. இதைக் கண்டதும் அம்மாது வாஷிங்டனை நோக்கி "நீ இனிமேல் இப்பள்ளிக்கூடத்தில் சேரலாம்" என்றாள். உடனே அந்தப் பள்ளிக்கூடத்தில் வாயிற்காப்போன் வேலையில் அமர்த்திக்கொண்டாள். இந்த வேலையினால்தான் தம் ஊதியத்தைப் பெறக்கூடுமாதலால் வாஷிங்டன் அதை மிகவும் சந்தோஷத்துடன் ஒற்றுக்கொண்டார். அங்கே ஆர்ம்ஸ்ட்ராங் என்பவரின் கீழ் மூன்று வருஷம் படித்து 1875-ம் வருஷத்தில் யோக்கியதா பட்டம் பெற்றார்.

பட்டம் பெற்ற பிறகு தமது ஊராகிய மால்டெனுக்குச் செல்லவும் அங்கே அவரை நீக்ரோவர்களுக்கு உபாத்தியாயாக நியமித்தார்கள். இரண்டு வருஷம் கழிந்தபின் வாஷிங்டன் மறுபடியும் வாஷிங்டன் நகருக்குச் சென்று சுமார் எட்டு மாதம் படித்தார். 1878-ம் வருஷம் ஜெனரல் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் வாஷிங்டனை ஹாம்டனில் கொண்டாடும் அவ்வருஷ உத்ஸவத்தன்று ஒரு உபந்நியாசம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இது ஒரு கௌரவமான பதவி என்றுணர்ந்த வாஷிங்டன் அந்த வருஷம் ஹாம்டன் பள்ளிக்கூடத்தில் மிகச்சிலாக்கியமான ஒரு உபந்நியாசம் செய்தார். மறுபடியும் 1878-ம் வருஷத்திலேயே ஹாம்டனுக்கு மேல் படிப்புக்காகச் சென்றார். அச்சமயத்தில் ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர்சிவப்பு இந்தியர்களுக்கான சில கல்வித்திட்டங்களைப் பரிசோதித்துக் கொண்டிருந்தனர். அச்சிவப்பு இந்தியர்களில் சுமார் 75 நபர்களை வாஷிங்டனிடம் ஒப்புவித்து அவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்படி சொன்னார். இக்காரியத்தை வாஷிங்டன் மிகச் சாமர்த்தியத்துடன் செய்தார். வாஷிங்டன் மறுபடியும் பையன்களுக்கென்று ஒரு இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார். அதில் பகலில் 10-மணி நேரம் தோட்டத்திலாவது வேறு எவ்விடத்திலாவது வேலை செய்தவர்களுக்காகத்தான் பிரத்தியேகமாய் படிப்புக் கற்றுக்கொடுக்கப்பட்டது.

1881-ம் வருஷத்தில் அலபாமாவிலுள்ள சில பெரிய மனுஷியர்கள் ஆர்ம்ஸ்ட்ராங்குக்கு ஒரு கடிதம் எழுதி டஸ்கிகி என்ற இடத்தில் கருப்பு மனிதர்களுக்கென்று ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடத்தைநடத்தத் தகுந்தயோக்கியதையுள்ள ஒரு உபாத்தியாயரை அனுப்பும்படி கேட்டனர். அவர் வாஷிங்டனைச் சிபார்சு செய்தனுப்பவும் வாஷிங்டன் அதை ஏற்றுக்கொண்டார். டஸ்கிகி என்பது ஒரு சிறிய ஊர். அவ்வூரில் வெள்ளைக்காரர்களும் கருப்பு மனிதர்களும் சேர்ந்து சுமார் 2,000 பேர் உண்டு. வாஷிங்டன் டஸ்கிகி என்ற விடத்தில் ஒரு பள்ளிக்கூடக் கட்டடமும் வேண்டிய கருவிகளும் இருக்கும் என்று நினைத்தார். அங்கே போய் பார்த்ததும் அம்மாதிரி ஒன்றுமே கிடையாது. சர்க்காரால் உபாத்தியாயர்களுக்கு வருஷம் 2,000 டாலர் கொடுக்கப்பட்டதைத் தவிர வேறு ஒன்றுங்கிடையாது. ஆனால் கல்வித் தாகத்தினால் தவித்துக்கொண்டு தடுமாறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இருப்பதைக்காண இவருக்குக் கொஞ்சம் உற்சாகமுண்டாயது.

இவர் முதன் முதல் பள்ளிக்கூடத்திற்கு ஒரு இடத்தைக்கண்டு பிடித்தாகவேண்டும். அங்கே இருந்த ஒரு கிறுஸ்தவர் கோவிலிற் பள்ளிக்கூடம் வைத்துக் கொள்ளும்படியான ஏற்பாட்டைச் செய்தார். 1881-ம் வருஷம் ஜூலை 4-ம் தேதி ஆண் பெண் இருபாலரும் கூடின முப்பது மாணவர்களுடன் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினார். புஸ்தகப் படிப்பல்லாமல் மற்றும் ஏதாவது புதிதாகக் கற்றுக் கொடுக்க வேண்டுவது அவசியமாயிருந்தது. மிக அத்தியாவசியமான விஷயங்கள் மாணவர்களுக்குத் தெரியாமலே இருந்தன. சாதாரணமாய்த் தினம் குளித்து உடம்பை எப்படிச் சுத்தமாய் வைத்துக்கொள்வது என்பது அநேகம் பேருக்குத் தெரியாமலே இருந்தது. தாங்கள் புசிக்கத் தகுந்தவை எவை, தகாதவை எவை என்றும், எப்படிப் புசிப்பதென்றும்தெரியாமலிருந்தது. தாங்கள் இருக்கும் அறையை எப்படிச் சுத்தமாய் வைத்துக்கொள்வது என்பதும் தெரியாமலிருந்தது. இவைகளை எல்லாம் அவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதுடன் அவர்களுக்கு ஒரு கைத்தொழிலையும் கற்றுக்கொடுத்துப் பொருளாதார விஷயத்தையும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றெண்ணினார். பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேறினதும் தங்களது கைத்தொழிலினாலேயே வேண்டிய பொருள் சம்பாதித்து வயிறு வளர்க்கும் ஸ்திதிக்கு அவர்களைக்கொண்டு வந்து விடவேண்டுமென்பது அவருடைய எண்ணம். கருப்பு ஜனங்களில் சுமார் நூற்றுக்கு 80 பேர் விவசாயிகள். மேற்கூறிய கல்வியை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தால் அவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டுத் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்யும்பொழுது புதிய முறைகளைக் கையாண்டு தெரியாதவர்களுக்கு அம்முறைகளை எடுத்துச் சொல்லக்கூடும். இதனால் அவ்வூரிலுள்ளவர்களின் பழக்க வழக்கங்களும், அபிப்பிராயங்களும் சீர் திருத்தமடையும் என்று வாஷிங்டன் எண்ணினார்.

இவர் பள்ளிக்கூடம் ஆரம்பித்த மூன்றும் மாதம் ஒரு பெரிய தோட்டம் விலைக்கு வந்தது. அதை 500 டாலருக்கு வாஷிங்டன் தம்து பள்ளிக்கூடத்திற்காக வாங்கினார். அத்தோட்டத்தில் ஒரு சாதாரண மரக்கூடும் (Log cabin) ஒரு சமையற் கட்டடமும் ஒரு லாயமும் ஒரு கோழிக் கூடுமே யிருந்தன. இவைகளை எல்லாம் ஒருவாறு சீர்படுத்திய பின்னர் அத்தோட்டத்தில் ஒரு பாகத்தைச் சாகுபடி செய்யத் தீர்மானித்தார். அப்பாகத்தில் கள்ளி, முள், புதர் ஏராளமாயிருந்தமையால் மாணவர்களை முதலில் அவைகளை அப்புறப்படுத்தும்படி வாஷிங்டன் சொன்னார். மாணவர்கள் இந்தவேலை செய்வது கேவலம் என்று நினைத்து வாளாவிருந்தனர். காடுகளைச் சீராக்கிப் பயிரிடுவதற்கும் படிப்புக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது என்று எண்ணினார்கள். இவைகளை யறிந்த வாஷிங்டன் தாமே மண் வெட்டி, கோடரி முதலியவைகளை எடுத்துக்கொண்டு காட்டிலுள்ள மரங்களை வெட்டிச் சமவெளியாக்குவதற்காக முதன் முதல் புறப்பட்டார். வாஷிங்டன் இந்த வேலை செய்வதில் அகௌரவம் ஒன்றுமில்லை என்று வெட்கப்படாமல் தாமே வழிகாட்டினமையால் மாணவர் யாவரும் குதூகலத்தோடு வாஷிங்டனுடன் தாங்களும் வேலை செய்ய ஆரம்பித்தனர்.

இங்ஙனமிருக்கையில் பள்ளிக்கூடத்தில் மாணவர்களின் தொகை பிரதிதினமும் அதிகரித்து வந்தது. ஆனால் அவர்களைச் சேர்த்துக்கொள்ளப் போதுமான இடமில்லாததால் முதன் முதல் சில புதிய கட்டடங்களைக் கட்ட

வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படி வேண்டிய கட்டடங்களை மாணவர்களே கட்ட வேண்டும் என்பது வாஷிங்டனின் கொள்கை. டஸ்கிகியில் ஸ்தாபித்த பள்ளிக்கூடத்தில் பதினைந்து வருஷத்திற்குள் சுமார் நாற்பது கட்டடங்கள் கட்டப்பட்டன. அவைகளில் நான்கு கட்டடங்களைத் தவிர மற்றவையாவும் மாணவர்களாலேயே கட்டப்பட்டன. வாஷிங்டன் அக்கலாசாலைக்குத் தலைமை வகித்துவந்த காலத்தில் அக்கலாசாலை நீக்ரோவர்களுக்குத் தொழில் வித்தை (Technical Education) கற்றுக் கொடுப்பதில் மிகவும் பிரக்கியாதியடைந்திருந்தது.

வாஷிங்டன் செய்துவந்த வேலைக்குப் பணம் அதிகமாகவேண்டியிருந்தது. அதன் செலவாக்கை விருத்தி செய்வதற்காக வெள்ளைக்காரர்களுக்கும் கருப்பு மனிதர்களுக்கும் அச்சமயம் இருந்துவந்த சிநேகபாவத்தை விருத்தி செய்யவேண்டியதாயிருந்தது. இதைப்போல் பலகாரணங்களைக் கொண்டு, வாஷிங்டன் பிரசங்கம் செய்ய உத்தேசித்தார். வெகு சீக்கிரத்தில் பேசுவதில் மிகக் கீர்த்தியடைந்து அமெரிக்கா ஐக்கியமாகாணம் முழுதும் அநேகம் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அவர் ஒரு சமயத்தில் சொன்னதாவது: "காவியம் எழுதுவதனால் ஏற்படும் கௌரவமும், பூமியை உழுது பயிர் செய்வதினால் ஏற்படும் கௌரவமும் ஒன்று என்று எண்ணாத வகுப்பார் ஒருகாலும் முன்னேற்றமடைய முடியாது. நாம் முதன் முதலில் அடிவாரத்திலிருந்துதான் மேலே போகவேண்டுமேயல்லாது சடுதியில் மேலே ஏறமுடியாது. நாம் மேலும் நமக்குள்ள குறைகளைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு நமக்குக் கிடைக்கும் நற்சமயங்களை இழந்துவிடக்கூடாது." இவர்செய்துவந்த பிரசங்கத்தினால் அமெரிக்கா முழுதும் இவரது பள்ளிக்கூடத்தைப்பற்றி நன்கறிய நேர்ந்தது. அக்காலத்தில் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தின் அக்கிராசனாதிபதியான மெக்கின்லி என்பவரும் ஒரு தடவை வாஷிங்டனையும் அவரது பள்ளிக்கூடத்தைப்பற்றியும் மிகவும் சிலாகித்துக் கூறியிருக்கின்றனர்.

இவர் செய்துவந்த கைங்கர்யத்தின் பிரயோஜனத்தை நன்கறிந்த சில சர்வகலாசாலைகள் இவருக்குக் கௌரவப் பட்டங்கள் அளித்தன. 1880—ம் வருஷம் வாஷிங்டனின் நண்பர் சிலர் திரவிய சகாயஞ் செய்ய, வாஷிங்டனும் அவரது மனைவியும் ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்சு, பெல்ஜியம், ஹாலண்டு முதலிய தேசங்களுக்குச் சென்று திரும்பி ஊர் வந்து சேர்ந்தனர்.

1880-ம் வருஷம் டஸ்கிகி பள்ளிக்கூடத்திற்கு ஐக்கியமாகாண சட்ட சபை ஏம் ஸ்தாபனப் பத்திரத்தை அளித்தது. தற்காலத்தில் அங்குள்ள மாணவர்களின் தொகை இரண்டாயிரத்திற்கு அதிகம் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டாயிரத்தில் 193 ஆசிரியர்களும், உத்தியோகஸ்தர்களும், கூலிக்காரர்களும் குடும்பசகிதம் அடக்கம். இப்பள்ளிக்கூடம் ஸ்தாபித்த காலம் முதல் 1912-ம் வருஷம்வரை சுமார் 9,000 ஆண்களும் பெண்களும் கல்விகற்றுச் சென்றார்களெனப்படுகிறது. ஆகையால் வாஷிங்டனை ஒரு குலபதி என்று சொல்வது மிகையாகாது. 1912-ம்வருஷத்தில் பள்ளிக்கூடத்திற் சேர்ந்தவர்களின் தொகை 1,645. இதில் 1,067 வாலிபர்களும், 578ப் பெண்களுமேயாம்.

இப்போது இக்கலாசாலையானது 2,345 ஏகரா விஸ்தீரணமுள்ள ஒரு சமவெளியில் இருக்கிறது. இதில் 107 கட்டடங்களுண்டு. மேலும் சர்க்காரால் இதற்கென்று கொடுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு சுமார் 2,500,000 அமெரிக்கன் டாலர்களாகும். இதைப் பரிபாலிக்க 19 பேர் அடங்கிய ஒரு சபை ஏற்

படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஜனங்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட தொகை 18,71,647 டாலர்கள். இதன் வருஷச் செலவு 2,70,000 டாலர்கள். விவசாயப்படிப்பும் கைத்தொழிற் படிப்பும் பெண்களுக்கு சிகிச்சை செய்யும் விதமும் (Nursing) எல்லாம் உள்பட சுமார் 40 விதத் தொழிற்கல்வி இப்பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படுகின்றது.

விவசாயத்திற்காக 22,300 ஏகரா நிலம் இருக்கிறது. இந்தப் பண்ணையில் கால்நடைகள் ஏராளமாயிருக்கின்றன. சிங்காரத் தோட்டம், பூந்தோப்பு, நந்தவனம் முதலிய விசித்திரமான இயற்கை விநோதங்களுக்கும் தனி இடமமைத்துப் பரிபாலித்து வருகின்றனர். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகள், விதைகள், முதலியவைகளை ஜனங்களுக்குக் காட்ட ஒரு கண் காட்சி சாலையும் உண்டு.

இங்கே பலவிதமான கைத்தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன வென்று சொன்னோம். தச்சு வேலை, மரத்தில்சித்திரவேலை, அச்சியந்திரவேலை, தையல் வேலை, கொல்லன் வேலை, குதிரைச் சேணம் செய்யும் வேலை, ஜோடுசெய்யும் வேலை, வண்டி முதலியன செய்யும் வேலை, குழாய்கள் சரிப்படுத்தும் வேலை, உருக்கு வேலை, மின்சார வேலை, சில்பசாஸ்திரம், யந்திர சித்திரம் வரைதல் (Mechanical Drawing) தகர வேலை, சித்திரவேலை, நீராவியந்திரவேலை என்பவை போன்றவைகள் பையன்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

பெண்களுக்கு, துணி வெளுத்தல்(Laundry), சமையல் செய்தல், உடுப்புத் தைத்தல் முதலியவை கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எல்லாப் பெண்களுக்கும் குடித்தனச் செட்டும், சுகாதாரமும், குழந்தைகளை வளர்த்தல், மருத்துவம், சமயோசித வைத்தியம் என்பவைகளெல்லாம் கற்பிக்கப்படுகின்றன. இப் பள்ளிக்கூடத்திலேயே மேல் வகுப்பில் படிக்கும் மாணவிகளுக்கென்று பிரத்தியேகமான ஒரு விடுதியுண்டு. அதில் அவர்கள் பள்ளிக்கூடத்ததிகாரிகளால் கொடுக்கப்படும் பணத்தைக்கொண்டு குடித்தனம் சிக்கனமாய்செய்து கொள்ள வழியுண்டு.

இதைத் தவிர இலக்கியங் கற்பிக்கும் இலாகாவும் ஒன்றுளது. இலக்கியம் எல்லா மாணவர்களும் கட்டாயமாய்ப் படிக்கவேண்டியது. இதில் ஆங்கிலம், கணிதம், சரித்திரம், பூகோளம், பௌதிக சாஸ்திரம், கல்வி, வரவு செலவுக் கணக்கு, பாட்டு, சித்திரம் வரைதல், தேகாப்பியாசம் போன்றவைகள் யாவும் கற்பிக்கப்படுகின்றன.

மத விஷயமாகவும் கல்வி போதிக்கப்படுகின்றது. இதன் நோக்கம் மாணவர்களுக்கு விவிலிய நூலில் (Bible) உள்ள முக்கியமான விஷயங்களை எடுத்துப் போதிப்பது தான்.

1892-ம் வருஷம் ஒரு ஆஸ்பத்திரியும் செவிலித் தாய்மார்களைப் பழக்க ஒரு சிகித்ஸா வித்யாலயமும் (Nursing Home) ஏற்படுத்தப்பட்டன. 1894-ம் வருஷம் முதல் 94 பெண்கள் சிகிச்சை செய்வதில் தேர்ச்சியடைந்து வெளியே சென்றிருக்கின்றனர். இவையல்லாமல் வருஷா வருஷம் நீக்ரோவர்களின் மகாநாடு ஒன்று கூட்டப்படுகிறது. இதற்கு விவசாயிகளும் சமூக ஊழியர்களும் வந்து விஜயம் செய்கிறார்கள். மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய பலவிதமான திருவிழாக்களும் கல்விவசதியும் ஏற்பட்டிருக்கின்றன.

மாணவர்களுக்கு ராணுவப் பயிற்சியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்பள்ளிக் கூடத்தில் 19,000 புஸ்தகங்களுள்ள ஒரு பெரிய புத்தக சாலையுமுண்டு. ஆப்பிரிக்காவைப் பற்றியும் நீக்ரோவர்களைப் பற்றியும் உள்ள புத்தகங்களைச் சேர்க்க இப்போது பிரயத்தனப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இப்புத்

தகசாலையிலிருந்து புத்தகங்கள் அக்கம்பக்கம் கிராமவாசிகளுக்கு வாசிக்கக் கொடுக்கப்படுகின்றன.

வாஷிங்டனின் ஜீவிய சரித்திரம் நமக்குச் சில படிப்பினைகளைப் புகட்டுகின்றன என்பதிற் சந்தேகமில்லை. தற்காலத்தில் இந்தியா முழுதும் கல்வி விஷயமாக மிக்க அதிருப்தி இருந்து வருகிறது. நமக்கு இலக்கியக் கல்வியல்லாமல், கைத் தொழில்களில் பழக்கமில்லையாதலால் நமது மாணவர்கள் கௌரவமான வழியில் நெற்றி வேர்வை நிலத்தில் கொட்ட வேலைசெய்து ஊழியம் சம்பாதிக்கும் நிலைமையில்லாமலிருப்பதை யாவரும் அறிவர். இக் குறைகளைத் தீர்க்க வடக்கே சபர்மதி, ஹரித்வார், சாந்திநிகேதன் என்ற விடங்களிலும் தென்னிந்தியாவில் மசூலிப்பட்டணத்தில் ஆந்திர ஜாதீய கலாசாலையும், தெற்கே சேரமாதேவி குருகுலமும் இவ்விஷயத்தில் உழைத்து வருவது யாவரும் அறிவர். ஆனால் இவை நமது தேசத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு திருப்திகரமாய் வேலை செய்யப்போதாது. இம்மாதிரி ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒன்றிருப்பின் நமது நாடு சீக்கிரம் சுயராஜ்ய மடையும் என்பதில் ஐயமின்று. இதை வாசிப்போர் இவ்விஷயத்தில் கவனஞ் செலுத்தின் அதுவே யாம் கோறும் கைம்மாறு.

பர்வதகுமாரி,

இரண்டாம் பாகம்.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா.)

(366-ம் பக்கத் தொடர்ச்சி.)

எட்டாம் அத்தியாயம்.

நண்பனது நல்லுரை.

பூபேந்திரநாதன் அந்தப் புரத்திலிருந்து வெளிப்பட்டுக் கச்சேரிக்கூடத்துக்கு வந்தான். அங்கே வந்து பார்க்கையில் அவனுடைய பிரியமித்திரனாகிய நரேச சந்திரன் அவனைக் கண்டு பேச ஆவலாய்க் காத்துக்கொண்டிருந்தான். இராஜகுமாரன் வந்ததைப் பார்த்து நரேச சந்திரன் நகைத்துக்கொண்டே—"இன்று நீ வர வெகு நேரமாய்விட்டதே. அந்தப்புரவாசினி அபாவமாய் இருக்கச்சேயே அந்தப்புரத்தில் இவ்வளவு நேரம் கழிந்தால், அவள் உதயமாய்விட்டால், முத்தண்ணாவின் தரிசனம் எங்களுக்கெல்லாம் இனி துர்லபமேயாய்விடும்! அது இருக்கட்டும். இன்றைக்கு உன் முகம் நீருண்ட மேகம்போல் இருப்பதேன்? அங்கே அப்படிப்பட்ட விசேஷம் என்ன நடந்துவிட்டது?" என்றான்.

அதற்கு இராஜகுமாரன் "விசேஷத்துக்கென்ன குறைச்சல்? ஐப்பசி கார்த்திகை மாசம் போலே அடை மழை பெய்யவேண்டியதாயிருந்தது. அப்படிப் பெய்யாமல் இன்னும் நீருண்ட மேகத்தின் படாடோபத்தைத் தவிர மழையொன்றும் இல்லாமலிருப்பதே ஆச்சரியம். நரேசா, நான் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். இன்றைக்கு என்னென்ன சங்கதிகளெல்லாம் நான் கேள்விப்பட்டேன், தெரியுமா? அதுகளை நினைத்தாலும் அழுகை வருகிறது" என்று குறை கூறினான். "அழுகை வருவானேன்? என்ன சங்கதி? உன்னுடைய தேவி க்ஷேமம் தானே?"

"தேவியா? தேவியின் பாடுதான் திண்டாட்டத்தில் வந்திருக்கிறது. பிரதிபையை

நான் கைவிட்டு விடுவேன்போல் தோற்றுகிறது" என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே பூபேந்திரநாதன் கண்களிலிருந்து பலபலவென்று நீர் வந்தது.

நரேச சந்திரனுக்கு இராஜகுமாரன் சொல்லிய வார்த்தைகளின்கருத்துச் சிறிதும்விளங்கவில்லை. அதன்பேரில் அவன்—"பிரதிபைக்கு ஏதாவது துன்பம் நேர்ந்திருக்கிறதா? இதைப்பற்றி இன்று கடிதம் ஏதாவது வந்ததா என்ன?"

இராஜகுமாரன் கண்களிலிருந்து தாரை தாரையாய் நீர் பெருகிற்று. சற்று நேரங் கழித்து அவன் கூறினான்—"ஆம், பிரதிபையினிடத்திலிருந்து கடிதம் வந்தது; ஆனால் அவளுக்குத் துன்பம் ஒன்றுமில்லை. அவள் நிரம்ப சுகமாகவே இருக்கிறாள். இரண்டு மூன்று நாளைக்குள் கல்கத்தாவுக்குப் போய் அவளைப் பார்த்துவிட்டுக் கல்யாணப் பிரஸ்தாபமும் செய்து வரலாமென்று எண்ணியிருந்தேன். ஆனால் அதற்குள் இங்கே உண்டாயிருக்கிற உற்பாதத்தைப் பார்த்தால், எல்லாம் மலையேறிப் போய்விடும்போலிருக்கிறது. என் செய்வேன்? ஒன்றும் தோன்றவில்லை. நான் உனக்குச் சொல்லியனுப்பலாமென்றே இருந்தேன். அதற்குள் நல்ல வேளையாய் நீயே வந்துவிட்டாய். நீ எனக்கு ஆப்தமித்திரனல்லவா? இந்த சமயத்தில் என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்ற உன்னால்தான் ஆகும். நீ எனக்கு மிக்க உபகாரம் பண்ணியிருக்கிறாய். நான் கெட்ட சகவாசத்தை விட்டுவிட்டேன். பிரதிபை விஷயத்தில் நான் கொண்டிருந்த தவறான எண்ணங்களையெல்லாம் நீக்கியது நீயே. அவள் எவ்வளவு குணவதியாகிய பெண்மணியென்பதை நீதான் எனக்கு உணர்த்தினாய். நான் பிரதிபைக்குத் தகுதியான புருஷனல்லவென்பதை இப்பொழுது உணர்கிறேன். ஆனால் ஆண்டவன் திருவிளையாடல் இருந்தபடியென்னே! அவளியற்கையை நான் உள்ளபடி உணர்ந்து அவள் பொருட்டு அங்கலாய்க்கத் தொடங்கும்பொழுதே தெய்வம் அவளை என்னிடத்திலிருந்து எடுத்தெங்கேயோ எறிந்துவிடப் பார்க்கிறதே." இப்படிக் கூறிவிட்டு அவன் தனக்கும் திவான்ஜிக்கும் பாட்டியம்மைக்கும் இடையில் நடந்த சம்பாஷணைகளையெல்லாம் நரேச சந்திரனுக்கு விவரமாய் எடுத்துரைத்தான்.

அவற்றையெல்லாம் கேட்டு நரேசன் விசாரசாகரத்தில் முழுகினான். சற்று நேரத்துக்குப் பிறகு அவன் இவ்வாறு கூறலுற்றான்—"எனக்கு யார் பேரிலும் விரோதம் பாராட்ட வேண்டுமென்பதில்லை. ஆயினும், நீ கோபித்துக்கொள்ளாதிருந்தால்—இந்தச் சூழ்ச்சியெல்லாம் திவான்ஜியின் காரியமே யென்று நான் நிச்சயமாய்ச் சொல்வேன்."

பூபேந்திரநாதன் கூறினான்—"நரேசா, திவான்ஜியை ஏன் தூற்றுகிறாய்? அவர் பேரில் ஒரு குற்றமும் இல்லை. நான் பாட்டியம்மையிடம் கேட்டதிலிருந்தும் திவான்ஜியுடன் பேசித் தெரிந்து கொண்டதிலிருந்தும், திவான்ஜியிடம் எவ்விதக் குற்றமும் சொல்வதற்கில்லை. எப்படியாவது இந்த விவாகம் நடக்க வேண்டுமென்றே அவர் அந்தரங்க சுத்தியோடு பாடுபடுவதாய்த் தெரிகிறது. அவர்மாத்திரம் தனியாய் என்ன செய்வார் பாவம்? பண்டிதர்கள் வெளியிட்டிருக்கும் அபிப்பிராயத்துக்கு விரோதமாக அவர் எப்படி இந்த விவாகத்தில் தலையிடுவர்? அவர் உள்ளன்புடன் என் க்ஷேமத்தை விரும்புகிறவர்; ஆதலால் முன்பின் கவனித்து எல்லாவற்றையும் ஆராய்ந்து யோசித்தே அவர் வேலை செய்கிறார். அப்படியிருக்க, நீ அவர்பேரில் குற்றங்கூறுவது சரியல்ல."

நரேச சந்திரன் நகைத்துக்கொண்டே சொல்லலானான்—"உனக்கிப்படிப்பட்ட நம்பிக்கை

உண்டாகாவிட்டால் நீ ஏன் இவ்வகையான ஆபத்தில் விழுகிறாய்? இந்த சமயம் உன் நம்பிக்கையை உன் மனதிலேயே வைத்துக்கொள். இது சம்பந்தமாய் அதிகமாய் ஒன்றும் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. வரும்போது சொல்லுகிறேன். இப்பொழுது பண்டிதர்களின் மதத்தைப்பற்றி நான் சொல்வதாவது, இதைப்பற்றி நீ ஒன்றும் சிந்திக்கவேண்டியதில்லை. எந்தப் பண்டிதர்கள் இந்த விவாகத்துக்கு விரோதமாக அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்களோ, அவர்களிடத்திலிருந்தே, கொஞ்சம் பிரயத்தனப் பட்டால், இதற்கு அநுகூலமான அபிப்பிராயத்தையும் வாங்கலாம்,"

"அது எப்படிக் கூடும்?"

"கூடுமாவது? கொஞ்சம் பணம் செலவழித்தால் ஆயிற்று! பணத்துக்கு ஆச்சரியகரமான சக்தி உண்டென்பது உனக்குத் தெரியாதோ?"

"நரேசா, நீ பேசுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. பணத்தாசையால் சாஸ்திரார்த்தங்களைத் தலை கீழாய் மாற்றிவிடும்படி அவ்வளவு நீசர்களாய்விட்டார்களா பண்டிதர்கள்?"

"அண்ணா, நீ திரேதாயுகத்து மனுஷ்யன்போல் தோன்றுகிறது. நம் தேசம் எவ்வளவு அதோகதி அடைந்திருக்கிறதென்பதை அறியாமற் பேசுகிறாய். சாஸ்திரமோ கல்பக விருக்ஷம் போன்றது. அதிலிருந்து நமக்கு இஷ்டமான மதத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இனி பண்டிதர்களைப் பற்றியோ கேட்கவேண்டியதேயில்லை. அவர்கள் ஒருநாளில் ஒரே வாக்கியத்துக்குப் பத்துவிதமான அர்த்தம் சொல்லக் கூடியவர்கள். இவ்வளவுகூட அவர்களால் முடியாவிட்டால் பண்டிதர்களாயிருந்துதான் என்ன பிரயோஜனம்? திவான்ஜி அவர்கள் பண்டிதர்களிடமிருந்து என்ன மதம் வாங்கியிருக்கிறாரோ, பிரயத்தனப் பட்டால், அதற்கு நேர் மாறான வேறொரு மதத்தை அவர்களிடத்திருந்தே நீயும் பெறக்கூடும்; இது வெகு சுலபமான காரியம். இம்மாதிரி விருத்தமான மதத்தைப் பெற்று நிச்சிதார்த்தம் பண்ணப்பட்ட பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதே உசிதமென்றும், அப்படிப் பண்ணிக்கொள்ளாவிட்டால் பாபமென்றும் திவான்ஜியுடனும் பாட்டியம்மையுடனும் சொல்லலாம். தெரிந்ததா?"

பூபேந்திரநாதன் மூளையில் ஒரு பெருங் குழப்பம் உண்டாய்விட்டது. அவனுக்கு நரேச சந்திரனுடைய கடைசி வாக்கியம் நன்றாய் விளங்கவில்லை. திவான்ஜி பண்டிதர்களுக்கு ஏன் பணங் கொடுக்கவேண்டும்? பிரதிபையைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதற்கு விரோதமாகப் பண்டிதர்களின் மதத்தை வாங்கவேண்டிய அவசியம் அவருக்கு ஏன் ஏற்படவேண்டும்? இதில் அவருக்கு என்ன லாபம்? பிரதிபையின்பேரில் அவருக்கு வெறுப்பு உண்டாகவும் என்ன காரணம்? இந்தக் கேள்விகளுக்கு இராஜ குமாரனது மனதில் ஒருவித சமாதானமும் ஏற்படாமற் போகவே, நரேச சந்திரன் திவான்ஜியின்பேரில் வீணுக தோஷாரோபணம் செய்கிறானென்று அவன் எண்ணினான். சற்றுநேரம் பொறுத்து "நல்லது, பிரதிபையைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு அநுகூலமான அபிப்பிராயம் பெற முடியுமானால், அதை முயன்று வாங்குவது உசிதமாகுமா?" "ஏன் உசிதமாகாது? பிரதிபையை விவாகம் செய்துகொள்வது சரியென்று நீ எண்ணினால், அதற்கு அநுகூலமான அபிப்பிராயத்தைப் பெறுவது நியாயமே."

"ஆனால் அப்படி செய்வதனால் திவான்ஜிக்கு ஒரு விதத்தில் அவமானம் உண்டாகலாம். உண்டானால், என்மேல் அவருக்குக் கோபம் வருமே."

"திவான்ஜிக்குக் கோபம் வருவது உனக்கு இஷ்டமில்லையானால், பிரதிபையைக் கல்யாணம்பண்ணிக்கொள்ளுகிற எண்ணத்தைவிட்டுவிடு. எனக்குத் தெரிந்ததை உன்னிடம் மனம் விட்டுச் சொல்லுகிறேன். இதைப்பற்றி என் பேரில் நீ கொஞ்சமும் கோபித்துக்கொள்ளக் கூடாது."

"இல்லை, இல்லை, நீ அப்படி எண்ணக் கூடாது. இதில் கோபித்துக்கொள்ள என்ன இருக்கிறது? இந்த சமயம் என்பேரில் பெரிய ஆபத்து வந்து விழுந்திருக்கிறது. இதில் உன்னுடைய நல்லுபதேசத்தை வேண்டி நிற்கிறேன். நான் ஏன் கோபித்துக்கொள்ள வேண்டும்?"

"உன் பேரில் எவ்விதமான ஆபத்தும் விழுந்திருக்கவில்லை. அதற்காக யாருடைய உபதேசமும் உனக்குத் தேவை இல்லை. இப்பொழுது உண்டாயிருக்கும் கடுபிடியெல்லாம் பண்டிதர்களின் அநுகூலமான அபிப்பிராயத்தைத் திரட்டுவதனாலும் ஜாதி ஜனங்களுக்குக் கொஞ்சம் பணங் கொடுப்பதனாலும் அடங்கிவிடும்."

"அப்படியானால், இந்த இரண்டு காரியங்களும் இரகசியமாய்த்தானே நடக்கவேண்டும்?"

"இரகசியமாய்ச் செய்யவேண்டுமென்று நீ இஷ்டப்பட்டால், இரகசியத்தையும் வைத்திருக்க முடியாதென்பதை இப்பொழுதேசொல்லிவிடுகிறேன். ஆகையால் பகிரங்கமாய்ச் செய்வதே நல்லதாகும்."

"பகிரங்கமாய்ச் செய்தால் திவான்ஜிக்குக் கோபம் வரும்."

"கோபம் வந்தால் வரட்டும். அதைப்பற்றி நீ ஏன் சிந்திக்கவேண்டும்? நாளைக்கு திவான்ஜி இல்லாவிட்டால், உன் காரியங்களெல்லாம் நடவாமற் போய்விடுமோ?"

"நடக்காமலென்ன? ஆனால திவான்ஜி நல்ல யோக்கியர், நம்பிக்கைக்குரியவர். எனக்கு ஜமீன் விவகாரங்களில் அநுபவமில்லை; அவரே எல்லாம் செய்து வருகிறார். அவர்கூட இருப்பதனாலேயே நான் இவ்வளவு நிச்சிந்தையாய் இருக்கிறேன். அவர் இல்லாவிட்டால் உள்ளபடியே நான் மெத்த கஷ்டத்துக்குள்ளாவேன்."

நரேசசந்திரனுக்கு பூபேந்திரநாதனுடைய வார்த்தையைக் கேட்டு வந்த சிரிப்பை அடக்க முடியவில்லை. "அண்ணா, பூபேந்திரா, நீ வேடிக்கை விநோதங்களில் அமர்ந்து உன் அதோகதியை நோக்கி வேகமாய்ச் சென்று கொண்டிருக்கிறாய். நீ எனக்கு பால்ய சிநேகிதன்; உன்னுடைய துர்த்தசையைக் காண எனக்குச் சகிக்கவில்லை; ஆகையாலேயே இவ்வளவு சொல்லுகிறேன். கோபித்துக்கொள்ள வேண்டாம். இந்த சமயம் நீ விவாக எண்ணத்தை விட்டொழித்து, வேலை விவகாரங்களைக் கற்றுக்கொள். நீ வேலை விவகாரங்களைக் கற்றுக் கொள்ளாவிட்டால், நான் சொல்லுகிறேன் பார், பிரதிபையை நீ கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாது" என்றான்.

"வேலை விவகாரம் கற்றுக்கொள்வதற்கும் கல்யாணத்துக்கும் என்னசம்பந்தமோ எனக்கு விளங்கவில்லை."

"மற்றப் பேர் விஷயத்தில் இல்லை; ஆனால் உன் விஷயத்தில் இந்த இரண்டு காரியங்களுக்கும் மிகப் பெரிய சம்பந்தம் இருக்கிறது. ஏனென்றால், நீ எப்பொழுது வேலை விவகாரங்களைக்கற்றுக்கொள்ளுகிறாயோ, அப்பொழுதே உன் நெஞ்சத்திலிருந்து திவான்ஜியைப் பற்றிய பயம் ஒழியும். நீ செய்ய விரும்பும் எந்தக் காரியத்தையும் சுவாதீன புத்தியுடனே செய்யவல்லவனாயிருப்பாய். உனக்கும் பிரதிபைக்கும் விவாகம் நடப்பதில் ஒரு திவான்ஜி

தான் தடையாயிருப்பதென்று நான் நன்றாய் அறிந்துகொண்டேன். நீயும் ஒரு நாள் இதை அறிந்துகொள்வாய் என்று நம்புகிறேன்."

பூபேந்திரநாதன் சிறிது சிரித்துச் சொன்னான்: "நரேசா, உன் மனதில் இது ஒரு ஆதாரமற்ற சந்தேகமாய் ஏற்பட்டிருக்கிறது. நான் வாஸ்தவமாய்ச் சொல்லுகிறேன். சிவான்ஜி பேரில் இதில் யாதொரு குற்றமுமில்லை. அவருடைய நோக்கம் சிறந்தது. பிரதிபையோடு எனக்கு விவாகம் நடப்பதனால் அவருக்குச் சுகமே தவிர துக்கமில்லை. அவராகவே எத்தனையோ தடவை பிரதிபையைப் புகழ்ந்து கொண்டாடியிருக்கிறார். நன்றாயிருக்கிறது! அவர் இந்த விவாகத்துக்கு ஏன் தடை செய்கிறார்?"

"உனக்காக இன்னொரு பெண்ணை நிச்சயித்திருக்கிறதே, அவள் சிவான்ஜியின் பந்துவர்க்கத்தைச் சேர்ந்தவளோ?"

"தெரியாது."

"சரி, இப்போது தெரிந்து போகிறது. அவளுக்கும் சிவான்ஜிக்கும் ஏதாவது பந்துத்துவம் இருந்தால் அதிலிருந்து அவருடைய உத்தேசம் இன்னதென்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் அநேகமாய் யாதொரு பந்துத்துவமும் இல்லாமலே இருக்கக்கூடும்."

"இது உனக்கு எப்படித் தெரியும்?"

"இவ்வளவுகூடத் தெரியாவிட்டால் மனித சுபாவத்திலேயே எனக்குக்கொஞ்சமும் பழக்கமில்லையென்று நீ எண்ணிக்கொள்ளலாம். மனித சுபாவமென்பது வெகு ஆழமான சாஸ்திரம். அதில் எனக்குண்டாயிருக்கும் ஏதோ சிறிது பயிற்சியின் வல்லமையாலேயே இது எனக்குத் தெரிந்திருக்கிறது. அது எப்படியிருந்தாலும், நீ இப்பொழுது மகா பயங்கரமான இக்கட்டில் மாட்டிக்கொண்டிருப்பதாக எண்ணுகிறேன். இதிலிருந்து விடுபட்டு வெளியேறுவது லேசான காரியமில்லை. ஆனால் உன்னைப்பற்றிக்கூட எனக்கு அவ்வளவு துக்கமில்லை. பிரதிபையைப் பற்றியே எனக்கு அதிக வருத்தமாயிருக்கிறது. அவளுடைய நினைவு வரும்போதே என் நெஞ்சத்தில் பெருத்த வேதனை உண்டாகிறது. ஏனென்றால் உன்னைத் தவிர வேறு யாரையும் அவள் அறியாள். பாவம், அந்த சாதுவாகிய எளிய பெண்ணைப் பேராபத்து சூழ்ந்துகொண்டிருக்கிறது."

இதைக் கேட்டு பூபேந்திரனுக்கு முகம் இறங்கிவிட்டது. சற்று நேரங் கழித்து, "அப்படியானால் ஒருவருக்கும் ஆபத்து வாராதவிதமாய் ஒரு உபாயம் சொல்லு பார்ப்போம்" என்றான்.

"வேறென்ன உபாயம் சொல்லப்போகிறேன். இந்த சமயம் நீ விவாக விசாரத்தை விட்டு ஜமீன் நிர்வாக காரியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியதைத் தவிர வேறே உபாயம் ஒன்றுமில்லை. உனக்கு ஜமீன் காரியங்களைச் சுயமாய்ப் பார்க்கும் யோக்கியதை உண்டாகும் பொழுது, பிரதிபையைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம். அதற்கு முன் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் பிரயத்தனம் செய்தால், திண்டாட்டத்தில்தான் வந்து முடியும்."

"சரி, நான் உன் உபதேசத்தை அநுசரித்து நடப்பதானால், இன்று இன்னொரு பெண்ணைப் பார்க்கப் பாட்டியம்மை வரச்சொல்லியிருக்கிறாளே; அதற்கு என்ன செய்ய, சொல்லு."

"பெண்ணைப் பார்க்கவேண்டாம்."

"ஏன்? பார்ப்பதனால் என்ன கெடுதி? கல்யாணம் பண்ணிக்கொள்வதாய் நிச்சயித்து விடப்போகிறதில்லையே."

"கல்யாணம் பண்ணிக்கொள்வதில்லையானால், பார்க்கவேண்டிய அவசியமேது? பூபேந்திரா, கோபித்துக்கொள்ளாதே, உன்னுடைய

பழைய தோழர்களின் மாதிரிகள் எனக்குப் பிடிக்கவில்லை. உன்னுடைய நல்ல சுபாவத்தை அவர்கள் கெடுத்துவிட்டார்கள். பிரதிபையையே கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிறதென்று நீ உறுதி செய்து வைத்திருந்தால், வேறொரு பெண்ணின் முகத்தைப் பார்க்க ஏன் விரும்புகிறாய்? நீ இப்படிச் செய்யும்பக்ஷத்தில், உனக்கும் பிரதிபைக்கும் பகவானுக்கும் நீ அபசாரம் செய்தவனாவாய். எதை ஒருகால் பிடித்தாயோ அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள். ஜாக்கிரதை, பிடித்த பிடியைத் தளரவிடாதே. நான் இதை நல்ல விஷயத்தின் சம்பந்தமாகவே சொல்லுகிறேன். கெடுதலான விஷயங்களை எப்போதும் பற்ற வேண்டாம். ஒருகால் பற்றினால், பற்றினவுடனே விட்டு விடு."

பூபேந்திரன் நரேந்திரனுடைய வார்த்தைகளுக்கு எவ்வகை உத்தரமும் கூறாமல் சற்று நேரம்வரை சும்மா இருந்தான். அதற்குப் பிறகு நரேசன் சொன்னான்: "சரி, நான் போய் வருகிறேன். எனக்கு இப்பொழுது வேலை சரியாயிருக்கிறது. பி. எல். பரீக்ஷை மிகவும் நெருங்கிவிட்டது. எனக்கு இக்காலத்தில் கொஞ்சமும் ஒழிவு கிடைக்காவிட்டாலும், நான் வரவேண்டியது அவசியமாயிருந்தால், யாரிடமாவது சொல்லியனுப்பினால், அவசியம் வருகிறேன்." இப்படிச் சொல்லிவிட்டு நரேசன் எழுந்திருக்கப் போகையில் இராஜகுமாரனுடைய பழைய தோழன் ஒருவன் வந்து சேர்ந்தான். நரேசன் அவனைப் பார்த்தும் பாராதவனாய், இராஜகுமாரனிடம் விடை பெற்றுக்கொண்டு தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

(தொடரும்.)

பண்டைகாலத்து ஸ்திரீகள் அநுசரித்த நல்லொழுக்கங்கள்.

(ஸ்ரீமான் ஃ. N. கோபால கிருஷ்ணய்யர்.)

ஸ்திரீகளுக்குத் தங்கள் கணவனே முதல் தெய்வமாகும். இதை யொட்டியே 'குலமகட்கழகு கொழுநனே தெய்வம்' என வழங்கி வருகிறது. சர்வேச்வரன், பேதைமையாகிய பெண்களைச் சிருஷ்டித்ததற்குக் காரணமென்னவெனில், மணவாளராகிய கணவருக்குப் பணிவிடை செய்யவும், லோகவிருத்திக்குச் சந்ததி உற்பத்தியாகவும், இல்லற தர்மத்திற்கும், தென்புலத்தார், தெய்வம், விருந்தோக்கல் இவைகளுடன் அதிதி பூஜை, அக்கினி ஹோத்திரம் முதலியன அவரவர்கள் குலாசாரத்திற்கு ஏற்ப நடத்துவதற்கும் உண்டாக்கினார். இதன்படியே பண்டைக்காலத்து ஸ்திரீகளும் அநுசரித்து வந்தார்கள். அவர்கள் அநுசரித்த சிற்சில நல்லொழுக்கங்களை ஈண்டு குறிப்பிட ஆவலுள்ளவனாயிருக்கிறேன். அவைகளாவன:—

(1) ஸ்திரீகள் உதயத்திற்கு முன்னெழுந்து மலஜலங் கழித்து, தந்த சுத்தி செய்து, தெருவாசல் வீடெல்லாம் திருத்திப் பெருக்கி, மெழுகிக் கோலங்களால் அலங்கரித்தல். பாத்திரங்களைச் சுத்தி செய்துவிட்டு, விழுப்பாகிய பாண்டங்களை விளக்கி, ஸ்நானம் செய்தல்.

(2) நித்திய விதி நேமங்கூடி, சூரிய நமஸ்காரம் செய்து, ஈச்வர பூஜை செய்த பின்பு தனது இஷ்டதெய்வமாகிய நாயகனுடைய படுக்கை யறைக்குச் சென்று அவருடைய நித்

திரையை நீக்கி அவருக்கு நடத்தவேண்டிய உபசாரங்களைக் குறைவில்லாமல் செய்தல்.

(3) பத்ரம், புஷ்பம், தீர்த்தம், அறுகு, அக்ஷதை, தூபதீப நைவேத்தியத்துடன் மாமி மாமனாரை எழுப்பி அவர்களுக்கு, இருமல வுபாதி கடத்திய பின், பல் விளக்க ஜலங் கொடுத்து, பிறகு அவர்களை ஆசனத்திலிருத்தி, ஸ்திரீ ஜலம்விட, புருஷன் அவர்களுடைய பாதங்களைத் துலக்கி, அவர்கள் ஆசீர்வாதங் களைப் பெறுதல்.

(4) ஆகாராதிகளைப் பக்குவப்படுத்தி, மாமி மாமனாரிருவர்களுக்கும் கொடுத்தபின் கணவனுக்குப் போசனமிட்டுத் தாம்பூலந் தந்து, அவர் வெளியே செல்லும்வரை அவரை விட்டகலாமல் உபசரித்தல்.

(5) அதிதிகள் வந்தால், பூஜை புரிந்து, வஞ்சனை நினையாமல், உணவு கொடுத்தல்.

(6) பசுக்களைக் குளிப்பாட்டிக் குங்குமமிட்டு, நீருடன் புல்லருந்தச் செய்தல். ஆலயங்களுக்கு அபிஷேகப் பால் வார்த்தல்; உறவினரை உபசரித்தல்.

(7) தானும் உணவருந்தி, வேலைக்காரருக்கும் உணவு கொடுத்தல். வீட்டுச் சாமான்களை புருஷனுக்கறிவிக்காமல் தானே சேர்த்தல். கேள்விக்குத் தகுந்த உத்தரமுரைத்து, வம்பு வசனங்களுக்கு இடங்கொடாமலிருத்தல்.

(8) கணவனே தெய்வமென்று கனவிலும் மறவாமல் வழிபடுவது. அவருடைய சொல்லுக்கு மல்லுக் கட்டி வார்த்தை யாடாதிருத்தல். அவருடைய சுற்றத்தார்களிடத்தில் நல்லவள் எனப் பெயர் வாங்குதல்.

(9) புறங்கூறுமை. இவ்விடத்திய பேச்சை அவ்விடத்திலும், அவ்விடத்திய பேச்சை இவ்விடத்திலுமாகக் கோட் சொல்லிக் கலகம் விளைவிக்காமலிருத்தல்.

(10) பெற்றோருக்கும், பிறந்தார்க்கும் சண்டை யுண்டாக்காமலும், பொறுமை, பொய், வீணாசை முதலிய இல்லாமலுமிருத்தல். சொல்லுவார் பேச்சைக் கேட்டு மல்லுக்குப் போகாதிருத்தல்.

(11) புருஷன் வெளியூர் சென்றிருக்குங் காலத்தில், சந்தன புஷ்ப தாம்பூல பரிமளங்களை உபயோகிக்காமை. ஆடம்பரமான ஆடையாபரணங்களால் அலங்கரியாதிருத்தல்.

(12) ஊருக்குச் சென்றவர் திரும்பி வந்த பிறகு இத்தியாதி அலங்காரத்துடன் எதிர் நின்று, அவர் கண்டு கண்களிக்கக் கலந்து இன்பம் பெறுதல்.

(13) நாயகனுக்கு முந்தி சாப்பிடாமை. நாயகனின் இலையில் அன்னம் படைத்துவிட்டு உப்பில்லை, பருப்பில்லை, ஊறுகாயில்லை, மிளகு, மிளகாய், புளி, அரிசி முதலியன ஒன்றுமேயில்லையென்று சொல்லாதிருத்தல்.

(14) தாம்பூலம் தரித்துக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து, நான்கு நாளைக்கு சாமான்களிருக்கும் போதே முன்னடி சொல்லி ஜாக்கிரதை செய்தல்,

(15) வரவுக்குத் தகுந்தபடி செலவு செய்தல். 'வாழ்மனைப் பண்டம் தாய்மனைக்கேகில் தாய்மனை பாழ் மனையாகும்' என்கிற வாக்கியத்தை அறிந்து நடத்தல்,

(16) வீண் பேச்சுகளும் பிறப் பேச்சுகளும் பேசாமை. கிஞ்சித்தேனும் டம்பங்காட்டாதிருத்தல். ஆண்மகளில்லாதபோது ஆடிப் பாடி அலங்கோலமாயில்லாதிருத்தல்.

(17) தெய்வ ஸ்தலம், குரு ஆச்சிரமம், தேவாதிகளுலகம், மோக்ஷவீடு இவைகளில் குடியிருக்கும் குடிசையைத் தவிர வேறுயிடமறியாதிருத்தல்,

(18) கலியாணஞ் செய்துகொண்டு மாமியார் வீட்டுக்கு வந்த பிற்பாடு, தெருவாசற் படியிற் போய் நில்லாதிருத்தல். புருடன் முதலிய குடும்பத்தோர் தவிர, அயல் ஆண் பெண்ணுடன் நகைத்துப் பேசாமை.

(19) வீட்டுப் பிரத்தியேகம் வந்தால் ஒரு வேளை அன்னம் உட்கொள்ளுதல். மூன்று நாளும் ஸ்நானம் செய்து, நான்காம் நாள் சுத்தோதகஸ்நானம் செய்து, பஞ்சகவியம் உண்ட பிற்பாடு புருஷனுடன் பேசுதல்.

(20) மாதருதுவான நான்கு நாளும், புருஷன் முகத்தில் விழித்தாலும், பேசினாலும், மாங்கல்யத்திற்குக் குறைவாதலால், அவ்விதமில்லாதிருத்தல்.

(21) வாய் திறந்து பேசாது கை சாடை காட்டல். ஆறு குளம் முதலியவைகளைத் தீண்டாதிருத்தல். ஸ்நானம் செய்த பிற்பாடு நாயகன் முகத்தில் விழித்தல். நாயகன் ஊரிலில்லாவிடில், அவருடைய ரூபத்தை நினைத்து சூரிய பகவானைத் தரிசித்தல்.

(22) எழு வயதிற் கடிகப்பட்ட எந்த ஆண்மகனோடும் முகாலம்பனம் செய்யாதிருத்தல்; மேனி மினுக்குதலில்லாமை.

(23) இரவில் சரசமாயிருந்ததை நினைத்துப் பகலில் இறுமாப்பு அடைந்து, புருடனிடம் இருக்கும் மரியாதையைப் போக்கடித்துக் கொள்ளாதிருத்தல்.

மேற்சொல்லியபடி, பண்டைக்காலத்து ஸ்திரீகள் நடந்துவந்தார்களெனத் தெரிகிறது. தற்காலத்து மாந்தர்கள் தற்காலத்திய நவநாகரிகத்தின்படி அநுசரித்து வரும் ஒழுக்கங்களையும், இனி நம்நாட்டின் முன்னேற்ற விஷயமாகவும், ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காக அவர்கள் அனுசரிக்கவேண்டிய விஷயங்களையும் நன்கு விரித்து எழுத நம் 'சிந்தாமணி' பத்திராதிபவர்கள் அடுத்தமாதத்திய சஞ்சிகையில் இடம் தருவார் என நம்பி இச்சிறு விஷயத்தை எழுதத் துணிந்தேன். எல்லாம் வல்ல இறைவன் சிந்தாமணியைப் போற்றுவாராக! சுபம்!

கிண்டி குதிரைப் பந்தயம்.

(சிறு கதை)

சகோதரி வி. பாலம்மாள்.

அதிகாலை ஐந்து மணிக்கே சீதை எழுந்திருந்து வென்னீர் தவலையில் தண்ணீர் நிரப்பி அடுப்பையும் பற்றவைத்தாள். அன்று சனிக்கிழமை யானதால் தன் கணவன் சூரியோதயத்திற்கு முந்தியே எண்ணெய் தேய்த்துக் குளித்தால் அவன் தேகத்திற்குச் சௌகரியமாயிருக்குமென்பது சீதையின் எண்ணம். வென்னீர் காய்ந்துவிட்டது. நல்லெண்ணெயில் மிளகைத் தட்டிப்போட்டுக் காய்ச்சி வைத்தாள். மிளகு ரசம், பருப்புத்துகையல், அன்னம் இவைகளைத் தயாரித்து ஏன்கைத்து தளுவாடங்களையும் சுட்டுவைத்தாள். அயர்ந்து நித்திரை புரியும் கணவன் தானாக எழுந்திருக்கும்படி ஏதேதோ சத்தப்படுத்தினாள். ஆனால் ராமன் இந்த ஜாடை சமிக்கினைகளில் எழுந்திருக்கப் பட்டவனல்ல. ராமன் சென்னை டிராம்வே கம்பெனியில் கண்டக்டர் உத்தியோகம் பார்த்துவந்தான். சம்பளம் சாதாரணமாக இருந்தபோதிலும் அவ்வுத்தியோகம் மட்டும் நின்ற விடத்தில் அரை விநாடியும் நிற்காது ஓடித்திரியவேண்டிய தொழிலாகும். கைப் பிடிக் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு தாவித் தாவித் திரிந்தும், இறங்கியேறியும் டிக்கட்டுக்

கொடுப்பதில் ராமன் கெட்டிக்காரனென்று பெயரெடுத்தபோதிலும், இவ்வுத்தியோகத்தினால் அவன் தேகசுகங்கெட்டு, சோகைபிடித்து, நல்லுயிரற்று, சஞ்சாரப்பிரேதம் போல் விளங்கினான். விடியற்காலை இரண்டு மணிக்கே தூக்கம் விட்டெழுந்தால்தான் டிராம்வண்டிகள் புறப்படக்கூடிய ஐந்து மணிக்குச் சரியாய்ப் போய்ச்சேரலாம். பகல் ஒரு மணியுடன் இவன் வேலை முடிவடைகிறதானாலும் ஆபீசுக்குப்போய், பணத்தைக் கணக்கிட்டுக் கட்டிவிட்டு, அதற்கு மேல் வீடு வந்து குளித்து உண்பதற்கு மாலை நான்குமணியாகிவிடும். பகல் வேலைக்குச் செல்லும் நாட்களில் காலை பத்து மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டால் ஒரு மணிக்குத் தன் வேலையை ஒப்புக்கொள்வான். இரவு பத்து மணிக்கு டிராம் நிறுத்தப்பட்டதும் இவன் வீடு சென்று சோற்றைக் கண்டு பிடித்துக் கட்டையைக்கீழே கிடத்துவதற்குள் மணி ஒன்றடித்துவிடும். இவ்வளவு கஷ்டப்பட்டாவது சம்பாதித்துவரும் மாதச்சம்பளம் இவன் குடும்பத்திற்கு முழுவயற்றிற்கும் உணவு அளிக்கக்கூடியதாயுமிருந்ததில்லை. ஒரு ரூபாய்க்கு இரண்டரைப்படி அரிசியும் அரையணாவுக்கு ஒரு வாழைக்காயும் விற்குமானால் மாதச்சம்பளம் இருபது ரூபாயில் நான்கு குழந்தைகளுடன் ராமன் எவ்வாறு முழுவயிறு உண்ண முடியுமென்பதை எடுத்துரைக்கவேண்டுவதில்லை. இவ்வளவானாலும் ராமன் ஒருவிதத்தில் புண்ணியவானாகவே இருந்தான். மனைவி சீதை பர்த்தாவுக்கேற்ற பதிவிருதை என்பதாக அக்குடும்பத்தைக் கவனித்துவந்ததால் இவன் மனங்கலங்காது காலக்ஷேபம் செய்துவந்தான். கையிலில்லாவிட்டாலும் மார்வாடி கடையில் பணம் கடன்வாங்கியாவது சேலைகளும் நகைகளும் வாங்கித்தா வேண்டுமென்று சீதை தன் கணவனை உபத்திரவப்படுத்தமாட்டாள். அழகிய கைராட்டினம் ஒன்றை வைத்துக்கொண்டு அவ்ருடம் ஒழிந்த நேரங்களில் நூற்கும் நூலைக்கொண்டு தன் குழந்தைகளுக்குத் துணிப்பஞ்சமின்றி மட்டுச்செலவில் ஆடையுடுத்தி வந்தாள். வீட்டிலுள்ளதைக் கணவனுக்கு முன்னதாக இட்டு மீந்ததைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டு அனேகமாய்ப் பட்டினி கிடப்பதற்குச் சீதை யஞ்சியவளன்று. பெண்களுக்கணிகலம் போன்று விளங்கும் நற்குணவதியான தன் மனைவி வாழக்கூடிய இடம் இவ்வேழைக்குடியல்லவென்று ராமன் தனக்குள் அடிக்கடி வருத்தப்படுவதுமுண்டு. இவ்வளவு வைபவத்துடன் காலங்கழிக்கும் ராமன் முதல் நாளிரவில் தன் வேலையை முடித்துப் பத்து மணிக்குமேல் வீடுவந்து உண்டு உறங்குவதற்கு ஒரு மணியடித்திருக்குமானால் அவனால் அதிகாலை ஐந்துமணிக்கு எவ்வாறு எழுந்திருக்க முடியும்? அன்று லீவு வாங்கி வந்திருப்பதாகச் சொல்லியிருந்தானாகையால் அதிகாலையில் ஸ்னானம் செய்து வீட்டோடு இருப்பதில் சிரமமேற்படாதென்று சீதை நினைத்தாள். ஒருவாறாகக் காலை ஏழு மணிக்கு ராமன் விழித்தெழுந்தான். எண்ணெயிட்டு முழுகினான். சாப்பாட்டையும் முடித்துக்கொண்டான். பக்கத்திலிருக்கும், நடுக்குழந்தை 'எனக்கும் சுடுசோறு போடு'என்று தாயின் மடியைப் பிடித்திழுத்தது. "பழையது தான் நன்றாயிருக்கும், உனக்குக் கையில் போடுகிறேன், வா'என்று சீதை தன் குழந்தையை சமாதானப்படுத்தினாள்.

இத்தகைய சம்பவம் தன் வீட்டில் அடிக்கடி நடைபெறுவதை ராமன் கண்ணால் கண்டிருந்தானானாலும் அன்று இவனுக்கு இது மிக துக்கத்தை விளைவித்தது. 'மனைவியையும் மக்களையும் சுகமாகப்பாதுகாக்கமாட்டாத நான் ஏன் ஒரு ஆண் பிள்ளையாகப்பிறந்தேன்' என்று நெடுநேரம் யோசித்து மனம் வருந்தினான்

மனக்கலக்கம் தாங்காது வெளியிற் சென்றான். இதற்குள் பகல் மணி பதினொன்று அடித்திருந்தது. அன்று கிண்டியில் நடைபெறும் குதிரைப்பந்தயத்திற்காக ஜனங்களை நிறப்பிச் செல்லும் பஸ் வண்டிகள் காற்றினும் வேகமாய்க் கடுகி யோடுவதையும், அவற்றிலுள்ள உற்சாக புருஷர்கள் மேல் அங்கவஸ்திரம் அலைந்தாட வாயில் வெற்றிலையும் பையில்பணமும், கையில் ஒய்யார வீச்சுமாக தேவலோகத்திற்குக் கூண்டோடு செல்பவர்களைப்போல் ஆனந்த வெள்ளத்திலாழ்ந்து செல்வதையும் ராமன் கவனித்தான். இவன் மனதிற் சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது.

"கிண்டி குதிரைப் பந்தயத்திற்குச் சென்று லாட்டரிச் சீட்டெடுப்பதில் அதிர்ஷ்டமுள்ளவர்களுக்குப் பெருத்ததொகை கிடைப்பதால் தானே இவர்கள் எல்லோரும் ஈசற் புற்றைப் போல் பறந்து செல்கின்றார்கள். அத்தகைய அதிருஷ்டத்திற்கு நாமும் ஏன் ஒரு முறையாவது பிரயத்தினப்படக்கூடாது. கடவுள் நமக்கு உதவி செய்வதென்றால் இவ்வழியில் செய்யட்டுமே. அதிருஷ்டமென்பது கொடுத்து வைத்தவனுக்குத்தான் கிடைக்கும். தெய்வத்தின் அருளால் தான் அதிருஷ்டமுண்டாக வேண்டியிருக்கிறது. 'தெய்வம் மனுஷ்யரூபேண' என்று இவர்கள் அனைவரும் பணத்தைக் கட்டிக்கொண்டு சென்று ஒருவன் கையிற் சேர்த்துக் கொட்டிவிட்டு வருகிறார்கள் போலும். இதெல்லாம் நியாயந்தானே. இவ்வாறிருக்க 'குதிரைப் பந்தயஞ் சென்று கொள்ளை கொடுக்காதீர்கள்' என்று சிலர் கூச்சலிடுகின்றனரே. இது என்ன முட்டாள்தனம். பிறனுக்குமனதுடன் காலணாக் கொடுப்பதென்றால் இவ்வளவு ஜனங்கள் சாயுமா? ஒவ்வொருவனும் தனக்கு, தனக்கு என்று ஓடுகிறான். கொடுத்துவைத்தவன் அள்ளிச் செல்கிறான். இவ்வளவு தானே. இது ஒரு நல்ல சந்தர்ப்பமே. நாமும் இன்று சென்று அதிருஷ்டம் பெறுவதற்கு முயற்சிப்போம்" என்று தீர்மானித்துக்கொண்டு ராமன் தன் வீடு திரும்பினான். குழந்தையை சமாதானப்படுத்துவதற்காகப் பழையது இருப்பதாகச் சொன்னதன்றி உண்மையில் வீட்டில் ஒரு மணி அரிசியுமில்லாததால் சோறு கேட்டலும் குழந்தைகளை ஒருவாறு சமாதானப்படுத்திவிட்டு அடுத்த வீட்டிலிருந்து ஒருபடி கேழ்வரகைக் கடன் வாங்கிக்கொண்டு சீதை வீட்டிற்குள் வருவதை ராமன் கவனித்தான். கிண்டிக்குச் செல்லத் தீர்மானித்திருக்குமிவனுக்கு ஐம்பது ரூபாயாவது கைக்கு வேண்டியதவசியமாயிருந்தது. இவனுக்குக் கைமாற்றுக் கொடுப்பார் யாருமில்லை. நெடுநேரம் தனக்குள் யோசித்து முடிவில் தனது தீர்மானத்தை மனைவியிடம் வெளியிட்டான். கிண்டி குதிரைப்பந்தயம் செல்லப்போவதாய்க் கணவன் சொல்லக்கேட்டுசீதை திடுக்கிட்டாள். "ஐயோ! இந்த யோசனை எதற்கு? குதிரைப் பந்தயத்தில் கையிலுள்ள பணங்களையெல்லாம் சீட்டுப் போட்டு முழுகிப்போன குடிகள் கணக்குண்டோ? நீங்கள் இதுவரையிலும் சிலரைப் போல் நாடகம் செல்லல்,புகை குடித்தல், சீட்டு விளையாடல் முதலிய கெட்ட வழக்கங்களைச் சிறிதும் கைக்கொள்ளாதிருந்தது போக இன்று பெரிய பிரமாத யோசனைக்கு இடங்கொடுத்து விட்டீர்களே. இது நமது ஏழைக் குடும்பத்திற்கடுக்குமா? இராப்பகலாய், வேளைக்கு உணவற்று, நல்ல தூக்கமற்று நீங்கள் ஓடி ஓடி உழைத்துத் தேடிவரும்போதே நமது குழந்தைகள் படிக்குப்பாதி நாட்களில் அரைவயிறுண்டு பட்டினி கிடக்கின்றனவே. இதோ பாருங்கள், அடுத்த வீட்டுக்காரியிடம் கெஞ்சிக் கூத்தாடி ஒருபடி கேழ்வரகை வாங்கிக்கொண்டு வருவதற்குள் என் பாடு போறும் போறுமென்றாய்

விட்டது. இதற்குமுந்தி வாங்கிப்போன அரிசிக்கடனை எல்லாம் தீர்க்கவில்லையே என்று அவள் வாய்க்குவந்தபடி அவமதித்துப் பேசினாள். வாடிக்கைக் கடைக்காரன் ஒன்றுக்கிரண்டு விலைவைத்தாவது பண்டங்களைக் கடனாகக் கொடுத்ததுபோக பழைய கணக்குத் தீர்க்கப்பட்டாலன்றி இனிசாமான் கொடுக்கப்படமாட்டாதென்று கண்டிப்பாய் சொல்லிவிட்டான். நாளைப்பொழுது விடிந்தால் வேலைக்குச் செல்லும் உங்களுக்கு எவ்வாறு உணவு தயாரிப்பதென்று நான் தவித்துக்கொண்டிருக்கிறேனே. இச்சமயத்தில் நீங்கள் கிண்டி குதிரைப்பந்தயம் செல்வதாய்ச் சொல்லுகிறீர்களே. அந்தப்பேயின் வாய்க்கு இரைபாகக் கூடிய திமிர் நம்மிடமில்லையே. முந்தாநாள் பந்தயத்தில் தோற்றுப்போன குப்பன் வீட்டில் அவன் வாங்கிச்சென்ற கடனுக்காகக் கடன்காரன் உடன் ஜப்திசெய்து வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளைத் தெருவில் நிறுத்திக் கதவைப் பூட்டிவிட்டதை நீங்கள் கண்ணால் பார்த்திருந்தும் இதற்குத் துணியலாமா? இதுவரைக்கும் குதிரைப் பந்தயம் பலபேர்களின்பொருள்களையும், சிலரின் நல்லறிவையும், ஒன்றிரண்டு பேர்களின் உயிரையும் கொள்ளைகொண்டது போதாதோ.

"இந்தக் குதிரைப் பந்தயத்தில் ஏதோ அளவற்ற லாபம் கிடைக்கப்போகிறதென்ற பேராசையால் பிரைஸ் சீட்டுக்களை மேன்மேலும் வாங்கி முடிவில் கையிலுள்ள காசுடன் முகத்திலுள்ள பவிஷையும் இழந்து, பெண்டாட்டி கழுத்திலுள்ள தாலிச் சரடு முதலாக அடமானத்தில் தோற்று அலறியழும் பலரை நீங்கள் கண்ணால் கண்டதில்லையா? பணத்திமிர்கொண்டவர் செய்யும் காரியங்களையெல்லாம் கால்வயிற்றுச் சோற்றுக்கும் வழியற்றிருக்கும் ஏழைக் குடிகள் செய்வதென்றால் அது கட்டுப்படியாகுமா? இவ்விதப் பிரைஸ் சீட்டுக்கள் எல்லாம் பணத்தை மூட்டை மூட்டையாகக் குவித்து வைத்து ஏழைகளுக்குக் கடுகளவு மீயாத கல்நெஞ்சத்தினர்களான லோபிகளின் பணத்தைக் கரைப்பதற்கு ஏற்பட்டவைகளன்றி ஏழைக் குடிகளுக்கு இவ்விளையாட்டுக்களில் என்ன சம்பந்தமிருக்கிறது? பந்தயத்தில் கெலித்த குதிரைக்காரன் பணம் பெறுவது நிச்சயம். இதற்காக வேண்டிய செலவுகள் நிமித்தம் பிரைஸ் சீட்டு விற்கப்படுகின்றனவாம். பிரைஸ் சீட்டுக்கள்வாங்கியிருப்பவர்களுக்கெல்லாம் பங்கிடப்படுங்கால் பத்து ரூபாய் சீட்டு வாங்கியவர்களுக்கு ஒருகால் ஐயம் கிடைத்தாலும் இவர்கள் ஈவுக்கு அனேகமாய் இரண்டு மூன்று ரூபாய்கள்தான் அதிகம் கிடைப்பது வழக்கமாம். இந்த லக்ஷணத்திற்குப் பிரவேசக்கட்டணம், டிக்கெட்டு இவைகளுக்கெல்லாம் வேறு பணச்செலவு செய்யவேண்டுமாம்.

"இந்த வீண் செலவெல்லாம் தனக்குப் பிரைஸ் விழுந்து விடுமென்ற பேராசையால் தானே செய்யவேண்டியிருக்கிறது. நமக்கு அதிருஷ்ட முண்டானால் கடவுள் வேறு எவ்விதத்திலேனும் சம்பத்தளிப்பார் என்பதில் ஐயமில்லை. இதை விட்டுப் பல பேர் வயிறெரிய அவர்கள் பணத்தை ஒருவன் மட்டும் கொட்டிக்கொண்டு போவதைவிட ஏற்கனவேயுள்ள ஏழ்மைத்தனத்தில் கஞ்சி குடிப்பதே விசேஷமாகும். உங்கள் குடும்பத்தின் உயர்வும், உங்களைப் பெற்றோர் வளர்த்த பெருமையும், நீங்கள் படித்த பரீக்ஷையும் எல்லாம் மறைந்து, பூர்வீக சொத்துக்களை யெல்லாமிழந்து, வேலையில்லாத் திண்டாட்டத்திலடிபட்டு - டிராம் வண்டியில் கண்டக்டராகக் காலங்கழிக்க நேர்ந்திருக்குமானால் இதைக் காட்டிலும் நமது குடும்பத்திற்குத் துரதிருஷ்டமென்பது வேறு இருக்கிறதோ? 'ஐங்காதம் போயினும் தன்

பாவம் தன்னோடு' என்று இருக்கும் பழமொழியை மறந்து விட்டீர்களோ. உங்களுக்குக் குதிரைப் பந்தயம் பார்க்க ஆசையாயிருந்தால் ஒரு முறை போய் வாருங்கள். அந்தப் பாழும் பிரைஸ் சீட்டுக்களை மட்டும் வாங்குவதென்ற எண்ணத்தை அடியோடு மறந்து விடுங்கள். இதனால் நீங்கள் பிறகு மெத்த கஷ்டங்களுக்குள்ளாகவேண்டிவந்தால் என்ன செய்வதென்பதை ஆரத்திர யோசித்துப் பாருங்கள். நீங்கள் கடன்காரர்களிடம் அகப்பட்டுத் தவித்தால் நான் அதை எவ்விதம் கண்டு சகித்திருப்பேன்? என் உடம்பிலேனும் நகைநட்டுக்கள் இருப்பின் என்ன வந்தாலும் உங்கள் மனங்குன்றாது சமாளித்துக் கொள்வேன். அதுவுமில்லையே. எனக்கு நல்ல அதிருஷ்டமிருந்தால் நீங்கள் நல்ல ஸ்திதியில் இருக்க மாட்டீர்களா? 'ஏரு பிடித்தவன் என்ன செய்வான், பானை பிடித்தவள் பாக்கியம்' என்ற பழமொழி என்னால் தானே மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஏதோ இம்முறை என் வேண்டுகோளை மறுத்துவிடவேண்டாம். கிண்டி குதிரைப்பந்தயம், பிரைஸ் சீட்டு என்ற விளம்பரங்களைக் கண்டாலே பலர் மனம் பதைபதைக்க வாரம்பித்திருக்கிறது. நமது சென்னை நகர சபையின் கூட்டத்தில்கூட இதைப்பற்றிச் சென்ற மாதம் பிரஸ்தாபிக்கப்பட்டு பலத்த விவாதம் நடைபெற்றதாமே. யார் எக்கேடு கெட்டாலும் கெடட்டும். நமக்கு இந்தத் துன்பம் வேண்டவே வேண்டாமென்றுதான் நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று சீதை தன் கணவனிடம் மெத்த பரிதாபத்துடன் பேசி முடித்தாள்.

சீதையைத் தற்கால ஸ்திதியில் கவனிப்பவர்களுக்கு அவள் நன்கு கற்றறிந்த பெண்மணியென்றுதோன்றுதாயினும் அவள் படித்த குடும்பத்தில் செல்வமாய் வளர்க்கப்பட்ட ஏகபுத்திரியாவாள். தன் தோழி கமலாள் வரவழிக்கும் தமிழ்ப் பத்திரிகைகளை நாள் தவறாது சீதை படித்து வருவாள். அறிவும் அதிருஷ்டமும் ஒன்று சேருவது கலிகாலத்தில் சில விடங்களில் அருமையாய் விட்ட விஷயங்களில் ஒன்றல்லவா? 'குலமகட் கழகு கொழுநனைப் பேணுதல்' என்ற நீதி மொழிப்படியும், 'மலையிற் பிறந்தாலும் உரலில் மசிய வேண்டும்' என்ற நியாயப்படிக்கும் ஏழ்மைத்தனத்தில்ஆழ்ந்துகிடக்கும் கணவனுக்குஅவன் முகங்கோணாது, மனம் வருந்தாது, அலக்ஷியம் செய்யாது நடந்து கொண்டு தன் மனங்குன்றாது சந்தோஷமாய்க் காலங்கழித்து வரும் சீதைக்கு அவள் படித்திருந்த படிப்பினால் அமைதியும் அடக்க வணக்கமும் சாந்தமும் சமாதானமுமே மனதில் நிலை பெற்றிருந்தன. அவள் இச்சமயம்வரை முகங்குன்றாது அவ்வேழைக் குடும்பத்தை சந்தோஷத்துடன் நடத்தி வந்தவளன்றோ? அவள் சொல்வதை எல்லாம் கேட்டதும் ராமனுக்குத் தான் செய்யப்போகும் காரியம் தனக்கேற்றதல்லவென்று தோன்றிற்றேயானாலும் அவ்வெண்ணம் அவன் மனதில் நிலைபெற மாட்டாது ஓடி ஒளிந்து விட்டது. முடிவில் மனைவி கையிலிருக்கும் காப்பைக் கழற்றிச் சென்று மார்வாடி கடையில் அடமானம் செய்து மூன்று பணச் சொச்சத்திற்கு முப்பத்தைந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு கிண்டிக்குச் சென்று விட்டான். தன் கையிலுள்ள நகைபோய் விட்டது பற்றிச் சீதை வருந்தவில்லை. "தோற்று விட்ட அவமானத்தையும் அதனாலேற்பட்ட கடனைப் பற்றியும் மனம் வருந்தி ஒருகால் நம் கணவன் எங்கேயாவது ஓடி விடாதிருக்க வேண்டுமே. யாரோ ஒருவன் இது பற்றித் தற்கொலை செய்து கொண்டதாகவும் சென்ற வாரப் பத்திரிகைகளில் படித்தோமே. இவ்வாறான சம்பவங்கள் ஒன்றும் நேரிடாமல் இருக்கவேண்டுமே" என்று அஞ்சினவளாகக் குளிர்ந்த முகத்துடனேயே

தன் கணவனுக்கு விடை கொடுத்தனுப்பியதன்றி 'வேறில்லை. கல்பகாம்பா! தாயே! கபாலீசுவரா! பார்த்தசாரதிப் பெருமாளே! ஒரு கெடுதியுமின்றிக் காப்பாற்றும்!' என்றிவ்வாறெல்லாம் பிரார்த்தித்த வண்ணம் அன்று மத்தியானப் பொழுதை ஒருவாறு கழித்தாள்.

அஸ்தமித்ததும் விளக்கை யேற்றி வைத்துச் சாப்பாடு தயாரித்துத் தன் கணவன் வரும் வழியையே எதிர் பார்த்தவண்ணம் தெருவாயிலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். இரவு ஒன்பது மணியுமடித்துவிட்டது. இன்னம் காணோமே என்று சீதை சொல்லி வாய்மூடுமுன் ராமன் வீட்டிற்குள் வந்து நுழைந்தான். இவனைக் கண்டதும் 'இரண்டாம் வேளைக்கு ஏதேனும் சாப்பிட்டீர்களா? நாழியாய் விட்டதே. சாப்பிட உட்காருங்கள்" என்று அன்புடன் உபசரித்தாள். கையிலிருந்த பணத்தையெல்லாம் தோற்றுவிட்ட துக்கத்துடன் தன் மனைவியின் உயர்ந்த குணத்தைக் கண்டதும் ராமனுக்குத் தன்னை யறியாமல் துக்கம் மேலிட்டுப் பச்சைக் குழந்தையைப்போல் வாய் திறந்து அழுது விட்டான். கணவனது இப்பரிதாப நிலையைக் கண்டு சீதை தானும் கண்ணீர் விட்டுக் கதறினாள். முடிவில் சீதை தன் மனதையும் திடப்படுத்திக்கொண்டு கணவனையும் சமாதானப்படுத்தி நடந்த விஷயமென்னவென்று அன்புடன் விசாரித்தாள். தான் கிண்டி சென்றதும், ஒவ்வொரு பந்தயத்திலும் ஐந்தும் பத்துமாகக் கையிலிருந்த ஐம்பது ரூபாய்களுக்கும் பிரைஸ் சீட்டு வாங்கியதும், முடிவில் காலணாவும் கிடைக்காமல் கால் கடுக்க மெய்சோர நடந்து வந்ததையும் விவரமாக ராமன் தன் மனைவியிடம் தெரிவித்தான். 'இதற்கென்ன பிரமாதம். பணம் போனால் போகட்டும். நீங்கள் உங்கள் அனுபவத்தைப் பிறருக்குச் சொல்லி இனிப் பலர் இவ்வாறு நஷ்ட மடையாமலிருக்க வழி தேடுங்கள். இதுவே பரோபகார சிந்தனையாகும்' என்று மொழிந்தாள்.

இவர்கள் பேசிக்கொண்ட சத்தத்தில் மூத்த மகன் கண்ணன் தூக்கம் விட்டெழுந்து 'அப்பா எப்போ வந்தார்'? என்று கேட்டான். 'இப்போது தான் வந்தார். நீ தூங்கு' என்று சீதை யவனை யதட்டினாள். "இல்லையம்மா. நான் சாயங்காலம் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது 'இந்தா, உங்கப்பாவுக்கு வந்த கடிதம் இது. இதை வீட்டில் கொண்டு போய்க் கொடு' என்று தபாற்காரன் ஒரு தபால் கொடுத்துப் போனான். அதோ அந்தப்புஸ்தகத்தில் அதை வைத்திருக்கிறேன்: அதை அப்பாவிடம் கொடு' என்றான். கைப்பணத்தை இழந்த வேதனையால் ராமன் அக்கடிதத்தை நெடுநேரம் பிரித்து வாசிக்காமல் உன்மத்தம் பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான். "நமக்கு யார் எழுதியிருப்பார்கள்? அதைப்பாருங்கள்" என்று சீதை சொன்னதும் ராமன் கவரைப்பிரித்துக் கடிதத்திலுள்ளதைப் படிக்கலானான்.

கோலாலம்பூர்,
4—1—26.

'சிரஞ்சீவி ராமச்சந்திரனுக்கு அனேக ஆசீர்வாதம்.

'க்ஷேமம். நெடுநாட்கள் கழித்து நான் உனக்கு இக்கடித மெழுதியுள்ளது கண்டு நீ வியப்படையலாம். நான் முதன் முதலாக உனக்குத் தெரிவிக்கும் உண்மை என்னவெனில் உன் தகப்பன் நினைத்துவந்ததும் உன்னிடமும் தெரிவித்திருப்பதும் போல நான் சகோதர விசுவாசமற்ற துஷ்டனல்ல வென்பதே. எனக்கு இளைய சகோதரனாகிய உன் தந்தையை நான் பரிபூரண விசுவாசத்துடன்நடத்திவந்தேனென்பது உண்மை. இளம் வயதிலிருந்தே துஷ்ட சகவாசம் செய்து முடிவிற் பொருளையும் விண்வியயம் செய்யத் தலைப்பட்ட சகோதரனைக் கண்டித்து சீர்திருத்துதல் மூத்தவனாகிய எனது முக்கியக் கடமை என்று நினைத்தேன். நான் சொல்லும் புத்திமதிகள் அவன் மனதிற் படியவேண்டுமென்று மெத்தப்பாடு பட்டேன். நான் எனது சகோதரனிடங் கொண்டுள்ள அன்பை என் சிற்றன்னை எவ்வாறு அறிவாள். மாற்றாந்தாய் என்றவேற்றுமை அவளிடம்குடிகொண்டிருந்தது. தங்கள் சுயநலத்தைநாடிவீண் கலகம் செய்யும் தாய் தந்தையரின் உபதேசத்தில் அவள் மனம் ஈடுபட்ட தன்றி எனது சொற்களும் உண்மையான நடவடிக்கைகளும் அவளுக்கு வேற்றுமையாகவே தோன்றின.

'மரணாந்த காலத்தில் தந்தை என்னைக் கேட்டுக்கொண்டதற் கிணங்க இக்குடும்பம் வேற்றுமைப்படாது ஒரு தாய் வயற்றுப் பிள்ளைகளைப் போல் உன் தந்தையுடன் ஒற்றுமையாக வாழ்ந்து, சிற்றன்னையை பெற்ற தாயைப்போல் எண்ணிப் பணிந்து நடக்க வேண்டுமென்று நான் பெரிதும் பிரயத்தனப்பட்டேன். எனது எண்ணம் சற்றும் பலிக்கவில்லை. குடும்பப்பிரிவினை விஷயத்திலும் கண்ணியமாய் நடந்து கொள்ள நான் எவ்வளவோ முயற்சித்தேன். கோர்ட்டில் பாகவியாச்சியத்தைத்தாக்கல் செய்தாலன்றி தன் பெண்ணுக்கும் பேரனுக்கும் தக்க நியாயம் கிடைக்க மாட்டாதென்று உன் பாட்டி என்னைத் தூற்றினாள். என்னை வசைமொழிகளாலும் தன்னாலியன்றவரை ஏசினாள். என் தகப்பனாரின் கௌரவம் ஒன்றையேநினைத்தவனாதலால் பற்றி நான் சிறிதும் பதில் பேசாது பாகவிஷயத்திலும் அவர்களிஷ்டம் போலவே நடந்துகொள்ளத் தீர்மானித்தேன். குடும்பத்திற்குப் பொதுவான நகைகளை எல்லாம் தன்னுடைய தென்று என் சிற்றன்னை எடுத்துக்கொண்டாள். என்னைத் தூஷித்து வற்புறுத்திப் பாகம் செய்து கொண்ட சொத்துக்களை அழிக்காது இருந்திருப்பின் நான் வருத்தமடைய மாட்டேன். என் தகப்பன் தேடிய சொத்தை என் தம்பி யனுபவிப்பதில் எனக்குத் திருப்தியே யன்றி வெறுப்பில்லை. ஆனால் குலத்திற்கும் கோத்திரத்திற்கும் சிறிதும் சம்பந்தப்படாதவர்களாயும் இக்குடும்பத்தில் வேற்றுமை யுண்டாக்கக் காரணபூதர்களாயுமிருந்த பிறந்த வீட்டாரை நம்பிச் சகல சொத்துக்களையும் என் மாற்றாந்தாய் இழந்து விட்டதுடன் நில்லாது நான் குடும்ப சொத்துக்களை யொளித்து வஞ்சனை செய்து விட்டதாகவும் தூற்றியது கேட்டு என் மனம் சகியாது நான் வெளிநாடு செல்லத் துணிந்தேன்.

'பிறகு உன் தந்தையும் கேட்பாரின்றி மீந்துள்ள சொத்துக்களை யழித்து விட்டான். இவ்வுண்மை சிறிதும் உனக்கு இன்று வரை விவரமாய்த் தெரிய நியாயமில்லை. ஆனால் சகோதரத்ரோகியாகிய பெரிய தகப்பன் ஒருவன் அயல் நாட்டில் வாழ்ந்து வருகிறான் என்பதை மட்டுமே நீ யறிவாய். பனங்குடி பிச்சுமணி தன் பெண்ணை என் தகப்பனுக்கு இளைய தாரமாகக் கலியாணம் செய்து கொடுப்பதற்கு ரூபாய் ஐயாயிரம் ரகசியத்தில் பெற்றுக்கொண்டார். குச்சு வீட்டிற் காலங்கழித்த பிச்சுமணியின் பிள்ளைகள் இப்பொழுது மச்சு வீட்டில் வாழ்ந்து வருவதெல்லாம் என் தகப்பன் தேடிவைத்த சொத்தாலன்றி வேறில்லை. மனப்பூர்வமாயும் உண்மையை ஒளிக்காதும் வெளியிடுவேனாயின் நான் எனது சிற்றன்னையாலும் அவள் தந்தையாலும் ஏமாற்றப்பட்டேன் என்பது சத்தியம். இவை யெல்லாம் பழங் கதை. முதிய பருவத்திலிருக்கும் நான் இனி கடவுளைத் தியானம் செய்து நற்கதியைத்தேடவேண்டியதுமுக்கியமன்றிச் சென்றுபோனதைநினைப்பதில் பயனொன்றுமில்லை. பூர்வோத்திரம் இன்னதென்று உனக்குத் தெரிவித்தாலன்றி நான் மேலே எழுதப்போகும் விஷயத்தை நீ

அங்கீகரிப்பது அசாத்திய மெனத் தெரிந்து நமது குடும்பக்கதையைச் சிறிதளவு பிரஸ்தாபிக்கமுன் வந்தேன். சமீபத்தில் சென்னையிலிருந்து இவ்விடம் வந்துள்ள எனது நண்பர்ஒருவர் மூலமாக உனது சாத்விகச் சுபாவத்தையும், உனக்கு வாய்த்துள்ள மனைவியின் நற்குணம் பற்றியும், உனது குடும்ப ஸ்திதியைப் பற்றியும் விவரமா யறிந்துகொண்டேன். என் குழந்தாய்! என் இரத்தமானது உன் சரீரத்தில் ஓடிக்கொண்டிருக்கும்பொழுது உனது கஷ்ட நிலையைக்கேட்டு என் மனம் எவ்வாறு சகிக்கும் என்பதை நீ யோசித்துப்பார். என்னை யறியாது ஒருவித வாஞ்சை உன்விஷயத்தி லுண்டாவதை நான் என்னென்றுரைப்பேன். இக்கடிதங் கண்டதும் உன் மனைவி மக்களுடன் இவிடம் புறப்பட்டு வரக்கோருகிறேன். கப்பற் செலவிற்கும் வழிச்செலவிற்குமாக இத்துடன் ஐந்நூறு வெள்ளி யனுப்பியிருக்கிறேன். நான் இந்தியாவிற் பிறந்தவனாயினும் இந்த ஐக்கியமலாய் நாடு எனக்குற்ற ஜீவனத்தையளித்து என்னைப் பெருந்தனவானாகச் செய்த காரணம்பற்றி எனக்கு இந்நாட்டில் மெத்தப் பற்றுதலுண்டாய் விட்டது. பலவேறு ஜாதியினர் இவ்விடம் வசிக்கின்றனராயினும்அவர்களிடையே இன்றளவும் ஜாதிச் சண்டையென்ற கொடிய பேய் சிறிதும் தலை காட்டியதில்லை. இனியும் இவ்வாறே இங்குள்ளவர் ஒற்றுமையுடன் காலங் கழித்துச் சமத்துவம், சகோதரத்துவம் இவைகளை என் நிலைநாட்டுவதற்குரிய வழிகளைத் தேடுவதே எனது முக்கிய லக்ஷியமாக விருக்கிறது பற்றி இச்சமூக ஊழியத்திற்கு உன்னையும் ஈடுபடச் செய்ய விரும்புகிறேன். இங்குள்ளவர்களிற் பெரும் பாலார்கள் நம் இந்தியவாசிகளே; அவர்களிடையே ஏற்றவாறு தாய் மொழியைப் பரவச் செய்தல் முதற் கடமையாயிருக்கிறது. இதற்கென ஐந்துலக்ஷம் வெள்ளியை மூலதனமேற்படுத்தியுள்ளேன். இங்கு வசிக்கின்ற பூலோகக் குபேரர்களெனப்படும் தனவைசிய சகோதரர்களும் இம்முயற்சியிற் பேரன்பு கொண்டு தாங்களும் இப்பெருங் காரியத்தில் தக்க சிரத்தை யெடுத்துப் பொருளுதவி செய்து என்னுடன் ஒத்துழைப்பதாக வாக்களித்திருக்கின்றார்கள். தமிழ்க் கல்விச்சாலைகளை ஆங்காங்கு ஸ்தாபித்து நன்கு நடைபெறச் செய்வதால் கூடிய சீக்கிரம் நந்தாய்மொழி அபிவிருத்தியடைந்துவிடவும், அதனால் நாம் நமது முன்னோர்களின் உயர்ந்த தத்துவத்தை யுணர்ந்து அவர்களின் பெருக்கும் புகழுக்கும் சிறிதளவும் மாசின்றி நடக்க ஏதுவுண்டென்பது எனது நம்பிக்கை. சமூக விஷயத்தில் சிரத்தை யெடுத்த நான் என் மகனாகிய உனக்கு ஆதரவு காட்டவும் கடமைப்பட்டுள்ளவனானது பற்றி உன் பெயருக்கு லக்ஷம் வெள்ளியும் என் குடியிருப்பு வீடு தோட்டந் துறவுகளையும் எழுதி வைத்திருக்கிறேன். எனக்கு ஒரு வாரமாக தேக சுகந் தவறி யிருப்பதால் நீ இவ்விடம் வந்துசேருமளவும் என் உயிர் நிலைத்திருந்து உன் முகத்தைக் காணும் பாக்கியம் பெறவேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்தித்த வண்ணமிருக்கிறேன்.

'உன்வரவை மறு கப்பலில்
எதிர் பார்த்திருக்கும் உன் பெரிய தந்தை,
வேணுகோபாலன்'

என்று அக்கடிதத்தில் வரையப்பட்டிருந்தது. இதைக்காட்டிலும் நற்காலம் அக்குடும்பத்திற்கு வேறென்ன வேண்டும்? பொறுமை புமி யாளுமன்றோ!

சுபம்.

சம்சார சந்நியாசியின் விசாரம்.

By Zero.

(362-ம் பக்கத் தொடர்ச்சி.).

சகோதர யுத்தம்.

மாமியார் சுவர்க்க வாசியானாள். புக்ககவாசம் சந்தோஷத்தையுஞ் சுகத்தையுஞ் கொடுத்தது. ஆனால் புதிய இராஜ்ய பாரத்தில் மூத்த மருமகளது அதிகாரம் ஆரம்பம். நாத்தனார்களது வாயெல்லாம் மூடப்படுகின்றது. எப்பொழுதுஞ் சண்டையிட்டுக் கொண்டிருந்த நாத்தனார் இருக்கிற விடந் தெரியாதிருக்கின்றனள். மாமியார் இறந்த பிறகும் சுகமுண்டோ? இல்லை. மாமியார் உயிருடனிருக்கும் பொழுது, மருமகளெல்லாம் சகோதரிகளைப்போல் ஒன்று சேர்ந்திருந்தார்கள்; மூத்த மருமகளுக்கு இராஜ்யபாரம் வந்தவுடன், ஒருவரிடமொருவர் கொண்டிருந்த பிரீதி யெல்லாம் பறந்து விடுகின்றது. தனது கணவன் சிறுவனாயிருப்பதாலும், வித்தியாப்பியாசம் முடிந்து வயிற்றை வளர்க்க ஒரு வேலையைச் சம்பாதிக்குந் திறமை வரும்வரை, மூத்த மருமகள் சொல்லும் வார்த்தைகளைச் சாந்தமுடன் சிறிய மருமகள் சகித்துக்கொண்டிருக்கவேண்டி யிருக்கிறது. மாமனாரின் தயவைக்காட்டிலும், மைத்துனரது தயவே மேலெனக்கருதுகின்றனள். மூத்த மருமகளது கணக்கில்லாததும் யாருக்கு மடங்

காததுமான குழந்தைகளை அழாமற் பார்த்துக்கொண்டு 'அவைகளைத் தூக்கிச் சுமக்க வேண்டியிருக்கிறது. அடிக்கடிப் பிரதிபலனாக அகப்படும் அவமானத்தைச் சகித்து அடங்கியிருக்கவேண்டியிருக்கிறது.

குழந்தை அழத் தொடங்கினால், "எப்பொழுது பார்த்தாலுமா அழவிட்டுக் கொண்டேயிருக்கவேண்டும்?" என்கிறாள். பாவம், இவள் தன் குழந்தையுடன் குதூகலமாய்க் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தால், 'வேலை எதற்குச் செய்யவேண்டும்? உட்கார்ந்திருந்த விடத்தை விட்டெழுந்திராமல் குழந்தையை வைத்துக்கொண்டு கொஞ்சுவதற்கே பொழுது சரியாயிருக்கிறது. பின்னால் சம்பாதித்து எங்களையல்லவோ காப்பாற்றப் போகிறது? முதலில் தங்கள் வயிற்றை நிரப்பப் புத்தி வந்தபிறகல்லவோ, பிள்ளையைப்பெற நினைக்கவேண்டும். சம்பாதிப்பது ஒருவன். தின்பதோ வேறு! வெட்கமுமில்லையே! படித்துப் பியாஸ் செய்து தங்கத்தாலேயே எங்களுக்குத் தான் பண்ணிப் போடப்போகிறான்,' என்றிவ்விதமாய் மூத்த மருமகள் அடிக்கடி சொன்னால், பாவம், சிறிய மருமகளது மனம் என்ன பாடுபடும்! அனலிற் காட்டிய மெழுகு போலுருகுவாள். பதிதான் என்ன செய்யக்கூடும்? தனது படிப்புப் பூர்த்தியாகும்வரை இவைகளைக் கவனியாமலிருக்க வேண்டியிருக்கிறது.' தனது மதனியின் வார்த்தைகள் மனதைப் பிளந்த போதிலும், அவைகளை அலக்ஷியஞ் செய்யாமல், தன் தருண பத்தினியை நோக்கித் துக்கத்திலாழ்கிறான். தமயன் தன்னை ஒருபோதும் நிராகரிக்கமாட்டானென நினைத்து, சமாதானப்படுத்திக் கொள்ளுகிறான். இதுவும் வாஸ்தவமே! என்னதானிருந்தாலும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளல்லவா? ஆனால் அத்தமயனோ, மதனியின் தலையணை மந்திரோபதேசத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறான். அவன் தானென்ன செய்வான்!

மதனி என்னும் நாகமானது எப்பொழுதும் தமயனாது காதைக்கடித்துக்கடித்து விஷத்தை ஏற்றிக்கொண்டே யிருக்கிறது. கங்கா ஜலத்தைப்போல் நிர்மலமான மனதில் விஷத்தைக் கக்கிக்கொண்டே யிருக்கிறது. சரி; அவ்வளவுதான்! சகோதரப்போரும் ஆரம்பமாகின்றது. தமயனது அந்தக்காரணமான களத்தில், சகோதரப்போர் என்னும் விதையை நாட்டியாய் விட்டது. தன்னுடன் பிறந்த தம்பி அபலானாகி விடுகின்றனன். 'நானொருவன் சம்பாதித்துத் தம்பிகளின் படிப்பிற்கேன் செலவழிக்க வேண்டும்?' எனத் தமயனாது மனதில் தோன்றுகிறது. பூர்வீக ஆஸ்தி ஏதாயினுமிருந்தால், அது வேறு மாதிரி. ஜனங்கள் ஏதாவது சொல்லுவார்களே யென்ற பயத்தாற் பேசாமலிருக்கிறான். 'அவளிப்படி இருக்கிறாள். அப்படியிருக்கிறாள். வேலையொன்றுஞ் செய்கிறதில்லை. நான் கோபங்கொண்டு ஏதாவது சொன்னால் ஊரிலுள்ளோர் என்னையல்லவோ ஏசுவார்கள். மைத்துனருக்கு என்ன, வயதாகவில்லையோ? படிப்பு ஆயுள்வரை தானிருக்கும். சம்சாரத்தை எப்பொழுதுதான் கவனிக்க ஆரம்பிக்கிறது?' என்று தமயனாரின் அர்த்தாங்கி காதில் ஓதியவண்ணமிருக்கிறாள். தமயனார் ஏதாயினுமொரு வேளை சமாதானஞ் சொல்லிவிட்டால், 'மைத்துனர் எப்பொழுது பார்த்தாலும் வைதுகொண்டே யிருக்கிறார்' என்று தன் யஜமானனிடம் கண்ணீரை வருவித்துப் பகன்று விடுவாள். பிறகு கேட்பானேன்! சகோதரப்போருக்கு எவ்வளவு நேரஞ் செல்லும்?

கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் தம்பி ஒரு வேலையைச் சம்பாதிக்க ஆரம்பிக்கிறான். அப்பொழுதாவது எல்லோருஞ் சேர்ந்திருக்கிறார்களா? இல்லை. ஒவ்வொருவரும் அவனவனது சாமான்களைப் பிரத்தியேகமாக வைத்துக்கொள்ளுகிறார்கள். வீட்டுச் செலவுக்கு வேண்டிய

பணம் மட்டுங் கொடுத்தாற் போதுமென நினைக்கிறார்கள். சகோதர பாவத்தை மறந்துவிடுகிறார்கள். பணமே பிரதானமாகப் படுகின்றது. வீட்டிலோ புத்து புத்தாய்ச் சண்டை ஆரம்பமாகின்றது. கடைசியில் பாகமாக, சகோதரர்கள் பிரிந்து வசிக்கிறார்கள். ஒவ்வொன்றையும் பாதி பாதியாய்ப் பங்கிடவேண்டியிருக்கிறது. கடைசியாக ஒரு முழ நிலத்திற்குக் கோர்ட்டுக்குப்போய் நிற்க நிச்சயிக்கின்றார்கள். ஒரு வயிற்றிற் பிறந்த சகோதரர்களது ஸ்திதியே இப்படியிருக்கும் பொழுது தந்தையின் இரண்டாவது மனைவியின் பிள்ளைகளுடைய கதி எவ்வாறிருக்குமெனச் சொல்ல வேண்டியதில்லை.

இந்த சகோதரப்போர் எங்கு மிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலுமிருக்கிறது. இப்பொழுது பாருங்கள், அல்லது தேச சரித்திரத்தைப் பாருங்கள்! அப்பொழுதும் சகோதரப்போர் இருந்திருக்கிறது. வியாபாரம் செய்தாலும் அங்கே நமது சகோதரிகள் வந்து குறுக்கே நிற்கிறார்கள். கடைக்காரனானாலும் அங்கேயும் சகோதரப்போர்! சகோதரப்போரே எங்குஞ் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சகோதரர்களுக்குள் இவ்விதமாகச் சண்டை யிருந்தால், இவர்களெவ்விதம் தேசத்தை ஒன்றுபடுத்தப் போகிறார்கள்? ஸ்திரீகளது மத்ஸர சுவபாவத்திற்குட்பட்டு விழியாதிருங்கள்! யோக்கியமாயும் நியாயமாயுமிருந்தால், அதன்படி கேட்டு நடப்பது உங்களது கடமை. மனைவி பிசகைச் செய்யுங்கால், அவளுக்குப் புத்தி புகட்டி அவளை நல்வழிக்குக் கொண்டு வருங்கால், மத்ஸராக்கினி ஒருபோதுங் கொழுந்துவிட்டெரியாது.

சகோதரப்போரால் ஒருவரை யொருவர் விசாரிப்பதில்லை. சகோதரர்கள் ஒருவருடனொருவர் பகைமை பாராட்டுவதால் இவர்களுக்குப் பிறகுங் குழந்தைகளும் இதைக் கற்று இம்மாதிரியாகவே நடக்கின்றார்கள். நமது குழந்தைகளுக்கு நாம் நல்ல வழியைப் போதியாதிருப்பது அநியாயமல்லவா? இரண்டு பூனைகள் சண்டை யிட்டுக்கொள்ள, நடுவில் வந்த குரங்கல்லவோ நன்மையையடைந்தது! இரண்டு பக்கத்திலும் பேசிவரும் ஜனங்களின் பேச்சைக் காதிற் போட்டுக் கொள்ளவேண்டாம். பிரிய சகோதர சகோதரிகளே! உங்களது மனதிற்கொண்டுள்ள பகைமையை மறந்து பிரேமையுடன் வாழ ஏற்பாடு செய்யுங்கள்!

சகோதரப்போரென்னும் அக்கினியின் ஜ்வாலையைத் தடுக்கவழி தேடுங்கள். இந்த அக்கினி வீட்டிற் பிடித்துக் கொண்டால், வீடு முழுவதையும் எரிக்காமல் விடாது. இதுவே பிரேமையைத் தூரவிலக்கி, மத்ஸராக்கினியுடன் கலந்து அதிகரிக்கின்றது. பிரிய சகோதர சகோதரிகாள்! இந்த ஆலகால விஷத்தைத் தீண்டாதேயுங்கள்! சுயநல மென்னும் பயங்கர ஆசைக்குட்பட்டு, உங்கள் கழுத்திற்கே சத்தியை வருவித்துக்கொள்ள வேண்டாம். ஈச்வரன் மானிட ஜன்மத்தைக் கொடுத்திருப்பதால் அது சார்த்தகமாகும்படியான காரியத்தைச் செய்யுங்கள். ஸ்திரீகளது கல்விப் பயிற்சியை அபிவிருத்தி செய்து, சகோதரப் போரின் விதையைக் காலால் நசுக்கிவிடுங்கள். உங்களது நற்காரியத்தாலும் உங்களது உதாரணத்தாலும் பிறருக்கு நல்வழியிற் போதித்து, உங்கள் மனதை, உங்கள் குடும்பத்தை, உங்கள் ஜாதியை, உங்கள் தர்மத்தை, கடைசியாக உங்களது தேசத்தை, உன்னத பதவிக்குக் கொண்டு வாருங்கள்!

சுபம்,

பகவத்கீதையிலுள்ள சில போத வசனங்கள்.

(ஸ்ரீமதி P. மங்களா பாயி.)

(263-ம் பக்கத் தொடர்ச்சி.)

எப்பொழுது பிதா நமக்கு ஜன்மத்தை கொடுத்திருக்கின்றனரோ, அப்பொழுது இத்தேகத்தின்மீது அவருக்குப் பூரண பாத்தியம் உண்டு. பிதுர் காரியத்தின் பொருட்டு உபயோகப்படும் சந்தர்ப்பம் நேரிட்டபொழுது பின்வாங்குதல் கேவலம் நன்றியின்மையாகும்.

இந்தப் புவியில் போக வஸ்துக்களாகிய பொன், பெண் இவைகளை அனுபவிப்பதில் ஆழ்ந்திருக்கும் மனிதனுடைய மனம் (மனது) ஒருபொழுதும் திருப்தி அடைவதில்லை. அதற்கு மாறாக, தீயில் நெய்யைவிட்டால் அத் தீ அணையாமல் முன்னிலும் அதிகமாகப் பற்றி எரிவதுபோல், விஷய வாசனையானது (சிற்றின்ப இச்சையானது) விஷயங்களை அனுபவிப்பதனால் குறையாவண்ணம் அதிகரிக்கின்றது. அப்பொழுது இன்னும் அதிகமாக விஷயத்தை அனுபவித்தபோதிலும் அவன் மனது திருப்தி அடையப்போவதில்லை. இதை நீ உறுதியாக நம்பு. இப்பொழுது மனது திருப்தி அடைய ஒரு உபாயமிருக்கிறது. அதை நான் உனக்குச் சொல்லுகிறேன் கேள். எப்பொழுது மனிதன் சகல வஸ்துக்களிடத்தும் சம திருஷ்டி வைக்கிறானோ, இந்த வஸ்து நல்லது இந்த வஸ்து கெட்டது என்று முற்றிலும் மனதில் நினைக்காமலிருக்கிறானோ அப்பொழுதுதான் அவனுக்கு நிரந்தரமான சுகம் கிடைக்கிறது. காரணம் யாதெனில், அவனுக்கு இஷ்டமில்லாத காரியம் நடந்தபொழுது மனதிற்குத் துக்கமுண்டாகிறது; ஆனால் மனது சம திருஷ்டி அடைந்திருந்தால் பிறகு அவனுக்கு ஒன்றுமே பிரதிகூலமாகத் தோன்றுவதில்லை; அப்படியானால் அவனுக்கு எப்படி துக்கம் உண்டாகும்? ஆகையால் சுகத்தை இச்சிக்கும் மனிதன் சிற்றின்ப இச்சையை முற்றிலும் விலக்கிவிடவேண்டும். ஏனென்றால் இந்த இச்சையைத் திருப்தி செய்யச் செய்ய மனிதன் விருத்தனானாலுங்கூட இச்சை திருப்தியடைவதில்லை. ஆயுள்மாத்திரம் முடிந்துவிடுகிறது. கடைசியில் இச்சை திருப்தியாகாததனால் மனிதனுடைய மனம் அப்படியே துக்கத்துடன் நிற்கிறது. ஆதலால் விசார சீலனான மனிதன் இந்த வாசனையை (இச்சையை) முற்றிலும் தியாகம் செய்யவேண்டும்.

அப்பா, இந்த சம்சாரத்தில் விழுந்த பிராணிகள் தமது பிராணன், தமது தனம், தமது புத்தி, தமது வாக்கு இவைகளைப் பிறருடைய நன்மைக்காக உபயோகப்படுத்துவதே தமது கடமை என்று கருதவேண்டும்.

மரத்தில் இருக்கும் தீ எப்படி ஒன்றுக்கொன்று உறைந்துக்கொண்டாலன்றிக் காணப்படுவதில்லையோ, அப்படி ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவானவர் திடபக்தியின்றி அனுபவத்திற்கு வருவதில்லை.

தேவர்கள், க்ஷேத்திரங்கள் இவைகளால் சுத்தியடைவதற்கு அதிகாலம் செல்லுவது போல், சற்புருஷர்களுடைய தரிசனம் ஆன உடனே சுத்தி ஆயிற்றென்றே நினைக்கவேண்டும்.

எந்த அரசன் தன் மனம் போன போக்கில் போய், வாசனைகளையுடையவனாயிருக்கிறானோ அவனுடைய பிரஜைகள் வறுமையும், துன்பமும் அனுபவிக்க வேண்டியதாகின்றது.

யோகீசுவரர் சமஸ்திமிராஜாவுக்குச் சொல்லுகிறார்:—'அரசனே, ஸ்திரீ சம்போகம், மாமிச பக்ஷணம், மதுபானம் முதலிய விஷயங்களை இயற்கையாகவே பிராணிகளின் மனம் நாடுகிறது; இவைகளைச் செய்யுங்கள் என்று யாருக்கும் சொல்லவேண்டிய அவசியமே இல்லை; சொல்லவேண்டியதாயிருப்பதெல்லாம் இவ்விஷயங்களினின்றும் விலகுவதன் பொருட்டுத் தான். இதற்காக விவாகம், யஞ்ஞயாகம் முதலிய சட்டங்களை ஏற்படுத்தி, ஸ்திரீ சம்போகம், மாமிசபக்ஷணம், மதுபானம் முதலிய விஷயங்களுக்கு வேதங்களே நியமங்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. இதை நன்றாக கவனத்தில் வைத்துக்கொள். ருது காலத்தில் ஸ்திரீ சம்போகம் செய்யவேண்டும்; ஹவனம் (ஓமம்) செய்து மீதியிருக்கும் மாமிசத்தைப் பக்ஷிக்கவேண்டும்; இதுபோன்ற ஆக்ஞைகளின் ஹேது, மனிதனுடைய அடங்கா மனோவிருத்தியை முக்கியமாய்த் தடுக்கவேண்டுமென்பது தான் என்பது வெளியாகிறது. ஸ்திரீ சம்போகம் கேவலம் புத்திரப் பிராப்திக்காகத்தான் செய்யவேண்டும் என்னும் வேதோக்தமான வாக்கியத்தைப் பார்த்தால் கேவலம் இந்திரியங்களை (புலன்களை) திருப்தி செய்வதுதான் அதன் ஹேதுவென்று தோன்றவில்லை. சுருதி ப்ரணீதமான இத்தகைய வாக்கியங்களின் ஆசயம் (கருத்து) முதலில் கொஞ்சமும், பிறகு கடைசியில் முற்றிலும் விஷய நிவர்த்தியாக வேண்டுமென்பதுதான் என்பது வெளிப்படையாக விருக்கிறது. அரசனே, பொருள் சம்பந்தத்திலும் இப்படித்தான் இருக்கிறது. மைதுனம், மாமிசபக்ஷணம், மதுபானம் இவைகள் சுலபமாகவேண்டுமென்பது தனத்தின் ஹேதுவன்று; தனத்தின் ஹேது தர்மத்தைச் சம்பாதிக்கவேண்டுமென்பதுதான். தனத்தினால் சாஸ்திரங்களின் ஞானத்தை அடையவேண்டும். பிறகு அதன் மூலமாய்ப் பரமாத்மாவின் பிரத்யக்ஷ ஞானமாய்க் கடைசியில் பிரம்ம சாக்ஷாத்காரம் ஆகவேண்டும். எவர் திரவியத்தைக் கேவலம் தேக சுகத்திற்காகவே உபயோகிக்கின்றனரோ அவர் தூர திருஷ்டியுடன் தீர ஆலோசியாமல் தனத்தை வீண் செலவு செய்கிறாரென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது; காரணம் யாதெனில், தேகாதிகள் கடைசியில் நிச்சயமாய் மிருத்யுவின் ஸ்வாதீனமாகப்போகின்றன. ஆதலால் அவற்றின் திருப்தியின்பொருட்டு செலவழித்த பொருள் வீண்தான் என்பதில் ஐயமில்லை. அரசனே, யஞ்ஞத்தில் தேவதைகளின் திருப்தியின்பொருட்டு பசுக்களின் ஹவனம் செய்யவேண்டும். மதுவை சும்மா முகர்ந்து பார்க்கவேண்டுமேயன்றிக் குடிக்கலாகாது. பிரஜையின் உற்பத்திக்காக மாத்திரம் மைதுனம் செய்யவேண்டும். இந்த நியமங்களின் ஹேது இப்பொழுது உன் மனதிற்கு நன்கு விளங்கி யிருக்கும். இவ்வெல்லாவற்றின் ஹேது, மனிதனின் மனம் போன போக்கெல்லாம் போகும் விருத்தியை (தன்மையை) மிதமிஞ்சாமல் கட்டுக்கடங்கி இருக்க வேண்டுமென்பதேதான்.'

விசார சம்பன்னனான மனிதன் சகலப் பிராணிகளிடத்தும் பேதபாவமின்றி, பரோபகாரம் செய்வதில் கண்ணுங் கருத்துமாக விருக்கவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார்:— உத்தவா, பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் இந்நான்கு வர்ணத்துப் புருஷர்களும், சண்டாளர்கள் முதலிய வர்ணத்திற்கு வெளியிலிருக்கும் புருஷர்களும் சில சாதாரணமான தர்மங்களை அவசியமாய்ப் பாலிக்கவேண்டும் அதாவது அஹிம்சை, மெய் பேசுதல், களவு செய்யாமை, ஷட்ரிபுக்களை அடக்கி ஆளுதல், பூத தயை, பிராணிமாத்திரத்தின் இதம் (ஹிதம்) செய்வதன் கண் ஆசை; இந்த தர்மங்

கள் சர்வ சாதாரணமாயிருக்கின்றன.. எவர் இந்த தர்மங்களை மீறி நடக்கின்றனரோ, அவர்களால் ஜீவியத்தின் சாபல்யம் ஒருபோதும் ஆகமாட்டாது.

குரு சேவையானது பிரம்மசரியர்களுடைய தர்மமமாகும்; யஞ்ஞ யாகம் முதலிய கிரியைகளும், சகலப் பிராணிகளின்பேரில் அன்பு பாராட்டுவதும் கிருகஸ்தர்களுடைய தர்மம்; தப்பச்சரியையும் பிரம்ம சிந்தனையும் வானப்பிரஸ்தர்களுடைய தர்மம்; சாந்தியும் அஹிம்ஸையும் சன்னியாசிகளுடைய தர்மமாகும்.

பிராணிமாத்திரத்தின்கண் அன்புடன் நடந்துகொள்வதுதான் தானமாகும்; சிற்றின்பத்தின்கண் வைராக்கியத்துடனிருப்பதுதான் தபஸ் ஆகும்; வாசனைகளை அடக்குவதுதான் சௌகரியமாகும்; பிரம்ம விசாரம்தான் சத்தியம்; சத்தியமாகவும், பிரியமாகவும் பேசுவதுதான் ஸன்மான்னியமாகும்.

மனமானது இயற்கையாகவே பெரும் சஞ்சலமுள்ளதாயிருக்கிறது. ஆதலால் விசாரசீலனான ஒவ்வொரு மனிதனும் அது ஒருபோதும் சிற்றின்பங்களின் வசமாகாதபடி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும், இது சாத்தியமாவதற்கு விவேக சம்பன்னனான மனிதன் சிற்றின்பத்தின்கண் மிக்க ஆசையுள்ளவர்களுடைய காற்றடிக்கும் இடத்திலுங் கூட நிற்கலாகாது. நீசர்களுடைய சகவாசத்தினால், குருடனுக்குப் பின் செல்லும் குருடனைப்போல், பயங்கரமான படுகுழியில் விழ வேண்டியதாகி, மிகவும் இருள் நிறைந்த நரகம் மாத்திரம் பிராப்தமாகிறது.

இந்திரியங்களும் மனதும் அடங்காமற் போவதற்கு, விஷயங்களைக் காணுதலும், அவைகளைப்பற்றிய சிரவணமுமே போதுமானது. பெரும்பெரும் பிரம்ம நிஷ்டர்களான புருஷர்களும் இந்த ஷட்ரிபு (ஆறுசத்துருக்கள்) விஷயத்தில் எப்பொழுதும் விழிப்புடனிருப்பார்கள்.

எந்த மனிதன் இந்த சராசர விசுவத்திலிருக்கும் சகல வஸ்துக்களிடத்திலும் சம திருஷ்டி வைக்கின்றனனோ அவன்தான் பண்டிதனாவான்.

சகல மனிதர்களும், அல்லது, சகலப் பிராணிகளும் ஈசுவர ஸ்வரூபமாயிருக்கின்றன என்னும் பாவனை வைத்தால், சமானமாயிருக்கப் பட்டவர்களைப்பற்றி ஏளனை, அருமை என்னும் மேன்மையா யிருக்கப்பட்டவர்களைப் பற்றிப் பொறுமை, திரஸ்காரம் என்னும் ஈனமாயிருப்பவர்களைப்பற்றித் துவேஷம், அகங்காரம் என்னும் தன்னைப்பற்றிய அபிமானம் இவ்வெல்லா தோஷங்களும் நஷ்டமடைகின்றன.

ஹே தேவாதிதேவா! என் பிரார்த்தனை இவ்வளவுதான். அதாவது, ஒவ்வொரு ஜன்மத்திலும் உன் சாணாரவிந்தத்தின்கண் எனக்கு திடமான பக்தி இருக்கவேண்டும். நாராயணா! உன்னுடைய நாமத்தினால் சகல பாபங்களும் அழிகின்றன. உன்னை ஆதாவுடன் நமஸ்கரித்தால் சகல துக்கங்களும் விலகுகின்றன. ஆகையால் உன் சாணாரவிந்தத்தின்கண் ஐக்கியமான இந்த அடிமையின்பேரில் அருள்செய்.

சுபம்:

இரத பந்தம்.

சிந்தாமணி வாழ்த்து.



ஓதுமனந் தீமையற ஒண்பொருள்சிந் தித்துளஞ்சூழ்
மாதுச்ரீ பாலம்மாள் வாழியவே—ஏது(ம்)
நந்தா வணியுடைத்தாய் நன்மனந்தேர்ந் தார்சூழ்ந்த
சிந்தா மணிவாழ் சிறந்து.

"ஸமாஸ குடீரம்," இலந்துறை. ஸ்ரீமான் கங்கா ஜடேச சர்மா.

தங்கம்.

ஒரு மாதகாலமாகக் கண்ணைத் திறக்காது பெய்து கொண்டிருந்த மழை அன்று மிகபலமாகப் பெய்தது. இம்மாதிரியான மழை ஒரு போதும் பெய்ததில்லை என்று எல்லாரும்நினைத்தனர். சிறுவர்கள் 'மானம் ஓட்டையாகி விட்டது' என்று கூவிக்கொண்டு குதித்தோடினர். வீட்டின் ஓட்டுக்கை போடப்பட்டிருந்த இடங்களிலிருந்து ஒழுகும் மழை ஜலமானது அதற்காகக் கீழே வைக்கப்பட்டிருந்த பாத்திரத்தில் 'லொட், லொட்' என்று சொட்டிக்கொண்டிருந்தது. நடுமுற்றத்தில் கூடுவாய் வழியாக அருவி போல் ஜலம் கொட்டிற்று. முற்றத்துக் கம்பிகளில் ஜலம் திரண்டு, ஸ்படிக மணிகள்போல் உதிர்ந்து கொண்டேயிருந்தன. அவ்விடத்தில் அந்த அழகைப் பார்த்து மனதில் வியந்து கொண்டு எஜமானி சீதாலக்ஷ்மி உட்கார்ந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். வேலைக்காரி தங்கம் கதவோரமாக வந்து நின்றாள். அவள் வந்த காரணம் தெரியுமாதலால் சீதாலக்ஷ்மி கவனிக்காதவள் போல் பேசாதிருந்தாள். சில நிமிஷங்களுக்குப்பின் தங்கம் தயவை எதிர் பார்க்கும் அசட்டுச் சிரிப்புடன் மெதுவாக "அம்மா! சாப்பாட்டுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு" என்றாள், "உன் வழக்கந்தானே அது! சம்பளம் வாங்கி நான்கு நாளாகு முன் உனக்கு முன் பணம் வேண்டுமே" என்றாள் சீதாலக்ஷ்மி. "சம்பளப் பணமெல்லாங் கடனுக்கு சரியாப்போச்சு. வீட்டுக்காரரு காயலாவாப் படுத்ததினாதானே கேக்கிறேன். பாழும் மழை வந்து கட்டடவேலையும் நடக்கலே. கொல்லத்துக்காருங்க ரொம்ப கஸ்டப்படுராங்க. என் புருஷன் காயலாவாயில்லாட்டி எப்படியோ பாத்துக்கவாங்க, பெரிய மனசுவச்சுக் கொடுங்கம்மா." என்று தங்கம் முறையிட்டாள். "போனமாத முன் பணத்தையே நான் பிடிக்கவில்லை. இன்னும் முன் பணம் வாங்கினால் எப்படி அதைக் கழிக்கப்போகிறாய்?" என்று சீதாலக்ஷ்மி கேட்டாள். "மாசம் ஒரு ரூபாயா பிடிச்சுக்கங்கம்மா. என் புருசனுக்கு இரவது நாளாக் காச்சல். குட்டிங்களுக்கு சீதபேதி. ஓரெடத்திலே வேலைக்கிருந்த என் பொண்ணுக்கு ஆறு நாளா காச்சலடிக்குது. இல்லாட்டி கேக்கமாட்டேன். பெரிய மனசு பண்ணுங்கம்மா" என்று தங்கம் மன்றாடினாள். "சரிதான் போ! இப்பொழுது எனக்கு வேறு காரியமிருக்கிறது; கொடுக்கமுடியாது. சூத்திரப் படைகளுக்கென்ன, அஞ்சாமற் பொய் சொல்லும். நமக்கோ கஷ்டமென்று கேட்டால் மனசு இளகுகிறது. எதுவாயிருந்தாலும் சரி, இப்பொழுது கொடுக்க முடியாது. இன்றைக்குப் பணத்தை வாங்கிகொண்டு நாளைக்கு வேலைக்கு வாராமல் நின்று விடுவாய்" என்று சீதாலக்ஷ்மி சிலவார்த்தைகளை தங்கத்தை நோக்கியும், சிலவற்றைத் தன்னிடமே கூறிக்கொண்டும்உள்ளே சென்றாள். மழையில் வேலை செய்ததினால் புடவை அநேகமாக நனைந்திருந்த தங்கம் நிராசையுடன் திரும்பிச் சென்றாள்.

கண்களில் நீருடன் செல்லும் வேலைக்காரியை சீதாலக்ஷ்மி பார்த்திருந்தால், மனமிளகி அவள் கேட்ட பணத்தைக் கொடுத்திருப்பாளோ என்னமோ. சீதாலக்ஷ்மி அவள் கூறிக்கொண்டவறு இளகிய மனமுடையவள்தான். அதனாலேயே அவள் அதற்குமுன் பலவேலைக்காரர்களுக்கு முன் பணம் கொடுத்துதவியதும், அவர்களிற் சிலர் அவளேமாத்தவாறு முன் பணம் வாங்கியதும், வேலையை விட்டு நின்று

போனதும். ஆனால் தங்கம் பொய் சொல்லவில்லை. அவள் சொல்லிய தனைத்தும் உண்மையே. அவள் நல்ல வேலைக்காரி. சற்று முன் கோபமுள்ள சீதாலக்ஷ்மியிடம் பலவேலைக்காரர்கள் நிலைக்காமல் மாறிக்கொண்டே யிருந்தனர். தங்கம் மட்டும்தான் முன்கோபத்தைத் தவிர மற்றப்படி நற்குணம் வாய்ந்த சீதாலக்ஷ்மியிடம் விசுவாசமாய்அவள் போக்கை யறிந்து நடப்பவள்.

வறுமையின் கொடுமையால் தங்கம் கேட்கும்படி நேரிட்டதும்,மிகஅற்பத்தொகை தான். அப்பணம் ஒரு பொருட்டன்றாயினும் சீதாலக்ஷ்மி அதற்கு மறுத்ததும் வியப்பன்று.அவள் தயவுடன்தானே போனமாத முன்பணத்தைப் பிடிக்கவில்லை! முன்பு வாங்கியதையும் கழிக்காமல் மேலே பின்னும் பணம் கேட்டால், ஏன்! நாம் தானாகட்டும், எளிதிற் கொடுத்து விடுவோமா?ஏழைகளின்கஷ்டத்தையறியாமையோ அதற்குக் காரணம்? அல்லது தாம் உதவுவதற்கு அவர்கள் தம்மிடம் நன்றி பாராட்ட வேண்டுமென்றும், நம்பிக்கையுள்ள ஊழியர்களாய் வேறிடம் செல்லாது தம்மிடமே அமர்ந்திருக்க வேண்டு மென்றும் கருதுவதுதான் காரணமோ?நாம்கொடுக்குமைந்தும் பத்துமான சம்பளத்தை நம்பியோ ஊழியர்கள் தங்கள் சரீரத்தை உழைக்கிறார்கள்? ஏதோ அவர்களது கஷ்ட சிக்குகாலங்களில் நாம் உதவுவோமென்ற ஆசை அவர்களுக்கிருந்தால் அது தவறன்றே? அதுவும் அவர்கள் தங்கள் ஊழியத்திற்கு ஊதியத்தைத் தவிர வெகுமதியை எதிர் பார்த்தால் தானே! ஒருவரிடமிருந்து பிரதி பலனையாவது, நன்றி பாராட்டுதலையாவது எதிர் பார்ப்பவரிடத்தில் என்ன தவறு இருக்கிறது? யார்தான் தாம் செய்ததற்குப் பிரதி பலனை விரும்பாதிருக்கிறார்கள்? ஏன்! கோயிலிற் சென்று பிரதிதினமும் தெய்வத்திற்கு வேண்டுதலும் வழிபாடும் செலுத்தி வரும் ஜனசமூகமானது, தத்தமக்கு சௌக்கியத்தையும் சந்தோஷத்தையுமன்றி வேறு எதை நாடுகிறது என்று கூறுங்கள்? குருவினிடம் மிக பயபக்தியாயிருக்கும் சிஷ்யன் தன் ஆத்மலாபத்தின் பொருட்டேயன்றி வேறு எதற்காக அவ்வாறு இருக்கிறான்?தான் சந்தோஷத்தை யடையவும், தன் கிருக கிருத்தியங்களை சரிவரப் பாதுகாக்கவும், நற்குல விருத்தியின் பொருட்டுமே யன்றோ கணவன் மனைவியிடம் அன்பு பாராட்டுகிறான்? தன் பதியின் அளவற்ற காதலை அடைவதற்காகத்தானே மனைவி பர்த்தாவின் இஷ்டப்படி ஒழுகுவதும்? ஊழியர்களது விசுவாசத்தையும் ஊழியத்தையும் பெறுவதற்காக எஜமானன் வேலைக்காரர்களிடம் தயையுடனிருக்கிறான், ஊழியர்கள் எஜமானனைப் பணிந்து நடப்பதும் தங்கள் லாபத்திற்கே யன்றோ? இதிலென்ன தவறு இருக்கிறது? உலகில் பெற்றோரையும் மகாத்மாக்களையும் தவிர, வேறு யார்தான் நன்றி பாராட்டுதலையும், பிரதி பலனையும் எதிர் பார்க்கவில்லை? அவ்வாறு அவற்றை எதிர் பார்ப்பவர் "இரந்தோர்க் கீவது உடையோர் கடனே" என்றதமது கடமையைச் செலுத்த இயலாது போவது வியப்பாகுமோ? இதில் சீதாலக்ஷ்மி ஒருவரும் செய்யா தவறைச் செய்துவிட வில்லை. தங்கம் வேறு யாரிடமாவது சென்று, தன் துயர்களைக் கூறியிராதால் அவர்கள் அவளை ஆயிரம் கேள்வி கேட்பார்களேயன்றி, அரைக்காசு கொடுத்தனுப்புவார்களோ? அதையும் நிரூபிப்பவள்போல் தங்கம் நாலைந்துவீடுபுகுந்து பலனற்று ஏக்கத்துடன் தன் குடிசைக்குத் திரும்பினாள்.

அங்கு ஈரம் பொசிந்து கொண்டிருந்த தரை மீது விரித்திருந்த ஒரு கிழிந்த பாயின் மேல் அவள் புருஷன் முருகன் படுத்திருந்தான். புதியதாக வேயப்படாத மேற்கூரையின் வழி

யாக மழை அவ்விடத்தை இன்னும் ஈரமுள்ளதாகச் செய்தது. ஜுரமென்று தங்கம் சொல்லிய அப்பெண் அடுப்பில் வைக்கப்பட்டிருந்த சட்டியிலிருந்த கூழை ஓர் அகப்பையால் துழாவிக்கொண்டிருந்தாள். இரண்டு குழந்தைகள் இடுப்பில் ஒரு கிழிந்த சவுக்கமும், மேலே ஒரு கிழிந்த சட்டையுமாகக் குவித்திருந்த கந்தைகளின் மீது சுருண்டு படுத்திருந்தன. இரண்டு வயதுள்ள ஒரு சிறுவன் மட்டும் உடம்பின் மீதொன்றுமில்லாது கட்டைமணைபோல் திரிந்துகொண்டிருந்தான். தங்கத்தைக் கண்டதும் அப்பையன் பசிக்கிறதென்று கூறினான். பணமில்லாததினால் தங்கம் அரிசி வாங்கவில்லை. அவள் எஜமானி வீட்டிலிருந்து கொண்டுவந்திருந்த பழயமுதை அக்குழந்தைக்குப்போட அவள் வருந்தினாள். சீதபேதியும் ஜுரமுமாயிருக்கையில் மழை கொட்டும் நாளில் அக்குழந்தைக்கு சில்லென்றிருக்கும் பழயமுது எவ்வாறு ஒத்துக்கொள்ளும்? பசியென்று கேட்கும் குழந்தைக்கு அன்னமிட வேறு விதியுமில்லை. தங்கத்தினிடம் அப்பெண் வந்து முருகனுக்குக் கஷாயம்வைத்து கொடுத்ததையும், ஜுரம் வழக்கத்தைவிட அதிகமாயிருப்பதாயும் கூறினாள். தங்கம் முருகன் நெற்றியில் கையை வைத்தாள். அவன் கண்களைத் திறந்து தாகமென்று கேட்டான். சட்டியில் காய்ந்துகொண்டிருந்த கஞ்சியில் சிறிது கொணர்ந்து தங்கம் அவன் வாயில் ஊற்றினாள். முருகன் கொஞ்சம் குடித்தான். பிறகு இறங்கவில்லை. தங்கத்தை வெறித்துப் பார்த்தான். "அம்மா! மாரடைக்குது. தலை நோவுது. காலைக் கொண்டு போகுது. டேயப்பா— என்னெ—ன்ன நோவுது. மூச்சுவிடக்கூடலே." தலையைப் பிரட்டினவாறு, கையையும் காலையும் மாறி மாறிப் போட்டுக்கொண்டு மூச்சு வாங்கி முருகன் இவ்விதமெல்லாம் அலட்டிக்கொண்டிருந்தான்: அவனது முகத்தையும், வார்த்தைகளையும் கவனித்த தங்கம் மிகப் பயந்தாள். காலைத் தொட்டுப் பார்க்க கால் சில்லென்று இருந்தது. ஓவென்றலறிக்கொண்டே தங்கம் கொட்டும் மழையில் வயித்தியர் வீட்டை நோக்கி ஓடினாள். அவ்வைத்தியன் அவள் முறையிடலுக்குச் செவிகொடுக்கவில்லை. "இதுக்கு முன்னாடி வந்ததுக்கே மூணு ரூபா கொடுக்கணும். அத்தைக் கொடுத்தா வரேன்" என்றான். "என்சேலையைக் கொதுவை வச்சாவது அதைத் தந்துடரேன். இப்போ வாங்க. மூச்சு முட்டுது, கை கால் சில்லிட்டிருக்கு. சாமி மனசு பண்ணுங்க. ஆயிரம் வாட்டி கும்புடரேன்' என்று தங்கம் கதறினாள். வைத்தியனும் கடைசியில் புறப்பட்டு வந்தான்.

முருகனுக்கு ஒருவர் வைத்தியமும் இனித் தேவையில்லை. அவனுக்கும் அது தெரியும். அவன் கண்கள் தங்கத்தின்மீதும் குழந்தைகள்மீதும் சென்றன. அவைகளில் பிரதிபலித்த துயரைப் பார்த்தவரே யறிவார். அவன் அதிகக் கவலைகொள்ளவில்லை. கற்றவரைப்போல் கவலைப்படவும் அவனுக்குத் தெரியாது. மரம் வைத்தவன் தண்ணீர் விடுவானென்றுதான் எண்ணினான். அவர்களை விட்டுப் பிரிந்து செல்வதற்கே அவன் வருந்தினான். எலியும் தன் வளையில் சுற்றத்துடன் வசிப்பதையே சுவர்க்கமெனக் கருதுவது. சக்ரவர்த்தியும் அரண்மனையில் தன் மனைவி மக்களுடன் வசிப்பதையே சுவர்க்கபோகமென நினைக்கிறான். முருகனும் தன் குடிலையும் மனைவி மக்களையும் பிரியவே வருத்தமுற்றான். அவன் நினைவு தெரிந்தது முதல் கைப்பாடுபட்டு, சரீரத்தையுழைத்துத் தன்வயிற்றையும், பிறகு மனைவிமக்களையும் ரட்சித்து வந்தான். பிறர் சேர்த்து வைத்ததை இஷ்டப்படி அனுபவித்து, அதன் அருமையும், கஷ்டமும் தெரி

யாது மமதை கொண்டுள்ள செல்வவந்தர்கள் முருகனைவிடக் கடவுளின் பார்வையில் மேம்பட்டவர்களாவார்களா?

முருகனது சுவாசம் வரவர அடங்கிற்று. கடைசியில் சில வார்த்தைகளை மெதுவாக முணுமுணுத்தான். "ஆறுமாசப் பிள்ளைத் தாச்சி, சமுசாரி; பாவம்! சாமி காப்பாத்தணும். தாகம்." தங்கம் சிறிது வென்னீரை அவன் வாயில் ஊற்றினாள். அத்துடன் அவன் சுவாசமடங்கிற்று. கால்மாட்டில் பெண்ணும், தலைமாட்டில் தங்கமும் ஓவென்றலறிக்கொண்டிருந்தனர். அக்குழந்தைகளும் ஒன்றும் புரியாது கத்திக்கொண்டிருந்தன. தெருவிலுள்ள எல்லா சூத்திரர்களும் அங்கு கூடி விட்டனர். ஒவ்வொரு விதத்தில் முருகனுக்கு உறவாகையால் இரைந்தழுது கொண்டிருந்தனர். மனைவி சகோதரி முதலிய நெருங்கிய சுற்றத்தார் முருகன் சரீரத்தின்மீது விழுந்து ஒப்பாரி வைத்தழுதனர்.

மழை அப்பொழுதும் பெய்துகொண்டுதானிருந்தது. யாரெப்படிப் போனால் அதற்கென்ன? அப்பகலின் தெளிவற்ற வெளிச்சத்தைப்போலவே அங்கு கூடியிருந்தவர் மனமும் குழம்பியிருந்தது. சீதாலக்ஷ்மிக்கு இது தெரியவந்ததும் அவள் மெய்யாகவே மிகவும் வருந்தினாள். அன்று அவள் தங்கத்திற்குப் பணம் கொடுத்திருந்தாலும் முருகன் பிழைத்திருக்கமாட்டானென்றாலும், கொடுக்காமற் போனதிற்காகத் தன்னை வெறுத்துக்கொண்டாள், உண்மைதான்; இன்னும்கொஞ்சம் முன்னதாகவே தங்கத்தின் கஷ்டங்களை விசாரித்து உதவியிருந்தால் ஒருக்கால் இவ்வாறு நேர்ந்திராதோ என்னமோ! ஆனால் நாம் அவ்வாறு செய்யாதிருத்தல் அதிசயமன்று; சகஜந்தானே.

வேலைக்காரர்களை ஆதரித்தல் குடும்பத் தலைவியின் கடமையாகும். சுபாவத்திலேயே இளகிய மனமுடைய ஸ்திரீகளே ஏழைகளைக் காப்பாற்றுவதில் சிரத்தையுள்ளவர்களாகவிருப்பார்கள்; ஆனால் அவர்கள் ஏழைகளுக்கு சமயோசிதமாய் உதவி செய்யாவிடில் ஏழைகள் கஷ்டம் நிவர்த்தியாகாது. எதையும் ஊன்றிப் பார்க்கும் தன்மை ஸ்திரீகளுக்கு அநேகமாகவிருப்பதில்லை என்று கூறுவார்கள். அவ்வசையைப் போக்கப் பெண்மக்கள் தகுந்த கவனம் எடுத்துக்கொண்டு எதையும் நன்றாய் விசாரணை செய்து அவ்வவற்றிற்குத் தகுந்த முயற்சியை மேற்கொண்டால் ஏழைகள் கஷ்டம் குறைவுபடும். ஸ்திரீகள் தங்கள் பெயர் வெளி வாராமலே நாட்டின் நன்மையைத் தேடுபவராவார். அத்தகைய அறிவும் அன்பும் பெண்மக்களுக்குப் பெருக வேண்டுமென்று கடவுளைப் ப்ரார்த்திப்போமாக.

குழந்தைகளின் அபாயம் நீக்க உபாயம்.

(யூனானி சித்த வைத்தியர் ஜநாப் ம. அ. ஷம்சுத்தீன் சாஹிப்.)

சிறு குழந்தைகள் எப்போதும் தம் கையை வாயில் வைத்துக்கொண்டேயிருப்பது பழக்கம். பின்னும் எவ்வகைச் சாமான் தம் கையில் கிடைத்தாலும் அதையும் தம் வாயில் வைத்துக்கொள்ளும். இவ்வகைப் பழக்கத்தால் அநேக குழந்தைகள் பல தடவையில் இரும்பு ஆணி தகரம், உடைந்த பீங்கான், கிளாஸ் துண்டு, நகைகள், இன்னும் இவைபோன்ற பல வஸ்துக்களை விழுங்கியும் இருக்கின்றன. இவ்விதம் விழுங்கப்பட்ட சில சில சாமான்கள் தானே மலத்துடன் வந்து விடுவதும் உண்டு. சிலது குடலில் சிக்கிக்கொண்டு அபாயத்தை ஏற்படுத்துவதும் உண்டு. ஒரு தடவை ஒரு வருஷத்திய குழந்தை ஒன்று புலாக்கு என்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
90375

றும் [illegible]யை விழுங்கி அது குடலில் சிக்கி இறந்தும் இருக்கிறது. [illegible] இப்படி எதையும் விழுங்கிவிட்ட பல குழந்தைகளுக்குப் பல தட்வை கீழ்க்கண்ட பக்குவம் செய்து எவ்வகை அபாயமுமின்றி விழுங்கின சாமான்கள் வெளியாக்கப்பட்டிருப்பதால், ஒவ்வொருவர்களும் இதைக் கவனித்து வைத்துக்கொண்டால் தக்க சமயத்தில் உபயோகப்படும். ஒரு குழந்தை ஏதாவது ஒரு சாமானை விழுங்கிவிட்டதாகத் தெரிந்தவுடன் அதிகமாய்ப் பழுத்துக்கனியாததும் அதிகம் காய் வெட்டாயில்லாததுமான ரஸ்தாளி வாழைப் பழத்தைத் துண்டு துண்டாக்கி விழுங்கக் கொடுக்கவேண்டும். அந்தப் பழத்தின் அளவு ஷை சாமான் பதிந்துகொள்ளக்கூடிய அளவுக்கதிகமாகவேயிருக்கவேண்டும். இப்படிக் கொடுத்து அது ஜீர்ணமாவதற்கு முன், சுமார் 10, 15 நிமிஷம் கழிந்தவுடன் 1, 2 தடவை பேதியாகும்படியான சாதாரண விளக்கெண்ணை அல்லது பேதி மாத்திரை கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுத்துவிட்டால் வயிற்றிற் போன வாழைப்பழம் குழந்தை விழுங்கிய சாமானைச் சுற்றிக்கொள்ளும். பேதியாகக்கூடிய பக்குவம் செய்திருப்பதனால் ஷை பழம் ஷை சாமானை நடுவே வைத்துக்கொண்டு குடலில் சிக்காமலும், குத்தாமலும், கிழிக்காமலும், ஒருவகை அபாயமுமின்றி வெளியாக்கிவிடும். எவ்வளவு சிறுகுழந்தையாயிருப்பினும், பெரிய குழந்தையாயிருப்பினும் மேற்கண்ட பக்குவம் பயமில்லாமற் செய்யலாம். ரஸ்தாளிப்பழம் கிடைக்காதவிடத்தில் வேறு வகை வாழைகளையும் உபயோகிக்கலாம். இதன்றி, தற்கொலை புரிந்துகொள்ள வயிரத்தைப் பொடித்தும் சாப்பிட்டு இறந்துவிடுகிறார்கள் என்ற வதந்தி உலாவுகின்றதே. அது உண்மையாயின், வயிறு நிறைய வாழைப் பழத்தைச் சாப்பிட்டு பிறகு பேதிக்கு 1, 2 தடவை ஆகும்படிச் செய்ய அதுவும் நீங்கி வெளியாகிவிடும். இப்படியே தற்கொலை செய்துகொள்ளத் துணிந்து பாஷாண வர்க்கத்தைச் சாப்பிடுகிறவர்களுக்கும் மேற்கண்ட பக்குவம் செய்ய அவ்விஷம் தேகத்தில் சுவராமல் வாழைப்பழத்துடன் சேர்ந்து வழுக்கிக்கொண்டு வெளியே வந்துவிடும்.

முக்கிய குறிப்பு:—

சிலர் சாப்பாட்டிற்குப் பின் வாழைப்பழம் சாப்பிட்டால் மலவிர்த்தி தாராளமாக ஆகிறதென்றும், பசி நன்றாய் எடுக்கிறதென்றும், நினைக்கிறார்கள். அது ஏன் என்று ஆராயும் பட்சத்தில் வாழைப்பழம் எவ்வகை சாமானையும் இரைப்பையில் நின்று ஜீரணிக்கக் கொடுக்காமல், வழுக்கிக்கொண்டு மலப்பைக்கு வந்துவிடும் சுபாவமுள்ளது. சாப்பிடும் ஆகாரத்தை இரைப்பையில் நிறுத்தி ஜீர்ணிக்க செய்யாமல் வழுக்கி மலப்பைக்கு ஓட்டி வருகிறபடியால், மேல் வயிறு காலியாயிருப்பதனால் பசிக்கிறதென்றும் ஜீர்ணிக்காத ஆகாரத்துடன் பழமும் சேர்ந்து மல விர்த்தி தாராளமாக ஆகிறதென்றும் அறியவேண்டும். நன்றாய்ப் பசியெடுத்ததும் ஆகாரம் ஜாஸ்தி சாப்பிடும் ஷை ஆகாரத்திற்குத் தகுந்த பலம் ஏன் இல்லையென்று கவனிக்கிறதில்லை. அது வாழைப்பழத்தின் கெடுதியே என்று ஞாபகத்தில் வையுங்கள். சாப்பாட்டிற்கு மேல் வாழைப்பழத்தைச் சாப்பிடாதீர்கள்.

SOME OPINIONS ON CHINTHAMANI.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simplicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras.*

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini.*

Some Select Opinions on "Chinthamani."

The Hindu under date 11-4-'25 writes:—

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI" a Tamil Monthly intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind. This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, idiomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co., Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Nagercoil, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

(ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா!

தமிழகந்தோறும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷ பிரியங்கொள்ளுகிறார்கள்.

(ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு நமது தாய் பாஷையை வாசிக்கவும் உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும் பான்மையாய் நம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ் நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளி நாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜன முள்ளதாகவுமிருக்கிறது.

கேஸரியின்

லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா'வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

கிரேட் ஈஸ்டர்ன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

(இங்கிலாந்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு ஸ்டிரெயிட் செட்டில்மெண்டில் இணைக்கப்பட்டது.)

55-வது வயது வரையில் எல்லா நபர்களையும் இன்ஷியூர் செய்யப்படுகிறது. ஸ்திரீகள்கூட இன்ஷியூர் செய்யப்படுகிறார்கள்.

எல்லா கேஸுகளிலும் பறிமுதல் செய்யப்படாதது தானாகவே ஆதாரவு கிடைக்கக்கூடியது. காலத்தில் ப்ரீமியம் கட்டாததற்காக பாலிஸிகள் காலாவதியாக விடப்படமாட்டா. ஆயுள்காலத்தில் அகஸ்மாத்தாகவோ அல்லது வியாதியினாலேயோ அசக்தர்களாகி விட்டால் அவர்களுக்கு பாக்கியுள்ள காலத்திற்கு ப்ரீமியங்கள் வாங்கப்படமாட்டா. எந்த தேதி ஏற்பட்டதோ அதுவரையிற் சேர்ந்துள்ள இன்ஷியூர் செய்யப்பட்ட தொகை கொடுக்கப்படும்.

தொழில், வசிக்குமிடம், அல்லது பிரயாணம் ஆகியவற்றில் பூரணசுதந்திரம். குழந்தைகளுக்கான எண்டௌமெண்டும், மற்றுமுள்ள பிளான்களும் உண்டு. மாகாணமெங்கும் சாமர்த்தியமான ஏஜெண்டுகள் தேவை.

பிரகடனப் பத்திரத்திற்கு எழுதவும்.

R. வேங்கடாசாரி,

சீப் ஏஜண்டு, "ரிதர்டன் ஹவுஸ்," வேப்பேரி, மதராஸ்.

(இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி, லிமிடெட்.)

தலைமையார் பீசு: பம்பாய்.

சேர்மன்:

ஸர் ஹார்மஸ்ஜி ஸி. டின்ஷா, Kt., M.V.O., O.B.E.

(இவர் ஏடனிலுள்ள கௌவாசி டின்ஷா அண்டு பிரதர்ஸ் கம்பெனியின் முதலாளியும், பம்பாயில் பிரபல வர்த்தகரும், மைசூரில் பிரபல இனாம்தாரும் லிலச்சுவாந்தாரும் ஆவார்.)

ஆலோசனைக் கமிட்டித் தலைவர்:

ஸர் டின்ஷா எடல்ஜி வாச்சா, Kt., J. P.

(இம்பீரியல் பாங்கு மத்தியசங்கத்தின் கவர்னர்.)

தொழிலபிவிருத்தி, ஒற்றுமை, உண்மை உழைப்பு, கல்வி, பொது நன்மை ... வகளைப் பிரசாரம் செய்து வரும் நல்லியக்கமெனப் பேர் பெற்ற பல தலைவர்களால் இந்த ஸ்தாபனம் புகழ்ப்பெற்றது. மிகப் பிரசித்திபெற்ற முதலாளிகளுக்குப் பிரதிநிதியாகவிருந்து சுதேசிய இயக்கத்தைப் பரவச் செய்வது. தென்னிந்தியா, பர்மா, ஸிலோன் முதலியவிடங்களி. முக்கிய நகரங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

மைசூர் சமஸ்தானத்தின் வியாபாரம், கைத்தொழில் இவைகளின் அபிவிருத்தியை உத்தேசித்து, சில பிரமுகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, மேற்படி கம்பெனியார் தங்கள் டைரெக்டர்களில் ஒருவரும், பம்பாயில் பிரபல தொழிலபிமானியுமாகிய A. B. கூடரெஜ், B. A., என்பவரை பெங்களூருக்கழைத்துள்ளார்கள். புதிதாக ஒரு கம்பெனியை ஸ்தாபித்துத் தற்போது மைசூர் கவர்மெண்டின் ஆதாவின்கீழ் இருக்கும் சில கைத்தொழிற்சாலைகளை விலைக்கு வாங்கவோ அல்லது அவைகளின் நிர்வாகவிஷயங்களை மேற்கண்ட கம்பெனியின் மூலமாகவே நடத்திவரவோ, தீவிர ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. மேற்சொல்லியிருக்கும் ஸ்தாபன விஷயத்தில் பல கைத்தொழில் நிபுணர்களும், பாங்கர்களும், பிரபல வியாபாரிகளும், செல்வாக்குடையவர்களும், இந்தியாவிலுமல்லாது ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களிலும்கூட ஊக்கமுடன் கலந்துகொண்டிருப்பதால் கூடியசீக்கிரம் மேற்சொன்னவிஷயம் ஒருவித முடிவிற்கு வரலாமென சகலராலும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவரம் வேண்டுவோர்

பி. வி. சுப்ப ராவ்,

கௌரவ மானேஜிங் டைரெக்டர்,

இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ் கம்பெனி லிமிடெட்,

பெங்களூர் ஸிடி.

தமிழ் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A., விலை அணா 10.

   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B, dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியாரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணா 10.

   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது, ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.

   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணா 12.

   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணா 12.

   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணா 8.

   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியரா ஆர். இரங்காசாரியார், MA., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணா. 10.

SRINIVASA VARADACHARI & CO., TRIPLICANE AND MOUNT ROAD, MAD